

# சின்னாச்சி மாமி

முல்லை பொன்.புத்திசிகாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னாச்சி மாமி

முல்லை பொன். புத்திசிகாமணி (ஜேர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாச்சி மாமி (சிறுகதைத்தொகுப்பு) / பொன். புத்திசிகாமணி/ முதற்பதிப்பு: ஆனி 2023/ © பொன்.புத்திசிகாமணி/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்/ பக்கம்:124/ விலை:500.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Sinnaachchi Mami (collection of short stories)/ Pon.Puthisigamany / First Edition: June 2023 /© Pon.Puthisigamany/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 124/ Price: 500.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN : 978-624-5881-97-0

ஜீவநதி வெளியீடு - 276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனதூர் மக்களுக்கும்,
என்மீது அன்பும் பாசமும் கொண்டோருக்கும்,
சமூகச் செயற்பாடுகளில்,
என்னோடு பயணித்து,
இன்று மண்ணில் இல்லாமல் போயிருக்கும்
நண்பர்கள் சொக்கன்,
குஞ்சன்,
தேவா,
யோகன்
ஆகியோர்க்கும்
இந்நூல் சமர்ப்பணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

எல்லாரும் மனிதர்களும் சமமானவர்களே, பிறப்பினால் மனிதர்கள் உயர்வடைவதில்லை. ஆனால் தங்களின் நல்ல பண்பு நிறைந்த நெறிமுறைகளினால் உயர்வடைகிறார்கள். அவ்வாறான நல்ல பண்புடன் கூடிய நெறிமுறைகளை வளர்ப்பதற்கு மனிதர்களுக்கு உதவுவது நல் இலக்கியங்களே.

"புத்தகங்கள் எமக்காகச் சிந்திக்கின்றன" எனும் சார்லஸ் லேம்பின் கூற்றுப்படி இலக்கியத்தின் அவசியத்தை உணர்ந்த அனைவருக்கும் ஊக்கமும், நல் உணர்வும் தரும் வழிகாட்டியாக இந்நூல் அமையப் போகின்றது. அந்த வகையில் எழுத்துலகின் பால் நெருங்கிய ஈடுபாடும் அதன் வளர்ச்சியில் நிறைந்த ஆர்வமும், அனுபவமும் கொண்ட மதிப்பிற்கும் பெருமைக்கும் உரித்துடையவராக திரு.முல்லை பொன் புத்திசிகாமணி அவர்கள் விளங்குகின்றார்.

இந்நூலாசிரியர் எமது வட்டுவாகல் கிராமத்தில் பிறந்த எனது நெருங்கிய உறவினர். இவர் ஆரம்பத்தில் ஒரு பத்திரிகை நிருபராகவும், பின்பு ஒரு எழுத்தாளனிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்றான "தேடல்" என்ற எண்ணக்கரு மூலம் பேச்சாளராக, சமூக சிந்தனையாளராக, ஓவியராக, கவிஞராக, கலைஞராக, நடிகராக, நாடக இயக்குனராக, பட்டிமன்ற நடுவராக, வானொலி எழுத்தாளராக, கட்டுரையாளராக பன்முக ஆளுமை கொண்ட ஒரு உன்னத விற்பன்னராக உருவெடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னாச்சி மாமி" எனும் நூலின் மூலம் இவரது சமுதாய அக்கறையும் சக மனிதர்கள் மீது அவர் கொண்ட அன்பையும் பிரதிபலிக்கச் செய்கின்றார். அத்துடன் வாசகர்களை சிந்திக்க வைத்துச் செயற்பட வைக்கின்றார்.

இவரது "சின்னாச்சி மாமி" என்ற சிறுகதை அவரது இளமைக் காலத்தில் அவரது மாமி அவருடனும் ஏனைய மனிதர்களுடனும் எவ்வாறு அன்பாகவும், பண்பாகவும், பரிவாகவும் நடந்து ஒரு மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்தார் என்பதையும் நாம் வாழ்க்கையை அளக்க வேண்டியது காலத்தால் அல்ல, நல்ல நெறிகளின் மூலமே என்பதை அழகாக மண் வாசனை மாறாமல் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இவரது இந்நூலிலுள்ள "தேரோடும் வீதி" எனும் சிறுகதையை தவிர ஏனைய அனைத்துச் சிறுகதைகளிலும் வரும் பாத்திரங்களும் பெரும்பாலும் நான் பார்த்துப் பழகியவர்களே. இதன் மூலம் இவரது எழுத்து எவ்வளவு உண்மைத் தன்மையானது என்பது கண்கூடு.

இவர் தனது சிறுகதைகள் மூலம் அறியாமை, சூழ்நிலை, தவிரக்க முடியாத தொடர்புகள் போன்ற காரணிகளால் வாழ்க்கை ஒரு மனிதனை எவ்வாறு திசைமாற்றுகின்றது என்பதை மிக உணர்வு பூர்வமாக எடுத்தியம்பியுள்ளார்.

"நல்லவராய் இல்லாத எவரும் சிறந்த மனிதர்கள் அல்ல" என்பதை இவரின் நூலின் ஊடாக சமூகத்திற்குக் கூறியிருப்பது பெரிதும் பாராட்டுக் குரியது.

ஆ.குணநேசன்

வட்டுவாகல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்தப் புத்தகம் எழுதுவதற்கு பல பேருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். முழுவதுமாக என்றால் இதுவே ஒரு புத்தகமாகும்.

இரண்டாயிரம் ஆண்டில் வெளிவந்த "சொர்ணம்மா" சிறுகதைத் தொகுப்பிற்குப் பின் இரண்டாயிரத்து இருபத்து மூன்றில் "சின்னாச்சி மாமி" சிறுகதைத் தொகுப்பு வெளி வருகிறது. இதற்கிடையில் நான் எழுதிக் குவித்ததில்லை. ஆனாலும் எழுதாமல் விட்டதும் இல்லை. கதை, கவிதை, கட்டுரையென்று நிறையவே எழுதி இருக்கிறேன். எழுதியும் வருகிறேன்.

முகநூல் எனக்கு நல்ல தளத்தைத் தருகிறது. உடனடியாகவே வாசகர்களின் உற்சாகமான விமர்சனமும் கிடைக்கிறது.

உங்கள் ஆக்கங்களை புத்தகவடிவில் கொண்டு வாருங்கள் என்று அன்று முதல் இன்றுவரை ஊக்கம் தருபவர்கள் வரிசையில் எழுத்தாளர் களான, திரு திருமதி ஜீவகுமாரன் தம்பதிகள் முக்கியமானவர்கள்.

நண்பர்களான, சீலன், றாசீக், பூபாலன், செல்வராசா, சகோதரி கௌசி, "வடக்கு வீதி" புகழ் குரு சதாசிவம். இராஜகருணா, அகஸ்டின், திரவியம், போன்ற இன்னும் பலர் முக்கியமானவர்கள். சந்திக்கின்ற வேளைகளில் எனக்குத் தட்டிக்கொடுத்தவர்கள். இது போன்று பலரைச் சொல்லலாம். அவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

"சொர்ணம்மா" சிறுகதைத் தொகுப்பை இரண்டாவது பதிப்பாக கொண்டுவரலாம் என்றே முதல் நினைத்தேன். புதிய தொகுப்பை வெளியிடுங்கள் என்று நண்பர்கள் கருத்துத் தெரிவித்தால். இது "சின்னாச்சி மாமி"யாக வெளிவருகிறது. இதில் இடம்பெற்ற "தேரோடும் வீதி" சிறுகதையைத்தவிர ஏனைய கதைகளில் வரும் கதைமாந்தர் அன்றாடம் நாம் பார்த்து பழகிய கதாமாந்தர்களே. பகைப்புலங்களும் நாம் அறிந்தவைகளே.

மூன்று கதைகள் ஜேர்மனியைத் தளமாகக்கொண்டவை. "தாய்மை ஒரு வரம்" "துணை இழத்தல்" "ஈர்ப்பு"என்பன.

"ஈர்ப்பு" ப்றேமன் கலை ஓசை நடாத்திய சிறுகதைப்போட்டியில் முதல் பரிசு பெற்றது. தாய்மை ஒரு வரம். வெற்றிமணி சஞ்சிகையில் வெளி வந்தது. "துணையிழத்தல்"அண்மையில் "ஜீவநதியில்" பிரசுரமாகியது.

பெரும்பாலான கதைகள் நீண்ட காலமாக என் நெஞ்சத்தில் குடி யிருந்து, அழவைத்து, சிரிக்க வைத்த கதாபாத்திரங்களின் நடமாட்டமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை இதமாக இறக்கி வைத்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். நீங்கள் படித்து மகிழ்ந்தால் மகிழ்ச்சியடைவேன். கருத்துக் கூறினாலும் ஏற்றுக்கொள்வேன். எல்லாச் சிறுகதைகளும் ஒருமித்து வாசகனை ஏற்றுக் கொள்ள வைப்பதில்லை. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சிறுகதை பிடிக்கும்.

எனது கடந்த காலத்தில் விடுபட்ட பாத்திரங்கள், சம்பவங்கள், பகைப்புலங்கள் இந்தப் புத்தகத்தில் ஓரளவு நிரப்பப் பட்டிருக்கின்றன. எங்கள் ஊரைச்சேர்ந்த "சங்குவக்கா" ஒரு கதையில் கதாநாயகி. நான் வாழ்ந்த காலத்தில் அவவை ஊன்றிக் கவனித்திருந்தேன். இரக்கமுள்ள கதாபாத்திரமன்று இல்லாமல், தன்மானமுள்ள கடின உழைப்பாளி.

"சண்டாளி சங்குவக்கா" என்ற பெயரில் "ஞானம்" சஞ்சிகையில் கவிதையாக வெளிவந்தது.

இதில் கதையாக வந்திருக்கிறது. நான் பிறந்த ஊரை முன்னிறுத்தி பல ஆக்கங்களை நான் எழுதியிருக்கிறேன். "சில கதைகள் சொர்ணம்மா" சிறுகதைத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. "சின்னாச்சி மாமி" எனது சொந்த மாமி, எங்களை மிகவும் கவர்ந்தவர். அவர் மீது கொண்ட அன்பே இந்தக்கதையும், புத்தகத் தலைப்புமாகும்.

இந்தத் தொகுப்பில் இடம்பெற்ற ஏனைய கதைகளும் உங்கள் இதயத்தைத் தொடும் என்று நம்புகிறேன்.

இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கியிருக்கும், எனது அன்பிற்குரிய வாசகன், மருமகன், அனைவரின் விருப்பத்திற்கும், மதிப்பிற்குமுரிய நல்லாசிரியர் விருது பெற்ற திரு ஆரியபிள்ளை குணநேசன் அவர்களுக்கும், புத்தக வடிவில் மிக விரைவாகத் தந்திருக்கும் இலங்கையின் புகழ்பெற்ற சஞ்சிகையான "ஜீவநதி" வெளியீட்டாருக்கும். குறிப்பாக உரிமையாளர், பிரதம ஆசிரியர் பரணீதரன் அவர்களுக்கும், எழுதுங்கள் என ஊக்கப்படுத்தி எழுத வைத்த எனது அன்பு மனைவி திருமதி ராதா புத்திசிகாமணி அவர்களுக்கும், நூல்வெளியீடு சிறப்புற நடைபெற வட்டுவாகல் பாடசாலை மண்டபத்தைத் தந்ததுடன் கலந்து கொண்டு சிறப்பித்த அதிபர் திரு அன்ரனி சுகிர்தன் அவர்களுக்கும், ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், மாணவர்களுக்கும், மேலாக கலந்து கொண்டு மகிழவைத்த எனதூர் மக்களுக்கும், விமர்சன உரை வழங்கியோர்க்கும், என்ன உதவியானாலும் தயங்காது கேளுங்கள் என்று என்னிடத்தில் வந்து கேட்டு உதவி வழங்கிய தம்பி அன்னலிங்கம் சண்முகலிங்கம் அவர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

அன்புடன் முல்லை பொன். புத்திசிகாமணி
வட்டுவாகல், முல்லைத்தீவு. ஜேர்மனி.
01.06.2023.

தொடர்பு : Pon.Puthisigamany
Mescheder Strabe 19
59846 sundern, Germany
Tel:029337493


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | வெளிவராத செய்தி | - 09 |
| 2. | தேரோடும் வீதி! | - 18 |
| 3. | பரவசங்கள் | - 31 |
| 4. | சின்னாச்சி மாமி | - 43 |
| 5. | ஈர்ப்பு | - 50 |
| 6. | பூமணி மாமி! | - 62 |
| 7. | சங்கு அக்கா | - 69 |
| 8. | துணை இழத்தல் | - 77 |
| 9. | தாய்மை ஒரு வரம் | - 84 |
| 10. | வேட்டையும் வேடிக்கையும் | - 90 |
| 11. | அம்மா உன்னை நினைத்து | - 96 |
| 12. | பிணவாடை | - 104 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவராத செய்தி!

அந்த வீட்டில் நாங்கள் மூன்று பேர்தான் நிரந்தரமாய் இருந்தோம்.

அடிக்கடி எமது நண்பர்களும் வருவார்கள். முல்லை மறுமலர்ச்சிக் கழகத்தின் நிர்வாகசபைப் பொதுக்கூட்டம் இங்கேதான் நடைபெறும்.

இந்த வீடு வண்ணாங்குளம் வீதியில் இருந்தது. வீதியின் வலது பக்கம் தொடர்ந்து முஸ்லீம் சமூகத்தவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் வீடுகள் தான் அதிகம். இவர்களுக்கு மத்தியில்தான் இந்த வீட்டில் நாங்கள் குடியிருந்தோம்.

அதிக வாடகை என்றில்லை.

இந்த வீடு செபமணி ஆட்களுக்குச் சொந்த மானது.

அவர்கள் மணற்குடியிருப்பில் வாழ்ந்தார்கள்.

நாங்கள் வீட்டைத் துப்பரவாக வைத்திருப்ப தில் கவனத்தைச் செலுத்தியிருந்தோம்.

முல்லை மறுமலர்ச்சிக்கழகத்தால் உயர்வகுப்பு களுக்காக மேலதிக வகுப்புகளையும் நடாத்தி வந்தோம். இது எங்கள் கழகத்தின் சேவையாகவே நடைபெற்றது.

நான் பத்திரிகை நிருபர் என்ற காரணத்தால் அமைதியான இந்த வீடு பொருத்தமானதாக இருந்தது.

இஸ்மெயில், கச்சேரியிலும், செல்வராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கத்திலும் வேலைசெய்தார்கள். அவர்கள் புறப்பட்ட பின் தான் நான் புறப்படுவேன்.

அன்றும் காலையில் குளித்து, உடையை மாற்றிக் கொண்டு செய்தி சேகரிக்கப் புறப்பட்டேன். முல்லைத்தீவு கடைவீதியில் எத்தனையோ தேனீர்க் கடைகள் இருந்தன. மக்கள் ஆதரவு பெற்ற கடை நியூ அம்பாள் கபே தான்.

இந்தக் கடை பிரதான பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் இருந்ததால் பிரயாணிகளின் வரவு பெரும்பாலும் இந்தக் கடையை ஒட்டித்தான் இருந்தது.

அது மாத்திரமன்றி இந்தக் கடை நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. தமிழரசுக் கட்சித் தொண்டர் இந்தக் கடைமுதலாளி திரு நாகேஸ் அவர்கள் இவர் யாழ்/புங்கிடுதீவைச் சேர்ந்தவர். தமிழ், தமிழ் என்று இந்தக்கட்சிகளுக்கு பெருமளவு உதவிசெய்பவர்.

குணா, வடிவேலு, நாதன் இவர்கள் கடையில் வேலை செய்பவர்கள். குணா, முதலாளி நாகேஸ் அவர்களின் மகன் பின்னாளில் குணாவே கடையை பொறுப்போடு நடாத்தி வந்தான்.

வேலை செய்தவர்கள் நட்போடு பழகுவதால் வாடிக்கை யாளர்கள் அதிகம் இந்தக்கடைக்கே வருவார்கள். சாப்பாடுகளும் நல்ல சுவைமிகுந்தவை.

இரவு பன்னிரண்டு மணிக்குப் பூட்டி, அதிகாலை ஐந்து மணிக்கே கடையைத் திறந்து விடுவார்கள். முதல் பஸ் போற நேரத்திற்கே சாப்பாடுகள் தயாராக இருக்கும், குழல் புட்டு, இடியப்பம், தோசை, சுடச்சுட வடை, சம்பல், கரையக்காய்ச்சிய உருளைக் கிழங்குக்குழம்பு, என்று அசத்தியிருக்கும், இந்தக்கடை.

செய்தி சேகரிப்புக்கு கச்சேரிக்குப் போவதற்கு முன் முதலில் “நியூ அம்பாள்” கபேக்கே எனது சைக்கிளும் போகும்.

வீரகேசரி, முதல்கொண்டு பத்திரிகைகள் இங்கே விற்பனை செய்யப்படும். எனது வீட்டிற்கு ஏற்கனவே பத்திரிகை வந்து விடும். பத்திரிகையில் எனது செய்தி என்னென்ன வந்திருக்கு என்பதைப் பார்த்துத்தான் அடுத்த வேலை.

நான் சாப்பிட்டுக் கொண்டு இருந்தபோது, நண்பர்களான யோகன், றாசீக், பூபாலன் ஆகியோர் வந்து விட்டார்கள்.

நான் இடியப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் சேர்ந்தால் பகிடியும் கலகலப்புமாக அந்த இடம் இருக்கும்.

பத்திரிகையில் வந்த எனது செய்தி பற்றியும் கதைப்போம். எல்லோருமே முல்லை மறுமலர்ச்சிக்கழக அங்கத்தவர்கள் தான். முல்லை மறுமலர்ச்சிக் கழகம் ஒரு சமூக அமைப்பு.

ஊரில் நலத்திட்டங்களை நண்பர்களைத் திரட்டி செய்து வருகிறது. நானே இதற்குச் செயலாளர். குஞ்சன் தலைவராக இருந்தான்.

அன்று அந்த நேரம் அவசரமாக நண்பன் சீலன் என்னைத் தேடி வந்தான்.

"ஓடு ஆஸ்ப்பத்திரிக்கு அங்கு போனால் நல்ல புதினம் அறிவாய்" என்றான்.

என்னடா என்று கேட்டேன். "அங்கு போனால் தான் உனக்கது ஆச்சரியமாக இருக்கும்" என்றான்.

சாப்பிட்டு முடிச்சவுடன், சைக்கிளை எடுத்துக்கொண்டு அவசரமாகப் புறப்பட்டேன். வைகாசி மாதம் கொளுத்தும் வெயிலுடன், சோளகக் காற்று சுழன்றடிச்சது.

வைத்தியசாலை இதிலிருந்து ஒரு மைல்தான். காற்றின் அகோரம் சைக்கிளை ஓடவே விடாது. மாங்கு, மாங்கென்று உழக்க வேணும்.

முல்லைத்தீவு, மாங்குளம் சந்தியில் இருந்து கொஞ்சத்தூரம் வெட்ட வெளிதான்.

இடதுபக்கம் சட்டத்தரணி செல்லமார்க்கண்டு அவர்களின் வயல். வலதுபக்கம் சின்னாறு தொடர்ச்சி. சாராயத்தவறணை, இரண்டு பக்கங்களிலும் பூவரச மரங்கள், அதற்கப்பால் வயல்வெளி, மீண்டும் இடதுபக்கம் சமத்தற்ற வயல். இந்த வயலின் ஒரு பக்க மூலையில் சட்டத்தரணி இராஜகுலேந்திரா அவர்களின் வீடு.

சின்னதாக ஒரு மேடு, அடிக்கின்ற சோளகத்தால் சைக்கிள் ஓடக் கொஞ்சம் கஸ்ரமாகவே இருந்தது.

இடதுபக்கம் கொண்டக்ரர் வீரகத்தியரின் சின்னக்கடை.

"அண்ணை வாங்கோ வந்து கொஞ்சத் தண்ணிகுடிச்சிற்றுப் போங்கோ" கெங்கன் தான் கூப்பிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட நேரமில்லைத் தம்பி. போயிற்றுத்திரும்பி வரேக்குள்ள வாறன் என்று பதில் சொல்லிவிட்டு நிற்காமலே தொடர்ந்தேன்.

எனக்கும் இறங்கித் தண்ணீர் குடிக்க விருப்பம் இருந்தது. மண்பானையில் நீர் நிறைத்து வைத்திருப்பார்கள். தண்ணீர் எப்போதும் ஜில்லென்றிருக்கும். பக்கத்தில் ஒரு மூக்குப்பேணி வைத்திருப்பார்கள்.

வெயிலுக்குள்ளால் நடந்து வரும் பாதசாரிகளுக்கு இளைப் பாறி நீர் அருந்திச் செல்வதற்கு பேருதவியாக இருந்தது. கெங்கன் நகைச்சுவை மன்னன் சிரிக்க வைப்பதில் பெருவிருப்பம் கொண்டவன். அவர்கள் குடும்பத்திற்கு இது இயல்பானது.

கொடுவெயிலின் தாக்கம் நிழலைக்கண்டதும் விலகும் என்பார்கள்.

இந்தக் கடையே அதற்கொரு உதாரணமாக இருந்தது.

சோளகக் காற்றின் எதிர்ப்புகளை மீறி அதிலிருந்து பதினைந்து நிமிடங்களில் வைத்தியசாலையை அடைந்தேன்.

எங்கட ஆஸ்ப்பத்திரி, இரும்புக் கதவுகள் பகல் முழுவதும் திறந்த படியேதான் இருக்கும்.

நோயாளர்கள் அடிக்கடி வருவதும், நோயாளர்களை பார்க்க வருபவர்களுமாக எந்த நேரமும் பிஸியாகவே இருக்கும்.

எல்லா வாட்டுகளுக்கும் நடுவில் பெரியதொரு சமளமரம் நின்றது.

இது தரும் நிழல் ஆஸ்ப்பத்திரி தரும் மருத்துவச் சேவைக்கு நிகரானது.

எத்தனைபேர் நிழலுக்காக ஒதுங்கிக் கொள்ளுவார்கள். அவசரமாக வருபவர்கள் சைக்கிளை படாரென்று சாத்திவிட்டு ஓடுவதும் இந்த மரத்தில் தான்.

நானும் இந்த மரத்தில் படாரென்று சைக்கிளைச் சாத்திவிட்டு இரண்டாம் வாட்டுக்கு அவசரமாக ஓடினேன்.

சீலன் அனுப்பி வைத்த செய்தி அந்த வாட்டில் தான் இருந்தது. படுக்கை அறைகளுக்கு முன்பாக நீண்ட அகலமான விறாந்தை. அதில் ஒவ்வொரு தூணாக ஒவ்வொரு பெண்கள் அழுது முனகிக் கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இது மகப்பேறு வாட்டுத்தான்.

ஒரு பெண்மட்டும் எதுவுமே நடக்காத மாதிரி விறைப்போடு நின்றாள்.

அந்த வாட்டின் தலைமை மருத்துவத்தாதி குஞ்சக்கா சற்றுக்கோபத்துடன் அந்தப் பெண்ணைச் சுற்றியே கேள்வியளால் துழைத்தெடுத்துக் கொண்டு நின்றா.

அவள் எதற்கும் அசைந்து கொடுக்காமல் விறைத்தபடியே நின்றாள்.

பெறுவுக்கென்று வருகிற பெண்கள் கெடிக்கலக்கம் தான். குஞ்சக்காவின் அதட்டல், உலுக்கி எடுத்து விடுவா. ஏன்ரா இஞ்ச வந்தம் என்பது போல் அமைதியாக இருந்து அழுது வடித்தார்கள். பிரசவ வேதனை ஒரு பக்கம். குஞ்சக்காவின் பேச்சு ஒரு பக்கம்.

பல தடவைகள் அங்கு போயிருக்கறேன். அதனால் குஞ்சக்காவை எனக்கு நன்கு தெரியும். பழகுவதற்கு இனிமையானவர். கடமைக்கு வந்தால் உக்கிர தாண்டவம் தான். “புருசனுக்குப் பக்கத்தில கிடந்து செல்லங் கொஞ்சேக்குள்ள இப்படி வருமென்று தெரியாதாக்கும். இஞ்ச வந்து எங்கட உசிர வாங்குதுகள்.”

இப்படிப் பச்சையாகக் கதைப்பா.

ஏனக்கா இப்படி இருக்கிறியள். பாவம் அதுகள். ஏற்கனவே வயித்து நோக்காடு அவதிப்படுகிற நேரத்தில நீங்கள் ஆதரவா ஒரு அம்மாவாகத் தடவிக்கொடுக்கலாம் தானே என்று ஒரு நாள் கேட்டேன்.

அண்ணன் அங்கு வேலை செய்கிற படியால் நெருக்கம் அதிகம் இருந்தது. அவ உரிமையோடு வாடா, போடா என்றும் கூப்பிடுவா.

“நீ என்னைப்பற்றி என்னடா நினைக்கிறாய். நானும் ஒரு தாய்தான் என்னை நம்பி இங்கு வருபவர்களுக்கெல்லாம் அப்படித்தான் செயல்படுகிறேன். குழந்தைப் பேறென்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் மறு பிறவி போன்றது. குழந்தையும் தாயும் முயன்றால் தான் இலகுவில் பிரசவம் நடக்கும். தடவிக்கதைச்சால் அவர்களும் செல்லங்கொஞ்சிக் கொண்டு எந்த முயற்சியும் செய்யாமல் அப்படியே இருந்திடுவாங்கள். நான் இப்படிப் பேசுவதால் இந்தச் சனியோனடை இங்க இருக்கிறதை விட கஸ்ரப்பட்டுப் பெத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடோணும் என்று நினைப்பார்கள்.

இஞ்சபார் அமைதியாக இருந்து முயற்சி செய்து கொண்டிருக் கிறாளே இந்தப் பெண் இப்ப அரைமணித்தியாலத்தில பெத்துப் போடுவாள்.

குஞ்சக்கா நம்பிக்கையோடு சொல்லியிருந்தா. அந்த அளவிற்கு அனுபவ முதிர்ச்சி. வயசு ஐம்பதைக் கடந்தபோதும். பிள்ளப்பெறு வாட்டை தனது கட்டுப்பாட்டுக்குள்ள வைச்சிருந்த, அவருடைய திறமையை அங்கு வந்து போனவர்களே அறிவார்கள். ஏன் அந்த வைத்தியசாலையே அறியும்.

அவர் வைத்தியராகப் படிக்கவில்லையே ஒழிய மகப்பேறு வைத்தியருக்குரிய அத்தனை திறமையும் அவரிடம் இருந்தது.

குழந்தை பிறந்த பின்பு அந்தத் தாய்மாரில் அவ காட்டும் அன்பு.

வீட்டிற்குப் போகும்போது அழுது வடித்து பிரியாவிடை தரும்போது குஞ்சக்கா நெகிழ்ந்து விடுவா.

அவருக்கு உதவியாக இரண்டு மருத்துவத் தாதிகள் இருந்தார்கள். ஒருத்தி மல்லிகா மிகவும் இளமை, அடுத்தது குசும்லதா இவ ஒரு சிங்களப் பெண்மணி.

இருவருமே குஞ்சக்காவின் கையால் குட்டுப்பட்டவர்கள்.

அணிந்திருக்கும் அவர்களின் புடவை போல் வெள்ளை மனம் கொண்டவர்கள். வருகிறவர்களிடம் அன்பாய் பழகிறவர்கள். குஞ்சக்கா பிள்ளைகளைப் போல் அவர்களிடம் வேலை வாங்குவார்.

விறைத்துப் போய் நிற்கும் அந்தப் பெண்ணைப்பற்றிக் கேட்டேன். ஆருக்கு என்ன நடந்தது. இதுக்குத்தான் வந்திருப்பாய். எனக்குத் தெரியாதே, பாவமடா யாராலையோ ஏமாற்றப்பட்ட பெண். இன்று காலையில் நடந்தது. மலங்கழித்த போது பிள்ளை பிறந்திற்றுது. அவசரமாகப் பிள்ளையை பக்கத்தில் இருந்த சூரப்பத்தையுக்குள்ள புதைச்சுப் போட்டு யாருக்கும் தெரியாமல் போகலாம் என்று புறப்பட்ட வேளையில் பிள்ளை வீரிட்டுக்கத்தி யிருக்கு, அந்தப் பக்கத்தால ஆடு மேய்க்க வந்த ஒருவன் பிள்ளையைப் பாத்திற்று தேடியபோது அந்தப் பக்கத்தால இந்தப் பெண் போனதைப் பார்த்திருக்கிறான்.

என்ன வேலை செய்திருக்கிறாய். பாவம் அந்தப் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கு "என்று சொல்லியிருக்கிறான்." நான் ஏன் தூக்க வேணும். எனக்குத் தெரியாது. "நீ ஏன் இப்ப இஞ்ச வந்தனீ" என்று கேட்க. "வயிற்றைக்கலக்கிச்சுது கக்கூசுக்கு வந்தனான், பிள்ளை அழுத சத்தம் கேட்டு நானும் இஞ்ச வந்தனான். போய்ப் பார் தம்பி. அழகான ஆம்பிளைப்பிள்ளை. சூரமுள்ளுக்குள்ள புதைச்சதாலை, முள்ளுக் குத்தி உடம்பெல்லாம் காயம்.

அவனுக்கு ஐமிச்சம் வந்திற்றுது விதானையாரிட்ட சொல்லி ஆளையும், பிள்ளையையும் இஞ்ச கொண்டு வந்து விட்டிருக்கு. தான் தான் தாய் என்பதை இதுவரை ஒத்துக்கவில்லை. "தனக்கும் தெரியாது ஊருக்குப் புதுசென்று" விதானையார் சொன்னார்.

பாவமடா யாராலோ ஏமாற்றப் பட்டிருக்கிறாள். அவனையும் காட்டிக் கொடுக்கக் கூடாதென்று எங்கேயோ இருந்து வந்திருக் கிறாள். அவளை அறியாமலே பிள்ளை பிறந்திற்றுது. பனைமட்டைக் கருக்கால தொப்பிள் கொடியை அறுத்திருக்கிறாள். வைராக்கிய முள்ள பெண்.

குஞ்சக்கா நிதானமாகவே கதைச்சா. வேறமாதிரிப் பெண்ணா கவே இந்தக் கட்டத்தில் குஞ்சக்காவைப் பார்த்தேன். பரிவு நிறைந்த தாயின் பக்குவம் அவர் பார்வையில், பேச்சில் எனக்குத் தெரிஞ்சுது. ஆண், பெண் இருவருமே ஒரு பிழையைத் தான் செய்கிறார்கள். ஆனால் பாதிப்பு பெண்களிடமே சுமையாகிறது. இது இயற்கையின் கொடை. இவ எப்படியும் ஒத்துக்கொள்ளத்தான் வேணும். அறையுக்குள்ள போய் பரிசோதிச்சால் எல்லாம் தெரியவரும். இதற்கு இன்னுமொரு வழியும் இருக்கு

என்னக்கா அது.

"நின்றுபார் தெரியும்."

பிள்ளையைப் பார்க்க ஆவலாக இருந்தது. பிள்ளையைக் காட்டுங்கக்கா பார்ப்பம்.

பிள்ளை அமைதியாக நித்திரை கொண்டது. நல்ல சிவத்தப் பிள்ளை மொழுமொழு என்று அழகாக இருந்தது. முகத்தில் கூட சூர முள்ளு கீறிய காயம் அங்கங்கு இருந்தது.

வெளியில் வந்து அவளைப் பார்த்தேன். அவளும் அழகானவள். குண்டுகன்னங்கள். சிவந்த மேனி.

குழந்தை பெற்றவள் என்பதற்கான எந்த அறிகுறியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. ஆனாலும் சின்னதாக ஒரு களைப்பு அவள் கண்களில் தெரிந்தது.

கட்டான உடல். இந்தக் கதிக்கு அவளை ஆளாக்கிய அவனை மயக்கியதில் வியப்பெதுவும் இல்லை. அப்படித்தான் என்னால் நினைக்க முடிஞ்சது.

"பிள்ளை! ஒத்துக்கொள் பிள்ளை டொக்டர் வந்தால் உள்ளுக்குள்ள கொண்டுபோய் எல்லாத்தையும் பார்த்துக் கண்டு பிடிப்பார்.

பிறகு பொலிசுக்கும் போக வேண்டிவரும்.

பணிவாகக் குஞ்சக்கா கதைச்சார்.

வாட்டுக்குள் பார்வையாளர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்.

ஏதோ நினைத்தவராய் குஞ்சக்கா குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியில் வந்தார். குழந்தை வீரிட்டுக் கத்தியது.

"உன்ர பிள்ளைதான் பாலக்குடு" என்று பக்கத்தில் கொண்டு போனா குஞ்சக்கா.

மளமளவென்று அவள் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது, அவள் மார்பங்கள் பாலைச் சொரிந்ததை நானும் பார்த்தேன். என்னோடு அங்கு நின்றவர்களும் தான். அவள் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. அங்கேயே இருந்து பால்கொடுக்க ஆரம்பித்தாள்.

தாய்மை விழித்துக் கொண்டதை நானும் பார்த்து நெகிழ்ந்து போனேன்.

குஞ்சக்கா சொன்ன அதிசயம் இதுதான். மார்பகங்கள் பால் கட்டி அவளுக்கு வேதனை செய்ததை குஞ்சக்கா அனுபவக் கண்ணால் பார்த்திருக்க வேணும். அந்த நம்பிக்கை அவரிடம் இருந்திருக்க வேணும்.

நெகிழ்ச்சியோடு அங்கிருந்து விடைபெற்றேன்.

நேராக அறைக்கு வந்தேன். அங்கு வரும்போதே மீன் சொதிவாசம் மூக்கைத் துழைத்தது.

எக்கவுண்டன் செல்வராசா மதிய இடைவேளைக்கு வந்து சந்தையில மீன் வாங்கி எவ்வளவு கெதியாகச் சமைப்பானோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. அவ்வளவு கெதியாகச் சமைப்பான். அப்பப்ப நானும் சாப்பிடுவேன்.

பாதி அவிஞ்சதாலோ என்னவோ நல்ல சுவையாக இருக்கும்.

அன்றும் நான் சாப்பிட்டேன். அந்த ஆஸ்பத்திரி நிகழ்வு மனதைப் பாதித்திருந்தது.

சாப்பிட்டு விட்டு எழுதலாம் என்றிருந்தேன்.

எப்போதும் நான் மதியம் வரை செய்தி சேகரிப்பும், மதியத்திற்குப் பின் எழுதி அனுப்புவதும் எனது நடவடிக்கை.

அப்போதெல்லாம் கணனி வசதியில்லை. கையாலதான் எழுத வேணும். இருபது இருபத்தைந்து பக்கம் எழுத வேணும்.

நண்பன் இஸ்மயில் வந்திருந்தான். அவன் மரமுந்திரிக் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்பவன். தமிழ் இலக்கிய அறிவு மிக்கவன்.

செய்திகள் சம்பந்தமாக அவனுடன் கலந்தாலோசிப்பதுண்டு. இந்தச் செய்தியை எழுத ஆரம்பித்தேன். முடியவில்லை. பல பேப்பர்களைக் கிழித்தெறிந்தேன். அவள் அழுது வடிச்ச தோற்றமே வந்து போனது. "தம்பி அவள் பாவம், யாரையோ காப்பாற்ற நினைக் கிறாள். பெண்களின் கெதியே இதுதான். ஆணும் பெண்ணுமே சேரும் இந்தப் பாலியல் சேட்டையில் பெண்மாத்திரமே பாவத்தைச் சுமக்கிறாள்"

குஞ்சக்கா சொன்னதை நினைத்துப் பார்க்கிறேன்.

ஒவ்வொரு வரி எழுதும்போதும் எனது சகோதரியாக, உறவாக, மேலாகத் தாயாகவே வந்து நிற்கிறாள்.

அவள் கண்கள் கண்ணீரையும், மார்பகங்கள் பாலையும் சொரிந்த காட்சி என் கண்ணிலும் நிலைத்து நின்றது.

நானும் விம்மி அழுகிறேன். இந்தச் செய்தி வராது மச்சான். அனைத்தையும் கிழித்து எறிகிறேன்.

இஸ்மயில் என் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

சற்று நிம்மதி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரோடும் வீதி!

தேரோடும் வீதி. வளம் நிறைந்த வன்னியின் தண்ணிமுறிப்பின் புகழ்பெற்ற வீதி இது.

குருந்தூர் ஐயன் திருவிழாவின் போது இந்தப் பாதையால் தேர் இழுக்கப்படும். இதில் நின்று நிமிர்ந்து பார்த்தால் பசுமை நிறைந்த காடுகளுக்கு மேலாக குருந்தூர் மலை கம்பீரமாகக் காட்சி தரும்.

தேரோடும் வீதியை குறுக்கறுத்துப் பாயும் பேராறு. மாரியில் நீர் நிறைந்து கரை புரண்டு ஓடும். இதன் காரணமாக அண்டைய நிலமெல்லாம் பசுமை நிறைந்து காணப்படும்.

தண்ணிமுறிப்பு பிரதேசம் வளத்திற்கு என்றும் குறைவிருக்காது.

மழை பொய்க்கும் காலங்களும் உண்டு. அந்த நேரத்தில் காட்டாறுகளும் வற்றிப் போய் உலர்ந்து காணப்படும்.

இந்தக் காலங்கள் கடும் வரட்சியைக் காண்ப தால், காடுகள் எரியும் பருவமும் உண்டு.

அதி உயர்ந்த மரங்களும், காட்டுக் கனி வகை களும் மணம் வீசும் நல் மலர்களும், பாய்ந்தோடும் நதிகளையும் கொண்டது தண்ணிமுறிப்பு.

இங்கு வாழ்ந்த மக்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்தார்கள்.

நாகன் என்ற நாகராசமன்னன் குருந்தூரை தலைநகராக்கி அரசு செலுத்தி வந்தான். இவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மனைவிகள் இருந்தார்கள். இருவருக்கும் பல குழந்தைகள் பிறந்தார்கள். ஒரு மனைவிக்கு தண்ணிமுறிப்புக் குளப்பகுதியையும், மற்ற மனைவிக்கு குருந்தூர் குளத்தையும் அதன் அண்டிய பகுதியையும் கொடுத்தான் என்பது கர்ண பரம்பரைக் கதை மூலம் அறியக்கிடக்கிறது.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த தான கதை இது.

குருந்தூர் மலை, இப்பகுதிக்கு பெருமை சேர்க்கும் சிறு குன்று, இதன் மேல் அரண் அமைத்து பாதுகாப்பாக அரசாண்டு வந்தவன் தான் நாகன்.

குருந்தூர் ஐயன் கோவிலும் அங்கிருந்தது.

இந்தப் பகுதி மீது அந்நியருக்கு எப்போதும் ஒரு கண். இதனைக் கருத்தில் கொண்ட மன்னன் எல்லைப் பகுதிகளை பாது காப்பதற்கு பலரை யாருக்கும் தெரியாமல் நியமித்திருந்தான். அவர்கள் எல்லைப் புறங்களில் அந்நியர் நடமாட்டங்களை தீவிர மாகக் கண்காணித்து மன்னருக்கு செய்திகளை அனுப்பி வந்தார்கள்.

இவ்வாறான அந்நியர்களின் படையெடுப்புகள் பல முறை தடுக்கப்பட்டிருக்கிறது. தன்னை நம்பி குடியேறிய மக்களை பாதுகாக்க மன்னன் தவறாது செயல் பட்டான்.

பாலை, முரலி, துவரை, விளாத்தி போன்ற சுவைமிகுந்த பழங்களை இந்தக் காடுகள் அள்ளி வழங்கின. ஐந்துவருடங்களுக்கு ஒரு முறை காய்க்கும் முரலி மரம் நிறைந்து காணப்படும் வனம் இதுதான். ஈரலிப்பான நிலமே முரலி வளர ஏற்ற இடம்.

அதிக மழைவீழ்ச்சி பெறும் வருடங்களில் காட்டாறுகள் கண்டபடி பாய்ந்து, ஆண்டக்குள சிறுகடலில் கலந்து நாயாறு கடலிலின் முகத்துவாரத்தினூடாக கடலில் கலந்து விடுகிறது.

ஆண்டாங்குள எல்லைக் காவலனாக மாறனை நியமித்திருந் தான் மன்னன் நாகராசன்.

மாறன் துணிவிலும் வீரத்திலும் யாராலும் வெல்ல முடியாதவன். காட்டெருமைக்கு நிகராக வர்ணிக்கப் பட்டவன்.

குழுமாடுகளை அடக்கி அவன் அமைத்த பட்டியில் சேர்த் திருந்தான். இவைகள் இந்தப்பிரதேசத்தின் வயல் தேவைகளுக்காகப் பயன் படுத்தப்பட்டு வந்தன. அனைத்தும் வலிமைமிகுந்தவை. தன்னிச்சையாக காடுகளில் திரிந்து கட்டுக்கடங்காமல் திரிபவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரில் வருபவரை கொம்பால் தூக்கி எறிந்து கொன்று விடுபவை.

இவைகளை அடக்குவதற்கு திறமையும், வலிமையும் வேண்டும். சின்ன வயதில் இருந்தே காட்டில் வாழ்ந்த மாறன் தந்தை மூலம் இந்தக்கலையைக் கற்றிருந்தான்.

மான் தோலினால் உருவாக்கப் பட்ட கயிறு இதற்காகப் பயன் படுத்தப் பட்டன. மான் தோலினால் உருவாக்கப் படும் கயிறு மிகவும் வலிமை கொண்டது.

இலகுவில் அறுக்க முடியாதது. மான் கொம்புகளில் கயிற்றைக் கட்டி. ஓடிவரும் காட்டெருமைகளை குறிவைத்து அதன் கொம்புகளில் எறிய வேண்டும். இலக்குத் தவறினால் மரணம் தான். குறிதவறாமல் எறிந்து மரத்தைச் சுற்றி கட்டி மாட்டை பணிய வைப்பதில் கைதேர்ந்தவன் மாறன். அதைவிட யுத்தக் கலையையும் தந்தையிடம் இருந்து கற்று வைத்திருந்தான்.

நல்ல குருமாரிடம், கல்வி கற்று சிறந்த அறிவாளியாகவும் அவன் திகழ்ந்தான்.

இவனது அசுரத்திறமையை அறிந்த நாகன் இந்தப்பகுதியின் எல்லைக் காவலனாக இவனை நியமித்திருந்தான். இவன் ஒரு எல்லைக் காவலன் என்பது யாருக்குமே தெரியாது.

கட்டுக்கடங்காமல், பல நாட்கள் அவனுக்குத் தண்ணி காட்டிய காட்டு எருமைக் கடா ஒன்றை அடக்கி பல நாட்கள் பட்டினி போட்டு. தன்னோடு வைத்திருந்தான் மாறன்.

இதற்கு மாதாளை என்று பெயர் வைத்து தனக்கு நண்பனாக் கினான். மாதாளை மீதேறி சவாரி செய்வதில் அவனுக்கு பெரு விருப்பம் இருந்தது.

காட்டுப் பிரயாணங்களுக்கு மாதாளை பேருதவியாக இருந்தது. அவனது தேவையை அறிந்த நண்பனாக அவனைச் சுற்றியே வலம் வந்தது.

கட்டுக்கடங்காத காட்டேறியாகத் திரிந்த மாதாளை தனக்குள் அடங்கி தன்னை சுமந்து செல்லும் வாகனமாக இருப்பது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

எல்லைக் காவலனாக இருப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. பகைவர்கள், காட்டு விலங்குகள். விசப் பூச்சிகள் என்று பயங்கர மானதாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறன், வலிமை மிகுந்த தேகம் கொண்டவன். இயற்கை உணவுகளை உண்டு வாழ்ந்ததால் கவர்ச்சி மிக்க கண்கள் அவனுக்கு. யாரும் பருவப் பெண்கள் கண்டால் கண்டவுடனே அவனை விரும்பி விடுவார்கள். அந்த அளவு அழகன் அவன்.

நேரான கடைந்தெடுத்த மூக்கு, நீண்ட கழுத்து பொதுநிறம். சுருண்ட கேசம், இத்தனையையும் விட சுறுசுறுப்பு மிக்கவன்.

எல்லைக் காவல் செய்யும் போது தன்னைப் பாதுகாக்க உயர்ந்த பாலை மரத்து மேல் கிளைகளை உள்ளடக்கி, குடில் ஒன்று அமைத்திருந்தான். கீழுக்கு தடிகளைப் பரப்பி, களிமண்ணால் மெழுகியிருந்தான்.

மேற் பக்கக் கூரையை பனை ஓலையால் வேய்ந்திருந்தான். காற்று மழையில் இருந்து பாதுகாக்கும் படி இது அமைத்திருந்தது.

அந்த உயரத்தில் இருந்து பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை அனைத்தையும் பார்க்கலாம்.

சமையலுக்கு வேண்டிய அனைத்தும் அங்கே இருந்தது. அடுப்பு முதல் விறகுவரை. வேட்டையாடி இறைச்சியைப் பதப்படுத்தி வைத்திருந்தான். மரக்கொட்டுகளில் இறைச்சியை அடைத்து அதற்குள் தேனை ஊற்றி மூடி வைத்திருப்பான்.

தேனில் இறைச்சி அவிஞ்சு அதீத சுவை தரும்.

பன்றியை வேட்டையாடி அதன் கொழுப்பில் கருக்கல் செய்து பல மரக்கொட்டுகளில் நிறைத்து வைத்திருந்தான்.

மழைகாலத்தில் அவனது சாப்பாட்டிற்குப் போதுமானதாக இருந்தது. தன்னிச்சையாக காட்டில் வளரும் நெல்லை உருவி அரசியாக்கி சேர்த்து வைத்திருப்பது அவனது வழக்கம்.

காட்டில் கானல் கொச்சி மரம் அதிகம். நிறையப் பிடுங்கலாம். எல்லாவற்றையும் சேமித்து வைத்திருந்தான்.

விரும்பிய நேரத்தில் பால் குடிக்க ஏற்றவாறு மாடுகள் பெருமளவில் நின்றன.

அவனுக்கு இந்த வாழ்க்கை நன்றாகவே பிடித்திருந்தது.

அன்று மாதாளை மீது உல்லாசமாய் சவாரிசெய்து வந்த மாறன் ஒரு பெண் குரல் கேட்டு அதிர்ந்து போனான்.

அவள் "மல்லிகா மல்லிகா" என்று கூப்பிட்டுக் கொண்டே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாள்.. இனிமை நிறைந்த அந்தக் குரலில் ஒரு ஏக்கம் தொனித்தது. அவள் நீண்ட நேரமாக கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

மாதாளையை விட்டு இறங்கியவன் குரல் வந்த திசைநோக்கி நடந்தான்.

"யாரது" என்று அதட்டலாகக் கூப்பிட்டான்.

ஒரு சத்தத்தையும் காணவில்லை. அந்தத்திசையில் மெதுவாக நடந்தான்.

அவனால் நம்பவே முடியவில்லை. அந்தக் கானகத்தின் மத்தியில் இப்படியொரு அழகான பெண்ணா!

பேயாக இருக்குமோ என்று அவன் யோசித்தான். அவள் பயத்தில் மலங்க மலங்க விழித்தாள்.

"யார் நீ எங்கிருந்து வருகிறாய்?" அவன் மளமளவென்று கேள்வியாய்க் கேட்டான்.

அவள் பயத்தில் பேசாமலே நின்றாள்.

பெண்ணே பயப்படாதே நீ யாரென்று சொல்லு இந்த அடர்ந்த காட்டுக்குள் உனக்கென்ன வேலை.

"அவனது குரலில் சற்று பணிவு தொனித்தது. நானும் தோழி மல்லிகாவும் முரலிப் பழம் பிடுங்க காட்டிற்குள் வந்தோம். அவள் ஒரு பக்கத்தால் தேடினாள் நான் ஒருபக்கத்தால் தேடினேன். கொஞ்ச நேரத்தால் கூப்பிட்டுப் பார்த்தேன் ஆளைக்காணவில்லை. திசை தெரியாமல் இதுவரை வந்திருக்கிறேன். அவள் எங்கு போனாளோ தெரியவில்லை." என்றாள். அப்படியென்றால் உன்னுடைய வீடு எங்கே? "நாங்கள் குருந்தூரில் வாழ்பவர்கள்." அப்படியா?

அங்கிருந்து, இங்கு எவ்வளவு தூரம் என்று தெரியுமா?

"எனக்குத் தெரியவில்லை. திசை தெரியாமல் வந்து விட்டேன்."

அவள் திகைத்துப் போய் நின்றாள்.

அவனுக்கு இப்போது அது விளங்கி விட்டது.

பெண்ணே பயப்பட வேண்டாம். காடுகளில் இவ்வாறு நடப்பதென்பது இயற்கையானது. இது எப்போதும் என்றில்லை.

காடு ஏமாற்றுகிறது என்றும் சொல்லுவார்கள். பேய் பிசாசுகள் ஏமாற்றிக் கொண்டு போவதாகவும் கதை ஒன்றுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உண்மை அது இல்லை.

காடுகளில் ஒருவகைச் செடி உண்டு அதன் மீது மிதிச்சால் திகைப்பு ஏற்படும். எதுவுமே நினைவில் இருக்காது.

என்ன திகைப்பூண்டில் மிதிச்சது மாதிரி நிற்கிறாய் என்று ஊரில் சொல்லுவார்கள், அது இதுதான் நீயும் கேள்விப் பட்டிருப்பாய்.

அவன் சொல்லி முடிச்சு விட்டு அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவளும் ஆச்சரியத்தால் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். இவனுக்கு இவ்வளவு தெரியுமா என்பது போல் அதிசய மாகப் பார்த்தாள்.

அவனது உடல் தோற்றம் ஒரு வீரனுக்குரிய அமைப்போடு இருந்தது. "நீங்கள் அரசாங்கத்தில் வேலை செய்கிறீர்களா? என்று கேட்டாள். நீங்கள் ஒரு போர் வீரனைப் போல் இருக்கிறியள் அதனால் கேட்கிறேன்."

அவளது கேள்வி அவனுக்கு வெட்கத்தை வரவளைத்தது. நிமிர்ந்து அவளை ஊடுருவிப் பார்த்தான். அவள் அழகான வன தேவதைபோல் காட்சி தந்தாள்.

"நீங்கள் ஒரு வனதேவதையா? அவ்வளவு அழகாக இருக் கிறியள் அதனால் கேட்கிறேன்." என்றான். இப்போது அவளுக்கு பெண்களுக்கே உரித்தான நாணம் வந்து ஒட்டிக் கொண்டது. "பயந்து விடாதீர்கள். நான் தேவதையில்லை தையலி, என்பது எனது பெயர் நான் தலைவர் நாகனின் மகள். காட்டில் திரிந்து இயற்கையை ரசிக்கின்ற விருப்பம் கொண்டவள்.

இயற்கை அரண்கொண்ட இந்தக் காடுகள் இதுவரை என்னை அரவணைத்தே வந்திருக்கின்றன. இன்று ஏனோ நிலை தடுமாறச் செய்து விட்டது.

நீங்கள் மன்னர் நாகனின் மகளா? ஆச்சரியமாகக் கேட்டான்.

தன்னிச்சையாக இந்த அடர்ந்த காட்டில் திரிய உங்கள் தந்தையார் எப்படி அனுமதித்தார்.

தந்தையார் துணிவின் அவசியத்தை எங்களுக்கு விளங்க வைத்தவர். அதனை ஊட்டியே வளர்த்தவர். உங்களை உங்களால் பாதுகாக்க முடியுமென்றால் நீங்கள் எங்கும் போகலாம் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி தந்திருக்கிறார்.

மற்றச் சகோதரங்களுக்கு மாத்திரமல்ல இந்த நாட்டு மக்களுக்கும் தான். அவள் சொன்னபோது ஆச்சரியத்தால் அவனது கண்கள் அகலத் திறந்தன. மாலையில் சூரியன் மறைகின்ற நேரம். இருள் மெதுவாகப் பரவத் தொடங்கியது. திடீரென வாடைக்காற்று வீசி உடலில் குளிர்ச்சியை ஏற்படுத்தியது. மின் மினிப்பூச்சிகள் அங்கும் இங்கும் பறந்து இருளை ஞாபகப் படுத்தின. இளவரசி! இருளத் தொடங்குகிறது.

இந்நேரம் உங்களைக் கொண்டு போய் விட முடியாது. இருட்டில் காட்டு மிருகங்களின் அட்டகாசம் அதிகம் என்றான். அவன் தன்னை இளவரசி என்று அழைப்பதை அவள் விரும்பவில்லை. நீங்கள் என்னை தையலி என்றே கூப்பிடலாம் என்றாள். அது மரியாதை ஆகாது. இருந்தாலும் நீங்கள் விரும்பினால் அப்படியே அழைக்கிறேன்.

இன்று இரவு நீங்கள் என்னுடன் தான் தங்க வேண்டும். இன்னும் சிறிய நேரத்தில் பலத்த மழை பெய்யப் போகிறது. அதற்கிடையில் எனது குடிலுக்குப் போக வேண்டும் என்றான். "அதிக தூரம் செல்ல வேண்டுமா?" இல்லை. எனது மாதாளையில் போகலாம் அது சீக்கிரமாக அழைத்துச் செல்லும் என்றான்.

"மாதாளை என்பது... முடிக்குமுதல் இப்போது வரும் பாருங்கள் என்றான். இரண்டு கைகளையும் பொத்தி வாய் வைச்சு ஊதினான். எழுந்த சத்தம் சங்கூதியது போல் கேட்டது. சருகுகள் சத்தம் கேட்க மாதாளை அவன் முன்னால் வந்து நின்றது. எருமைக் கடாவைக்கண்டதும், இதுதான் மாதாளையா? என வினாவினாள்.

என்னுடைய குதிரை இதுதான். என்னைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்லும் என்னுடைய வாகனம். நீண்ட கால நண்பன் என்று மாதாளையைப் பற்றி புகழ்ந்து தள்ளினான். குழந்தை மாதிரி ஒரு எருமைக்கடாவை புகழ்ந்து தள்ளுவது அவளுக்கு சிரிப்பை வரவளைத்தது.

"உங்களைப் போல் இதுவும் அழகாகத்தான் இருக்கிறது" என்றாள் நகைச்சுவையாக. அவனும் அதனை புரிந்து கொண்டவனாக நன்றாகவே ரசித்தான். பெரு மழையொன்று வரப்போகிறது. அதற்குள் எங்கள் குடிசைக்குப் போவோம் என்றான். அவளும் மாதாளை மீது ஏறி அமர்ந்து கொண்டாள். குதிரை மீது சவாரிசெய்த அவளுக்கு, இது ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரத்தில் இறங்குங்கள். குடிசை வந்து விட்டது. குடிசையா? அவள் அங்கும் இங்கும் பார்த்தாள் எதையுமே காண வில்லை. "எங்கே உங்கள் குடில் எதையுமே காணவில்லையே" என்றாள்.

நிமிர்ந்து பாருங்கள் என் அழகான மாடம் தெரியுமென்றான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவன் மரத்தில் அமைத்திருந்த அழகான குடிசை தெரிந்தது.

அந்த இருட்டில் அந்த குடிசைமட்டும் பளிச்சென்று தெரிந்தது. அவன் தெகிழங்கொடிகளை குடிசை மீது படர விட்டிருந் தான்.

அது குடிசையை மூடிப் பூத்திருந்தது. யார் பார்த்தாலும் மரம் பூத்திருப்பதாகவே நினைப்பார்கள்.

தடிகள் மூலம் அமைத்திருந்த ஏணிமூலம் அவளையும் ஏற்றிவிட்டான். குடிசையுள் நுழைந்தவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

தெகிழம் கொடி பூத்து நறுமணம் வீசிக் கொண்டிருந்தது. "உண்மையில் இது அழகான மாடம் தான். எங்கள் அரண்மனையை விட பல மடங்கு சிறப்பானது."

உள்ளுக்குள் இருவர் தங்கக் கூடிய அளவில் இடம் இருந்தது. "நான் நிரந்தர மாக இங்கு தங்க விரும்புகிறேன்." அவள் வெள்ளந்தி யாகப் பேசியது அவனுக்குப் பிடித்திருந்தது.

மான் தோலை அவள் இருப்பதற்காக விரித்து விட்டான். உட்காருங்கள் இளவரசி.

என்னை அப்படிக் கூப்பிட வேண்டாம். தையலி என்றே கூப்பிடலாம். உண்மையில் நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன? என அவள் கேட்டாள்.

அன்பும், அறிவும், பண்புமுள்ள மனிதராகக் காண்கிறேன். உங்கள் பெயர் என்ன? எதற்காக இந்த மரத்தில் குடிசை அமைத்து இந்தக் காட்டிற்குள் வாழ்கிறீர்கள். அவள் தொடர்ந்தாள்.

நான் ஒரு சாதாரணமானவன். எனக்கென்று பல எருமைப் பட்டிகள் உண்டு. அதில் ஆயிரம் எருமைகள் நிற்கின்றன. கட்டாக் காலிகளாக காடுகளில் திரியும் குழுவன்களை அடக்கி, பழக்கி இந்தப் பிரதேசத்து வயல் வேலைகளுக்கு உதவுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இராசதானி வயல்களும் தான். என்னை நம்பி நூற்றுக் கணக்கானோர் வேலை செய்கிறார்கள்.

இந்தக் குடிலில் இருந்து பார்த்தால் எல்லாம் தெரியும்.

நான் ஒரு காவலாளி. மாறன் என்பது எனது பெயர் என்று அவளின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தான்.

இந்தப் பெயரை தந்தையின் வாயால் உச்சரித்துக் கேட்டிருக் கிறாள். அது இவர்தானோ என மனதிற்குள் நினைத்துக்கொண்டாள்.

மழை அகோரமாகப் பெய்தது.

அல்லைக்கிழங்கும், பன்றிக் கருக்கலும் சாப்பிடுவீர்கள் தானே. என அவன் அவளைக்கேட்டான். எது என்றாலும் தாருங்கள் அவ்வளவு பசி எனக்கு. எங்கள் பிரதேசத்தில் சாப்பாட்டிற்கு பஞ்சம் இல்லை. காடு கொடுத்த கனி இருக்கு. உழவு செய்ய போதிய அளவு நிலமிருக்கு. இங்கு பஞ்சம் இருக்காது.

ஒவ்வொரு வீட்டிலும் பன்றிக் கருக்கல் இருக்கும்.

யார் வந்தாலும் உடன் சாப்பிடுவதற்கு பன்றிக் கருக்கலே போதும்.

தாமரை இலையில் அவன் பரிமாறிய கிழங்கும், பன்றிக் கருக்கலும் அமிர்தமாய் சுவைத்தது. காட்டில் அலைந்து திரிந்த களைப்பு அவளுக்கு கண்ணை மொய்ச்சுக் கொண்டு வந்தது. வெளியில் மழை இன்னும் பெய்து கொண்டே இருந்தது.

இலேசாகக் குளிரத்தொடங்கியது. அவள் மான்தோலில் சுருண்டு படுக்கும் போது. வீட்டில் தன்னைத்தேடுவார்கள் என்று நினைப்பும் வந்து போனது.

பிள்ளைகளுக்கு என்னதான் சுதந்திரத்தைக் கொடுத்தாலும் பெற்றோரின் அக்கறை மிகப்பெரியது. அவர்களைப் பற்றியே நிச்சயம் கவலைப் படுவார்கள். மல்லிகா எப்படியும் போய்ச் சேர்ந்திருப்பாள்.

நினைத்த படியே அப்படியே உறங்கிப் போனாள். கரடித் தோலினால் செய்த போர்வை கொண்டு அவளைப் போர்த்தி விட்டான்.

அடுத்தபக்கத்தில் அவனும் படுத்துறங்கினான்.

வனத்தின் அமைதியும், குரல் கொடுக்கும் மிருகங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமும்.

அவனைத் தாலாட்டுவது போல் எப்போதும் கேட்கும்.

இந்தச் சத்தங்கள் எதுவுமே அவளுக்குக் கேட்கவில்லை. அவள் அமைதியாகத் தூங்கினாள். தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால் எங்கும் போகமுடியாமல் ஆறுகள் பெருக் கெடுத்து ஓடின. பேராறு பல கிளைகளாகப் பிரிந்து காட்டு நிலங்கள் முழுவதையும் நனைத்தன.

தொடர்ந்து பெய்த மழை விட்டிருந்தது. அவளை அவன் அன்போடு உபசரித்திருந்தான். அந்த கரிசனை அவன் மீது அவளுக்கு விருப்பை ஏற்படுத்தியிருந்தது.

குயிலின் கூவலும் மயிலின் அகவையும், காட்டுக்கோழிகளின் கத்தலும், ஆற்றில் விழுந்து கத்தும் மறிக்கரடிகளின் குழறலும், மந்திகளின் அலப்பலும், காடுமுழுக்க மணக்கும் காட்டுப் பூக்களின் வாசமும் தங்கிய அந்த நாட்களில் மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தன.

இங்கிருந்து போகவே அவளுக்கு மனமில்லை. மழை விடக் கூடாது என்றே அவள் மனதுக்குள் நினைத்தாள். மெல்லமெல்ல மாறன் அவன் உள்ளத்தில் புகுந்து நிரந்தரமாகக் குடியேறிவிட்டான்.

இனிமேல் அவளிடமிருந்து அவனைப் பிரிக்கவே முடியாது என்கிற அளவில். அவன் அவளை அவ்வளவு பார்த்துக் கொண்டான். ஒரு தாயைப்போல் பராமரித்தான். தனிமையிலும் அவளிடத்தில் கண்ணிமாக நடந்து கொண்டான். அந்தக் குடிசையில் அழகான புறாக்களும் அவனுடன் குடியிருந்தன. அவள் கூட அந்தப் புறாக் களைப்பிடித்து விளையாடினாள். அவைகளும் அவளுடன் ஒட்டிக் கொண்டன.

"இவைகளும் எனது நண்பர்கள் தான்" என்று அவளுக்கு அறிமுகப் படுத்தியிருந்தான்.

இளவரசி நீங்கள் இன்று வீட்டிற்குப் போகலாம். காட்டாறுகள் எல்லாம் வற்றிவிட்டன.

சில நாட்கள் இங்கு இருந்து விட்டுப் போகிறேனே. இந்த இடம் எனக்கு அவ்வளவுக்குப் பிடித்திருக்கிறது. ஏன் உங்களையும் கூடத்தான். என்று சொல்லி நாணம் கலந்த சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

அவளது போக்கை சில நாட்கள் அவனும் அவதானித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தான். எந்த விதத்திலும் தான் சம்மதமில்லை என்று அவனால் பொய்யாகக் கூட நினைக்க முடியவில்லை. அவளின் அழகு அவனையும் விரும்ப வைத்தது.

குடிசையை விட்டு இறங்கியவள் அண்ணாந்து பார்த்தாள். வெண்மையாய் கூரையை மறைத்திருந்தது தெகிழம் பூக்கள். வண்டுகள் தேனெடுக்கப் பறந்தன. நிலம்வரை வாசம் மூக்கத் துழைத்தது. கண்கள் கலங்க அழுகை வரும்போல் இருந்தது.

அந்தப் பக்கங்களை ஒரு முறை ஆராய்ந்தாள்.

பின் அவனுடன் நடந்தாள். மாதாளையும் உடன் வந்தது.

அமைதியாக நடந்து வந்தாள்.

“தந்தையாரை விசாரித்ததாகச் சொல்லுங்கள்.” மாறன் அக்கறையோடு கூறினான்.

“தந்தையாரை நீங்கள் அறிவீர்களா?”

அவள் கேட்டாள்.

என்ன கேள்வி கேட்டீர்கள் ஒரு நாட்டின் அரசரை பிரஜைகள் தெரியாமலா இருப்பார்கள். நீங்கள் அங்கு போங்கள். கனவிடயம் உங்களுக்குத் தெளிவாகும்.

அவன் சொல்லிவிட்டு, “இனிமேல் நான் வரத்தேவையில்லை. நாங்கள் சந்திக்கும் கடைசிச் சந்திப்பு இது.” அவனது குரலும் தளர்ந்திருந்தது.

கண்கள் குளமாக அவள் அவனைப்பார்த்தாள். “தொடர்ந்து வரமாட்டீர்களா?”அவளது கேள்வியும் கண்களும் ஒன்றாகவே கெஞ்சின.

அவனுக்கு அந்தரமாகப் போனது. இனிமேல் எந்தப் பயமும் இல்லை. எனது நண்பன் மாதாளை உங்களை பத்திரமாக அழைத்துச் செல்வான்.

“எனக்கு வாக்குத் தந்த படி குருத்தூர் ஐயன் கோவில் தேருக்கு கட்டாயம் வரவேண்டும். நான் பார்த்துக்கொண்டே நிற்பேன். உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.”

அவள் சொல்லி முடித்ததும் ஒவெனத் தலையை ஆட்டினான்.

“எனக்கு இன்னுமொரு ஆசை அதற்கு அனுமதி தருவியளா?”

என்ன என வினவுவதற்கு முன்னேயே ஓடிப்போய் அவனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்து முத்தமிட்டாள். அதை அவன் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

நிலை தடுமாறிப்போனான்.

அவளது கடைக்கண்ணில் கண்ணீர் முட்டி வழிந்தது.

அவன் அவளிடம் விடைபெற்றபோது அவனது கண்களும் பனித்திருந்தன.

அவளின் வரவை அரசன் நாகன் எதிர்நோக்கியிருந்தான். மாதாளை அவளைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்தது.

மலர்ந்த முகத்துடன் மகளை வரவேற்றான்.

அவளுக்கு ஆச்சரியம். எப்படியும் பேச்சு விழும் என்றே அவள் நினைத்திருந்தாள்.

"அப்பா என்னை மன்னிச்சு விடுங்கள். என்னைக் காணாமல் எவ்வளவு வேதனைப் பட்டிருப்பீர்கள். இனிமேல் இப்படி நடக்காது" தயங்கித் தயங்கி மளமளவென்று சொல்லி முடித்தாள். நாகன் பலமாகவே சிரித்தான். நீ போனதில் இருந்து அங்கு யார் உனக்கு பாது காப்பாய் இருந்தது. இன்று, இங்கு வருவது முதல் கொண்டு எனக்கு செய்திகளாக வந்து கொண்டே இருந்தது. என்று நிதானமாகவே சொல்லி முடித்தான் நாகன்.

அவள் ஆச்சரியமாகத் தந்தையைப் பார்த்தாள்.

மாறனை யாரென நினைத்தாய். அந்தப் பகுதியின் எல்லைக் காவலனாக என்னால் நியமிக்கப் பட்டவன்.

ஒவ்வொரு நாளும் தனது புறாக்கள் மூலம் செய்தி அனுப்பிக் கொண்டே இருந்தான். அவன் ஒரு சுத்தவீரன்.

அந்நிய உளவாளிகளை எத்தனை முறை பந்தாடியவன். எங்கள் எல்லைக்குள் பகைவன் நுழையாமல் இருப்பதற்கு இப்படிப் போன்றவர்கள் எங்களிடம் இருப்தொன்றே காரணம். கரையோரப் பகுதியைத்தான் அந்நியரால் கைப்பற்ற முடிந்தது. எல்லையைக் கடந்து நடுப்பகுதிக்கு வர அவர்களால் முடியவில்லை. கடமை யுணர்வும், நாட்டுப் பற்றும் மிக்க மக்கள் இங்கே வாழ்கிறார்கள். அதனால் தான் வன்னிக்கு அடங்காப்பற்று என்று பெயரே வந்தது."

தந்தையார் இதைச் சொல்ல, சொல்ல அவள் தேகம் முறுக்கேறியது. கள்ளன் தானொரு எல்லைக் காவலன் என்று சொல்லாமலே போய்விட்டானே. அதற்காகத் தான் வீட்டில் புறா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளக்கிறாரா? தேருக்கு வரட்டும் கதைப்போம். அவனைப் பற்றிய நல்ல அபிப்பிராயம்அப்பாவிடம் இருந்தது தனக்குச் சாதக மானது என்று அவள் நினைத்தாள். மாதாளையை அன்போடு தடவி முத்தமிட்டு அனுப்பி வைத்தாள்.

அந்த நாளும் வந்தது. அந்தப்பிரதேசமே அலங்காரத்தால் அழகாகத் தோற்றமளித்தது. குமளமுனை, ஆண்டாங்குளம், மாமடு, ஒதியமலை போன்ற இடங்களில் இருந்து மக்கள் வந்து குவிந்தார்கள். தெருவெங்கும் கடைகள் போட்டிருந்தார்கள்.

குருந்தூர் அய்யன் அழகான தேரில் பவனி வந்தான்.

அரச குடும்பம் முன்னேவர கலை நிகழ்ச்சிகள், கரகாட்டம், நாட்டியம் என்று பின்வர, நாதஸ்வரம், மேளம் என்று தேரோட்டம் களை கட்டியது.

தையலி மல்லிகாவுடன் தேரோடும் வீதி வரை ஓடித் திரிந்தாள். அவள் மனதில் குதூகலம் கொப்பளித்தது.

அவன் வரவிற்காக அவள் காத்திருந்தாள்.

மல்லிகாவும் அவளைச் சீண்டிக் கொண்டே இருந்தாள். அவளும் அதனை விரும்பி ரசித்தாள்.

குருந்தூர் சந்தியில் வலதுபக்கம் திரும்பினால் தண்ணி முறிப்புக் குளத்திற்குப் போகலாம். இடது பக்கம். மக்கள் குடியிருப்பு அதிகமாக இருக்கும் பகுதி.

கொஞ்சத் தூரத்தில் வண்ணானாறு குறுக்கறுத்துப் பாய்ந்து கொண்டிருக்கும். அதற்கு முதல் வரும் வீதியால் தேர் திரும்பி கோவிலுக்கே போகவேண்டும்.

அவனை எதிர் பார்த்து தையலி சோர்ந்து போனாள். வழியைப் பார்த்துப் பார்த்து கண்கள் பூத்துப் போயின. வரட்டும் அவர் வரட்டும். என்னை ஏன் இவர் தவிக்க விடுகிறார். அன்று விடைபெறும் நேரம் அவனை அணைத்த அவனது வாலிப வாசம் அவள் மீது இன்னும் ஒட்டிக்கொண்டே இருந்தது.

இப்போது அவள் ஏமாற்றத்தால் கண்கள் கலங்கி நின்றாள்.

மாறன் எதிரியால் கொலைசெய்யப்பட்டான் என்ற செய்தி இன்னும் இங்கு வந்து சேரவில்லை.

பகைப்புலத்தைத் தவிர்த்து அனைத்தும் கற்பனையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவசங்கள்!

ஒவ்வொருவர் வாழ்விலும் பல சம்பவங்கள் அவ்வப்போது வந்து போகும் அதில் சிலவற்றை மனம் அடிக்கடி நினைத்துப் பார்க்கும். எனக்கும் தான் அப்படியான சம்பவங்கள் நிறைய இருக்கின்றன. அதில் ஒன்றுதான் அந்த நீள முலைக்காம்புகள். எப்போதும் நினைவில் இந்த முலைக் காம்புகள் வந்து போகும் போது, என்னை அறியாமல் பெருமூச்சொன்றும் வந்து போவது வழக்கம்.

இது ஒரு தாய்மையின் குறியீடு. அந்தக் கண்ணோட்டத்திலேயே நான் இதனைப் பார்த்தேன், பார்க்கிறேன்.

இந்த முலைக்காம்புகளின் மார்பகங்களில் கவர்ச்சியில்லை வரட்சியே தெரிந்தது. எத்தனையோ வருடங்கள் கடந்தும் என் மனதில் கனத்தை ஏற்படுத்தி யிருக்கும் இந்தச் செய்தியை உங்களிடமும் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

இது எழுபத்தேழாம் ஆண்டு தேர்தல் காலத்தைய கதை.

நான் அப்போது கொழும்பில் இருந்தேன். சின்னதாக ஒரு வியாபாரம்.

வியாபாரம் ஆரம்பித்த காலத்தைவிட இப் போது கொஞ்சம் பரவாயில்லாமல் ஓடிக் கொண்டி ருந்தது.

எழுபத்தேழாம் ஆண்டு தேர்தலை தமிழ் மக்கள் இலகுவில் மறந்து விடமுடியாது. வட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைத்தீர்மானம். சர்வசன வாக்கெடுப்பென்று தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்தது.

ஆணித்தரமான வெற்றியை குறிவைத்து தமிழ் தலைமைகள் சுழன்று திரிந்தார்கள். தனிநாடு, தமிழ் ஈழமென்பதைக் கேட்கும் போதே புல்லரிக்கும்.

முல்லையில் தமிழரசுக்கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து எங்கள் குடும்பம் தீவிர ஆதரவாளரானார்கள்.

அதற்குக் காரணம் மூத்த அண்ணன் கட்சி நிகழ்வுகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். எனக்குச் சின்னவயது, அண்ணன் எழுதித் தரும் பேச்சுகளை பாடமாக்கி அப்படியே கூட்டங்களில் பேசுவேன். சின்னப் பையன் இப்படிப் பேசுகிறானே என்று உணர்ச்சி வசப்பட்டு மக்கள் அவ்வளவு கரகோசம் வழங்குவார்கள்.

அது பெரு மனமகிழ்வைத்தரும். தேர்தல் பிரச்சார மேடைகளும், தலைவர்மார் வழங்கும் உணர்ச்சிகரமான பேச்சுக்களும் நானும் வளர அதுவும் எனக்குள்ளும் ஆக்கிரமித்துக் கொண்டது.

எங்களுக்கு, என்றுதான் விடிவு வருமென்று எப்போதும் மனதிற்குள் நினைத்துக் கவலைப்படுவேன்.

இந்தத் தேர்தல் காலத்தில் எனது இருப்பு கொழும்பில் என்ற படியால், தேர்தல் பிரச்சாரங்களில் முழுவதுமாகக் கலந்து கொள்ள முடியவில்லை. இந்தக் கவலை எப்போதும் எனக்குள் இருந்தது.

அப்படியிருந்தும் அண்ணன் விடுக்கும் அழைப்பை ஏற்று பலமுறை போய்வந்திருக்கிறேன். இன்றும் அப்படி ஒரு அழைப்பை, கொழும்பிற்கு வந்த லொறியில் கொடுத்து விட்டிருந்தார். அந்த துண்டுப் பிரசுரத்தில் பேச்சாளர் பட்டியலில் எனது பெயரும் இடம் பெற்றிருந்தது.

அதைப்பார்க்கும் போது எனக்குப் பெருமையாக இருந்தது. ஒரு கூட்டத்தில் பேசுவதாக இருந்தால் மனம் அன்றிலிருந்தே ஆயத்தமாகும். என்ன வேலையிருந்தாலும் எனக்குள் எல்லாமே ஓடிக் கொண்டிருக்கும்.

சில வேளைகளில் பரவசமடைந்து கண்ணீரும் வந்துவிடும்.

இன்று மெயிலுக்கு போவதற்கு முடிவு செய்து எனது வியாபாரத்தை நண்பன் வின்சனிடம் ஒப்படைத்து விட்டு புறப்பட்டேன்.

என்னை வழியனுப்ப நண்பன் வின்சனும் வந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை மெயில் புகையிரதத்தில் இடம் பிடிப்பது மிகவும் கஸ்ரம்.

நெருக்குப்பட்டு ஓடி தவறிவிழுந்து பலர் இறந்திருக்கிறார்கள்.

வின்சன் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு ஐயர், அவர்களுக்கு குடும்ப நண்பராக இருந்தார். அவர் கோட்டை புகையிரத நிலையத்தில்தான் வேலைசெய்தார்.

ஊருக்குப் போவதாக இருந்தால் முன்கூட்டியே அவரிடம் சொல்லி வைப்பதுண்டு.

அவர் உறங்கல் இருக்கை ரிக்கற் புக்பண்ணித்தருவார். அதற்கு மேலதிகமாக ஆறு ரூபாய் செலுத்த வேண்டும்.

அதனை நேற்றே நாம் பதிவு செய்திருந்தோம். ஆதலால் அவசரப்படத்தேவையில்லை.

நான் ஊருக்கு எப்போது போகும் போதும் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் இருக்கும் "இராஜேஸ்வரி பவனுக்குப்" பக்கத்து றொட்டிக்கடையில் ஒரு முட்டை றொட்டி யும், இரண்டு பிளேன் றொட்டியும், ஒரு ஆனைவாழைப் பழமும் பார்சல் பண்ணிக் கொள்ளுவேன்.

இதுவே இரவுச்சாப்பாடு.

எனக்கு விருப்பமானதும் தான். எப்போது போனாலும் இவற்றையே வாங்கிச் செல்வேன். இதைவிட இராஜேஸ்வரி பவனில் புதிதாய் வெளிவந்த இரண்டு வீரகேசரிப் பிரசுரங்கள் வாங்குவேன். இதுவும் எப்போதும் தான். போக ஒன்று திரும்பிவர ஒன்று என்று. இவ்வாறு அநேக புத்தகங்களை வாசித்து முடித்திருக்கிறேன். பிரயாணத்திற்கு நல்ல தொரு துணை புத்தகங்கள் தான்.

புத்தகத்தில் உள்ள எத்தனை விதமான மனிதர்களோடு பயணம் செய்ய முடிகிறது.

மெயில் வண்டி போகிற நேரத்திற்கு புகையிரத நிலையம் நிரம்பி வழியும். போகிறவர்களை விட அவர்களை அனுப்ப வருகிறவர்களே அதிகம்.

மாலை நேரம் கொழும்புக் கோட்டை புகையிரத நிலையம் அருமையாக இருக்கும். பகலில் எறித்த கொடுவெயில் தணிந்து குளிர்மை நிறைந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் உள்ள துறைமுகத்திலிருந்து வரும் சீதளக்காற்று இதமாக உடலை வருடிவிடும்.

நானும் வின்சனும் எப்போதும் இங்கு வருவதுண்டு.

கடிதங்களை மெயிலில் போடுவதற்காக, சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்கள் கண்டிப்பாக வருவோம்.

புகையிரத நிலையத்திற்கு முன்பாக அந்தப் பக்கம் வரிசையாக ஒரே பழக்கடைகள் தான்.

பழங்களைச் சாப்பிடும் போது தரும் சுவையை விட, காற்றோடு கலந்து வரும் சுவையே அதிகம் இன்பந்தரும். நாவில் எச்சில் ஊற வைக்கும்.

எனக்கும் வின்சனுக்கும் இந்த நேர உலாத்தல் நன்கு பிடித்திருந்தது. இது மாலை நேரப் பொழுது போக்காகவும் எமக்கு அமைந்து விடுவதுண்டு.

பஸ் நிலையத்திற்குப் பக்கத்திலுள்ள அரசமரத்தடிவரை இந்தப் பழக்கடைகளின் ஆதிக்கம் இருக்கும்.

பக்கத்திலிருக்கும் பாய் கடையில் ஏலக்காய் போட்ட ரீ அருமையாக இருக்கும். இடது பக்கம் திரும்பினால் கொழும்பு பிரதான பஸ் நிலையம் எந்த நேரமும் சனம் நிரம்பி வழியும்.

கடிதத்தைப்போட்டு விட்டு புகையிரத நிலைய கன்டீனில் தேநீர் அருந்துவது வழமை. இங்கே தேநீர் சுவையாக இருக்கும். நல்ல தரமான தேயிலைத்தூள் சுவைக்கச் சுகந்தம் தரும்.

இன்றும் நாமிருவரும் தேநீர் அருந்திவிட்டு வியாபாரம் சம்பந்தமாக கதைகளைப் பரிமாறிக்கொண்டோம். புகையிரத நிலையம் பிரயாணிகளால் நிரம்பி வழிந்தது. இடம் பிடிக்க வென்றே அதிகம் பேர் வருவார்கள். எனக்கு அந்த பயம் இன்று இருக்கவில்லை.

வின்சனிடம் விடைபெற்று புகையிரதத்தில் ஏறினேன். உறங்கலிருக்கை முன்னுக்கு என்றபடியால் பிரச்சனையில்லாமல் ஏறி எனது இருக்கையில் அமர்ந்து கொண்டேன். புகையிரதம் புறப்பட ஆயத்தமானது. நாளை மறுநாள் வருவேன், அதுவரையில் வின்சன் எனது வியாபாரத்தை பார்த்துக்கொள்வான் அந்த நம்பிக்கை எனக்கு நிறைய இருந்தது.

புகையிரதம் நகர ஆரம்பித்தபோது வின்சனுக்கு கையசைத்து இருக்கையில் அமர்ந்து கொண்டேன். மறுநாள் திரும்புவதானாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்சனைப்பிரிந்தது ஏதோமாதிரி இருக்கும். அந்த அளவிற்கு எங்கள் இருவருக்குமான நட்பு இருந்தது. வின்சனுக்கும் அவ்வாறே இருந்திருக்கும்.

மெயிலில் கடிதம் போடுவதற்காக வந்து இருவரும் கதைச்சுக் கதைச்சு நடந்து கொச்சிக்கடை அந்தோனியார் கோவில்வரை வருவோம்.

இரவு நேரத்தில் இந்த இடம் சொர்க்கமாகத் தெரியும். இங்கும் கப்பல் துறைமுகத்தில் பட்டுவரும் குளிர் காற்று பகலில் எறித்த வெயிலின் வெப்பத்தைத் தணித்து உடம்பில் உரசும்போது எவ்வளவு சுகம். கொச்சிக்கடை அந்தோனியார் கோவிலுக்கு தரிசிக்க வரும் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும்.

கொஞ்சத்தள்ளி இருக்கும் ராமனாதன் சிவன்கோவில் பக்தர்கள் என்றும் சேர்ந்து கொள்வார்கள். எந்தவித மதவேறுபாடும் இல்லாமல் இரண்டு கோவிலுக்கும் போய்வருவார்கள். இது எனக்கும், வின்சனுக்கும் பிடித்திருந்தது. நாங்கள் இருவருமே இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்கள் தான்.

இருவரும் பிரியமனமில்லாமலே பிரிந்து செல்வோம். இது ஒவ்வொரு நாளும் நிகழும்.

புகையிரதம் மருதானை, றாகம, என்று தரித்து நின்று சனத்தையும் நிரப்பிக்கொண்டு புறப்பட்டது.

எனது பெட்டிக்குள் கணிசமான அளவு பிரயாணிகள் நிரம்பி யிருந்தார்கள். எனக்குப் பக்கத்தில் வயது போன தம்பதிகள் அமர்ந் திருந்தார்கள். முன் சீற்றில் நடுத்தர வயதைச்சேர்ந்த இரு ஆண்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அனைவருமே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே! பார்த்துச் சிரித்துக் கொண்டோம்.

வியாங்கொடை, வந்ததும் எனது சாப்பாட்டு பார்சலை எடுத்தேன். கமகம என்று வாசனை மூக்கைத்துளைத்தது. முட்டைரொட்டி, ஆனை வாழைப்பழம். எனக்கு நன்றாகப்பிடிக்கும். இந்த மணம் மற்றவர்களுக்கும் பசியை ஏற்படுத்தியிருக்க வேணும். தங்கள் தங்கள் பார்சலை எடுத்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

புகையிரதம் எதையும் சட்டைசெய்யாது தனக்கே உரித்தான சத்தத்துடன் விரைந்து கொண்டிருந்தது.

புத்தகத்தை எடுத்து வாசிக்கத்தொடங்கினேன். அது திரு அ.பாலமனோகரன் எழுதிய "நிலக்கிளி" நாவல் இதற்கு சாகித்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டல விருதும் கிடைத்திருந்தது. இதன் ஆசிரியர் எமது பகுதியைச் சேர்ந்தவர். தண்ணிமுறிப்பை பகைப்புலமாகக்கொண்டு எழுதிய நாவல் இது. அந்தப்பிரதேசத்தில் நான் வாழ்ந்திருக்கிறேன். கதை மாந்தரோடு வாழ்வது போல் எனக்கொரு உணர்விருந்தது. மூடி வைக்க முடியவில்லை. அந்த அளவிற்கு நாவலின் எழுத்து என்னை ஆட் கொண்டிருந்தது.

என்னோடு இருந்தவர்கள் அனைவரும் நித்திரையில் இருந்தார்கள்.

அந்த புகையிரத நிலையம் வந்த போது நான் நாவலை வாசித்து முடித்திருந்தேன். திரும்பி வரும்போது வாசிப்பதற்காக இரத்தினசபாபதி அவர்கள் எழுதிய "யுகசந்தி" நாவலை வைத் திருந்தேன். இவர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர். இதுவும் நல்ல நாவல் என்று என்நண்பன் சொல்லியிருந்தான்.

என்னோடு இருந்தவர்களில் பலர் இறங்கிக் கொண்டார்கள். அந்த வயது போன தம்பதிகளும் சிரித்துக் கொண்டு விடை தந்தார்கள்.

யன்னலுக்கு வெளியில் தலையை நீட்டி எட்டிப் பார்த்தேன். அனுராதபுரம் அட அதற்கிடையில் அனுராதபுரம் வந்து விட்டதா? புத்தகம் வாசித்ததால் நேரம் போனதே தெரியவில்லை. மணி பன்னிரண்டைக் கடந்திருந்தது.

அனுராதபுரம் சரித்திரப் புகழ்வாய்ந்தது. பல இனக்கலவரங் களை நிகழ்த்திக் காட்டிய பூமி. காலத்திற்குக் காலம் தேர்தல் முடிந்த கையோடு இந்த இடத்தில் வைத்து நூற்றுக்கணக்கான தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். எரித்து உடமைகள் சூறையாடப்பட்டு, ஓடி ஒழிய இடமில்லாமல் சொல்லி மாளாது. இப்படி எத்தனையோ கொடுமைகள். தேர்தல் காலங்களில் பெரும் பான்மை அரசியல் வாதிகளால் அவிழ்த்து விடும் தமிழர்களுக்கு எதிரான பரப்புரைகள். இதனால் திட்டமிட்டு காடையர்களால் மேற்கொள்ளப்படும் மிருகத்தனமான செயற்பாடுகள்.

அனுராதபுரம் என்றால் எப்போதும் சின்னப் பயமிருக்கும். அது மற்ற நாட்களிலும் தான். இந்தக் கலவரத்தின் போது எத்தனையோ தமிழர்களை பாதுகாத்த சிங்கள மக்களின் மனிதாபி மானத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

எங்கள் பகுதியில் இருந்தும் இனத்துவேசப் பிரச்சாரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் இல்லை. எல்லாம் சேர்ந்தே கலவரங்களாக வெடிப்ப துண்டு.

இன்றைக்கும் ஒரு கும்பி சனம் புகையிரத மேடையில் அவசரமாக ஓடி வந்தது. நான் இருந்த பெட்டிக்குள் தான் அவர்கள் அனைவரும் ஏறிக்கொண்டார்கள். உறங்கலிருக்கை என்ற கதைக்கே இடமில்லை. இந்த றெயினைப் பிடிப்பதற்காக அவசரமாக ஓடி வந்திருக்க வேணும். சில பெண்கள் கைக்குழந்தைகளுடன் வந்திருந்தார்கள். எல்லோருமே சிங்களச் சமூகத்தைச்சேர்ந்தவர்கள்.

எங்கோ ஒரு குக்கிராமத்தில் வசிப்பவர்களாக இருக்க வேணும் என்று, நான் முடிவெடுத்துக் கொண்டேன். அவர்கள் தோற்றம், கதை, எல்லாமே அப்பாவித்தனத்தை எடுத்துக் காட்டியது

எனக்கு எதிரே இருந்த இருக்கையில் கைக்குழந்தையுடன் ஒரு பெண் உட்கார்ந்து கொண்டாள். இவ்வளவு மெலிந்த பெண்ணை என் வாழ்நாளில் காணவில்லை. அந்த அளவிற்கு அவள் உடல் தோற்றம் இருந்தது. வந்த நேரம் தொடக்கம் அந்தப்பிள்ளை அழுதுகொண்டே இருந்தது. தாயைப்போல் மெலிந்த தேகம். ஏழ்மையின் சுவடுகள் அந்த இருவரிலும் தெளிவாகத் தெரிந்தது. கருவளையம் சூழ குழிவிழுந்த கண்கள். கடுமையான சுகயீனம் வந்து இன்றுதான் மீண்டு வந்த கண்கள் போல் காணப்பட்டது. அவர்கள் அனைவரும் அவசரமாக ஓடி வந்திருக்க வேணும். உடல் வேர்த்து சின்னதாக ஒரு மணம் வரத்தான் செய்தது. எதிர்ச்சீற்றில் இருந்த படியால் என்னைப் பார்த்து சிறு புன்னகை ஒன்றை உதிர்த்தாள். நானும் பதிலுக்கு புன்னகைத்தேன்.

“அவன் ஊருக்கு வரட்டும். என்ன செய்வேனென்று இப்ப சொல்ல மாட்டேன். நல்லா ஏமாற்றிப் போட்டான். “எல்லோரும் வாங்கோ நல்ல சாப்பாடும் தந்து திரும்பவும் கூட்டிக்கொண்டு வந்து ஊரிலே விடுகிறேன் என்றான்.“ கூட்டம் முடிய ஆளுமில்லை, சாப்பாடும் இல்லை. இதுகள் எப்படித் திரும்பிப் போகப் போகப் போகுதுகள் என்றாவது நினைத்தானே! நினைக்கவே ஆத்திரமாக வருகுது.” அவர்களோடு வந்தவன் ஆக்கிரோசமாகக் கத்தினான். “உண்மைதான் நல்லா ஏமாத்திப் போட்டான். குடிச்சுப் போட்டு எங்க பிரண்டு போய்க்கிடக்குதோ” ஏமாத்திப் போட்டான் என்ற ஆத்திரத்தில் எனக்குப் பக்கத்தில் இருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்ணும் உரத்துக் குரல் கொடுத்தாள்.

“அண்ணை உங்களுக்காகத்தான் நாங்கள் வந்தோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாட்டி அந்த நாற்றம் பிடிச்சவனோடை வெளிக்கிட்டிருக்க மாட்டம். வருவார்.. வராமல் எங்கு போவார்."

உரத்த குரல்கள் ஆத்திரத்தில் ஒலித்த போது விழி பிதுங்க அங்கும் இங்கும் பார்த்தேன்.

இதுவும் தேர்தல் காலம் என்பதால் உள்ளுக்குள் எனக்கும் அந்தப் பயமிருந்தது. அவர்களது பேச்சு யாரையோ குறிவைச்சு தாக்குவதாக இருந்தது.

கடைசிக் கூட்டம். நிறையச் சனத்தைக் கூட்டிவரவேணும் என்று ஒரு வேட்பாளர், காசு கொடுத்து விட்டிருக்க வேணும். அவன் லொறியைப் பிடித்து சாப்பாடும் தருவதாகச் சொல்லி கிராமம் கிராம மாகப் போய் அள்ளிப்போட்டுக் கொண்டு வந்திருக்கிறான். கூட்டி வந்த சனத்தை அந்த வேட்பாளருக்குக் காட்டி விட்டு அவன் காசை யும் வாங்கிக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் மாறிவிட்டான்.

இவர்கள் அனைவரும் மதவாச்சியில் எங்கோ ஒரு குக் கிராமத்தில் வாழ்பவர்கள். கூலிவேலை செய்து பிழைப்பவர்கள் ஒரு நேர நல்ல சாப்பாட்டிற்காகவும் அனுராதபுரத்தைப் பார்ப்பதற்காக வும் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். கடைசியில் அவன் எதுவுமே செய்யாமல் சாப்பாடும் வாங்கிக் கொடுக்காமல் காசைச் சுருட்டிக் கொண்டு மாறிவிட்டான்.

இவ்வளவையும் அவர்கள் பேச்சிலிருந்து அறிந்து கொண்டேன். இவர்கள் எப்படிப் போவார்கள் என்பதையே அவன் நினைக்கவில்லை. இவ்வளவு அப்பாவிகளா?

எப்படியும் இம்முறை அரசாங்கம் மாறும் இலவசமாக அரிசி கிடைக்கும் கொஞ்சமாவது தங்கள் பசி போகும் என்று அவர்கள் கதைச்சுக் கொண்டார்கள்.

"ஓ நம்பிக் கொண்டிரு" அதற்கு மறுப்புத் தெரிவித்தவர்களும் இருந்தார்கள்.

அந்தப் பிள்ளை வீரிட்டுக் கத்திக்கொண்டிருந்தது. "ஏய் பாலைக் குடன்" வந்த பெண் ஒருத்தி எரிச்சலாகக் கத்தினாள். நான் என்ன குடுக்காமலா இருக்கிறன். அதிலே எங்கே இருக்கு பால்? வந்தால் தானே. படாரென மேல் சட்டையைத் தூக்கி இந்தாப் பார் இதில இருந்து என்னதான் வரும்.

காற்றில்லாமல் காணப்படும் பலூன் போல் அந்த மார்பகங்கள் உடலோடு ஒட்டிக்கொண்டிருந்தன. மார்பகங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைக்காம்புகள் பிள்ளை, பால் குடித்து வராமல் இழுத்து இழுத்து நீண்டு போயிருந்தன.

வழிச்செடுத்தாலும் ஒரு சொட்டு சதையும் வராது. அப்படி அவள் தேகம் ஒட்டிப்போய்க் கிடந்தது. விலா எலும்புகள் புடைத்துக் கொண்டு நின்றன.

பிள்ளையை அணைத்து முலைக்காம்பை அதன் வாயில் திணிக்க முற்பட்டாள். அந்தப்பிள்ளை அதனை வாயில் எடுத்துக் கொள்ள மறுத்து கைகளால் தட்டிவிட்டது. பல முறை அதில் பால் வராமல் ஏமாற்றப்பட்டதை அது காட்டியது.

தாயின் முகத்தை அண்ணாந்து பார்த்து வீரிட்டு கத்தியது. ஒட்டிய கை கால்கள் நீண்ட கழுத்து தசைப்பிடிப்பற்ற தேகம் ஊட்டச் சத்தில்லாத குழந்தை போல் அந்தப்பிள்ளை. எத்தியோப்பியா நாட்டுப் பிள்ளையை ஞாபகப் படுத்தியது.

ஒட்டிய அந்தத் தாயின்தேகத்தில் எங்கிருந்துதான் அந்த வேர்வை வந்ததோ! வறுமையின் இயலாமை வியர்வையாக வந்திருக்க வேணும். பிள்ளையைப் பார்த்து அவள் கண்களும் கலங்கின.

எனக்கு அந்தத் தாயைப்பார்க்கவே பரிதாபமாக இருந்தது. நான் வேற்றான் ஒருவன் இருக்கிறேன் என்பதைக் கூட சட்டை செய்யாமல் ஒரு தாயாக அவள் நடந்து கொண்டாள்.

அந்த மார்பகங்களில் தெரிந்த வரட்சியும், நீண்ட முலைக் காம்புகளும் என் கண்களைக் கலங்க வைத்தன.

அவளுக்காகவும், அந்தக் குழந்தைக்காகவும் என் இதயம் உள்ளுக்குள் இரங்கி அழுதது.

நான் வீட்டிற்குக் கொண்டு போவதற்காக வாங்கி வந்த பிஸ்கற் பைக்கற்றை எடுத்து பிரித்து நீட்டினேன்.

எந்த மறுப்பும் சொல்லாமல் வாங்கிக் கொண்டவள் பிள்ளையை மடியில் கிடத்தி, சின்னதாக பிச்சுக் கொடுத்தாள். அது வக்கு வக்கென்று வாங்கிச் சாப்பிட்டது. கொடுக்கத் தாமதித்த போது அடம்பிடித்து அழுதது.

அது பெரிய பிஸ்க்கற் பைக்கற் வந்திருந்த பிள்ளைகளில் விழித்திருந்த பிள்ளைகளுக்கு நீட்டினேன். அவர்கள் பறிப்பது போல் வாங்கிக் கொண்டார்கள். வந்திருந்த பெரியவர்களும் வாங்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். அந்தத் தாயையும் சாப்பிடச் செய்தேன். கொண்டு வந்த தண்ணீர் போத்தலையும் கொடுத்து முடித்தேன்.

எனக்கு இனி இல்லைத்தான். ஆனாலும் எனக்குள் வந்த திருப்தி இப்போதும் என்ற நிம்மதிப் பெருமூச்சைத் தந்தது. பசி தீர்ந்த பின் அந்தப் பிள்ளை தாயைப்பார்த்துச் சிரித்தது. அந்தத் தாயின் ஒட்டிய முகத்தில் இருந்தும் சிறு புன்னகையைக் கண்டேன்.

மதவாச்சியில் புகையிரதம் நின்றது. அனைவரும் இறங்கினார்கள். அவர்கள் அனைவரும் என்னிடம் விடைதந்தார்கள். அதில் நன்றி தெரிந்தது. அந்தத் தாயும் கூட. நன்றியோடு அவள் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் ஈரம் இருந்தது.

அவர்கள் இருந்த இடத்தில் அவர்களின் ஏழ்மையின் மணம் மாத்திரம் ஒட்டிக்கொண்டது. மக்கள் அப்பாவிகள் எந்த இனமாகினால் என்ன? எல்லோரும் நல்லவர்களே என்று என்னை அறியாமலே வாய் முணுமுணுத்தது.

மச்சான் நான் உனக்கு எதுவும் சொல்லக் கூடாது. அரசியல் அவரவர் சுதந்திரம். ஆழமாகச் சிந்தித்தால் உனக்கும் விளங்கும். அரசியல் வாதிகளால் முழங்கும் முழக்கங்கள் உனக்கு அதிர்ச்சி உணர்ச்சியைத் தரும். ஆனால் அவர்களுக்குள் வரும் அந்த உணர்ச்சி மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான்.

எங்களிடம் பிரச்சனை உண்டு. அதைத் தீர்ப்பதற்கு, நீங்கள் தேர்ந்தெடுக்கும் வழி மாறவேண்டும்.

இனவாதம், மதவாதம், மொழிவாதம் இறுதியில் பெரும் அழிவைத்தான் தோற்று விக்கும். இதன் உச்சக் கட்டம் ஆயுதங்கள் பேசலாம். அதனால் வரும் அழிவு இரண்டு பக்கமுமே ஏற்படும். அதிகூடிய இனவாதம் எமக்கு ஆதரவாகப் பேசிக்கொண்டிருக்கும் பெரும்பான்மை இன, அரசியல் வாதிகளையும் எமக்கெதிராகத் திருப்பி விடும்.

எல்லோருக்கும் பொதுவான பிரச்சனையென்றால் அது வயிறுதான் பசி. அதனை வைத்துப் போராடினால் பெரும்பான்மை, பாட்டாளி வர்க்கமும் வந்து சேரும். அப்போதுதான் சுயநல அரசியல் வாதிகள் தனிமைப்பட்டு போவார்கள். எங்களைவிட வயிற்றுக்கு வழியில்லாதவர்கள் பெரும்பான்மை இனத்திலும் அதிகம் உண்டு.

அன்றாடம் வயிற்றுக்கு சாப்பாடில்லாமல் எத்தனைபேர் அரைவயிறு, கால்வயிறென்று பசியோடு வாழ்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை இணைத்தால் தான் போராட்டம் அதிக சேதாரமின்றி விடுதலையைப் பெற்றுத் தரும்.

இங்கு தமிழர்கள் என்றொரு இனம் இருக்கிறார்கள் என்று தெரியாமலே குக்கிராமங்களில் சிங்கள மக்கள் பலர் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். உனக்குத் தெரியுமோ தெரியாது.

எந்த இனமக்கள் என்றாலும், மக்கள் அப்பாவிகளே! இருபாலாரும் தேர்தல் காலத்தில் கக்கும் இனத்துவேச வார்த்தைகள் நிரந்தர பகைவர்களாக்கி இருக்கிறது. தேர்தல்கள் முடிய ஏற்படும் இனக்கலவரங்களுக்கு இதுவே வழிசமைக்கிறது.

நீ வியாபாரத்தில் இப்போதுதான் முன்னேறி வருகிறாய் இதற்கெல்லாம் போகவேணுமென்று அவசியமில்லை. தேர்தல் முடிய எல்லாமே அடங்கி விடும். மீண்டும் கோகிலாதான். எனது அறை நண்பன் மரி இதைசொன்னபோது என்ன மனுசன் இவன் நாம் தமிழர்கள் என்ற உணர்வுகள் இல்லாமலே வாழுகின்றானே என்று மனதிற்குள் கறுவிக்கொண்டதே உண்மை. ஆனால் அவன் மிகவும் நல்லவன். கொழும்பிற்குப் போனபோது என்னை அரவணைத்து அறையில் மாத்திரமல்லாது தன் இதயத்திலும் இடம் தந்தவன்.

பாடசாலைப் பருவத்திலேயே இடதுசாரிக் கொள்கையின் பால் ஈர்க்கப்பட்டவன். பொதுவுடமைக் கருத்துகள் அவன் பேச்சில் நிறைந்திருக்கும். இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகள் அவனிடம் இருப்பதில்லை. பாட்டாளி மக்களை ஒன்றிணைப்பதே விடுதலைக்கு வித்தாகும் என்பதில் நம்பிக்கை கொண்டவன்.

இந்த அப்பாவிகளைக் கண்டதிலிருந்து அவன் சொன்னது சரி போலவே எனக்குத் தோன்றியது. எத்தனை தேர்தல்கள், உண்ணா விரதங்கள், சத்தியாக்கிரகங்கள் என்று எங்கள் அரசியல் வாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறது. சற்றுமுன் சந்தித்து விடைபெற்றவர் களுக்கு இது எல்லாம் தெரியுமா? என்ன?

மக்கள் நல்லவர்கள் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன்.

இது யோசிக்க வேண்டியதே.

எனக்குள் ஒரு தெளிவு வந்தது. புகையிரதத்தை விட்டு இறங்கினேன். மாங்குளம் இரவில் பெய்த பனியினால் உறைந்து போய்க்கிடந்தது. மெயில் பஸ் புகையிரத நிலைய வாசலில் தரித்து நின்றது. விடியப்புறம் மூன்று மணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்குளத்தில் இருபத்தினாலு மணித்தியாலமும் தேனீர்க் கடைகள் திறந்திருக்கும். தேனீருடன் சுடச்சுட தோசையும் சாப்பிடலாம். பக்கத்தில் தெரியும் தேனீர்க் கடையை நோக்கி நடந்தேன்.

குளிரில் மாடுகள் தார்சூட்டில் கும்பலாகப் படுத்திருந்தன.

அந்த தாய்மையின் மெலிந்த தேகமும் ஒட்டிய மார்பில் தொங்கிக் கொண்டிருந்த நீள முலைக்காம்புகளும் ஒரு முறை நினைவில் வந்து போயின. பாவம் மக்கள். முணுமுணுத்தது வாய்.

எதிரே தேர்தல் விளம்பரப்பலகை. வண்ணவிளக்குகளால் அதனைப் போக்கஸ் பண்ணியிருந்தார்கள். அதில் பொறிக்கப்பட்ட வாசகத்தினை கண்கள் தேடி வாசிக்க ஆரம்பித்தன.

மக்களை மீட்க வந்த தலைவன்.

எங்கள் இனத்தைக் காக்க வந்த உத்தமன்.

எதிரிகளுக்குச் சிம்ம சொர்ப்பனமானவன்.

வெல்லுவான் எம்மண்ணை வெல்லுவான்.

எழுந்து வாருங்கள் தோழர்களே!

அடிமையாய் வாழ்ந்தது போதும்

ஐக்கியமே முக்கியம் என்பதை உணருவோம்.

ஒவ்வொரு வரிகளையும் வாசிக்கும் போதும் கால்கள் அந்தரத்தில் மிதந்தன. என்னை அறியாமல் உடம்பில் சூடேறி தேகம் புல்லரித்தது.

அனைத்தையும் மறந்தேன். இரவு எதைப் பேசுவது என்பதை மனம் திரும்பவும் நினைக்க ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னாச்சி மாமி!

அப்புவின்ர பூர்வீகம் பொக்கணையென்று எங்களூரில் பல பேருக்கும் தெரிவதில்லை. அதுவும் என்ர வயதுக் காரர்களுக்கு துப்பரவாகவே தெரியாது.

அப்புவுடன் சேர்த்து மூன்று சகோதரங்கள். பெரியப்பு, சின்னாச்சிமாமி, அப்பு ஆகியோரே அந்தக் காலத்தில் மூன்று பிள்ளைகள் மாத்திரம் குடும்பத்தில் இருப்பது அதிசயம் தான்.

ஏகப்பட்ட பிள்ளைகள் பிறந்திருக்க வேணும். குடும்பக் கட்டுப் பாட்டைக் கடைப்பிடிச்சிருப்பினம், என்று பின்னாளில் நானும் நினைத்த துண்டு.

அப்புவின்ர தாய் கண்ணியம்மா அப்புவைப் பெத்து சில நாட்களிலே வலிகண்டு இறந்து விட, அப்புவின்ர அப்பு சின்னத்தம்பி பின்னாளில் மூன்று பிள்ளைகளை வளர்ப்பதற்காகவே கல்யாணம் செய்ய வில்லை. அப்படியொரு தியாகம் அந்த நாளையில் அந்த மனிதர் செய்திருக்கு.

அவர் கூட அதிக நாள் வாழ்ந்ததில்லை. அவரும் பிள்ளைகளை தவிக்க விட்டு நேரத்தோட போய்ச் சேர்ந்திற்றார்.

தம்பிமுத்து மூத்தவர். இவரது தலைமை யிலேய குடும்பப் பொறுப்பு போய்ச் சேர்ந்தது.

தம்பிமுத்து, சின்னாச்சி, பொன்னையா இவர்கள் மூவரும் அன்பான சகோதரங்கள். எல்லோருக்கும் பெரியப்பு மீது மரியாதை இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியப்பு, வயல் வேலை நாட்களில் எங்களுக்கு உதவி செய்ய வந்து நிற்பார். அவருக்கும் மூன்று பிள்ளைகளே. நடராசா, நாகராசா, பொன்னம்மா. ஆகியோர், பெரியம்மாவும் இறந்து போக அவரும் பிள்ளைகளுக்காகத் திருமணம் செய்யவில்லை.

பின்னாளில் இரண்டு சகோதரங்களுக்கும் உதவியது சின்னாச்சி மாமியே. அவரின் திருமணத்திற்குப் பின்னும் அந்த வீட்டிலேயே எல்லோரும் இருந்தார்கள். அப்பு, அம்மாவைத் திருமணம் செய்து போகும் மட்டும் மாமி எங்களுக்கு இன்னொரு அம்மா. அன்பைச் சொரிவதில் அவருக்கு நிகராக யாரையும் நாம் பார்த்ததில்லை.

எங்கள் எல்லோருக்குமே மாமியை நன்கு பிடிக்கும், எங்களுக்கு மாத்திரமன்றி ஊரில் உள்ளவர்களுக்கும் தான்.

மாமாவை எனக்குத் தெரியாது. நான் சின்னதாக இருந்த போதே மாமா இறந்து விட்டாராம். மாமிக்கு ஒரே மகன். அவரும் படித்து பின்னாளில் ஆசிரியரானார்.

மாமா ஒரு புகழ் பெற்ற பரியாரியாம். சுற்று வட்டாரக் கிராமங்களில் வாழ்பவர்களுக்கு அவர் ஒரு கடவுள் மாதிரி என்பார் களாம். மாமா இறந்த பின் மாமியே பரியாரியானார். அவர் இருந்த போது மூலிகைகள் முதல் கொண்டு அரைப்பது எல்லாமே மாமி தான்.

என்னென்ன மூலிகைகள் என்பதும் அவவுக்குத் தெரிந் திருந்தது. அதனால் அவரும் வைத்தியரானார். மாமி அழகானவர். நல்ல நிறம். அவ ஒரு சின்னமனுசி. அடுத்தவர் மீது அன்பு காட்டுவதில் பெரிய மனுசி. எங்கள் வீட்டிற்கு மாமி வரப்போறாவாம் என்று கேள்விப்பட்டதுமே வீடே குதூகலிக்கும். முன்பெல்லாம் அங்கிருந்து வண்டில் கட்டிக்கொண்டுதான் வருவார்கள். நாக ராசண்ணை, இல்லையேல் நடராசண்ணன் வண்டில் ஓட்டி வருவார்கள். விதவிதமான பலகாரங்கள் வரும். அவ்வளவு ருசியாக மாமி பலகாரம் செய்வா. சாப்பாடும் தான். மாமி வீட்டிற்கு வந்தால் அவ வின்ர மடியில் படுப்பதற்கு நாங்கள் அடிபடுவோம். வெள்ளைப் புடவையே மாமி எப்போதும் கட்டியிருப்பா, நீலக்கரை யிருக்கும். இல்லையேல் சிவப்புக் கரையிருக்கும். வெள்ளைச்சாறியில் பொட்டுப் பொட்டாக சின்ன பூக்கள் இருக்கும் சாறியையும் மாமி கட்டுவா.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாமிவரும்போது, கண்டிப்பாக நெய்ப் போத்தலும் இருக்கும். மாமி வீட்டில் முன்பெல்லாம் எருமைமாடுகள் நிறைய இருந்தன. சாணி அள்ளி பால்கறக்கவே நேரம் காலை பத்துமணியைத் தாண்டும். இத்தனைக்கும் விடிய அதிகாலை ஐஞ்சு மணிக்கே மாமி எழுந்திடுவா. எருமை மாட்டுடன் பசுமாடும் நிறைய இருந்தன. எந்த நேரம் மாமி வீட்டை போனாலும் நெய் வாசம் மூக்கைத்துளைக்கும். எனக்கு அது மிகவும் பிடிக்கும். கொம்பறையில் நெல்லும் குடத்தடியில் நெய்யும் என்று சொல்லுவார்கள். அதற்கு மாமிவீடு ஒரு உதாரணம். கணவன் இறந்தபின் மாமி பெரியப்பு ஆட்களுடன் பொக்கணையில் வாழ்ந்தவ.

மகன் சேது, வாத்தியார் ஆனபோது அங்கிருந்து உள்ளிப் பள்ளத்திலுள்ள தோட்டத்திற்கு குடிபெயர்ந்தார். அப்புவின் பங்கிற்கு எங்களுக்கும் ஒரு பகுதி தென்னந்தோட்டம் இருந்தது. இந்தத் தோட்டம் புதுமாத்தளனில் இருந்தது. எங்கட தோட்டத்தின் எல்லையில் முதல் கொட்டில் ஒன்று போட்டிருந்தா. அதன் மேட்டுப் பகுதியில் வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

தற்காலிகமாகவே இந்தக் கொட்டில். அவ இருக்குமிடம் துப்பரவாகவே இருக்கும். எங்களுக்கு அது சொர்க்கம். கீழ்த்தளம் மணலாகவே இருந்தது. மணலை அரித்து அதற்குள் இருக்கும் சின்னக்கற்களை வெளியில் எடுத்திருப்பா.

கால்வைக்கப் புதையும் அதற்குமேல் சாக்கை விரித்து, சாக்குக்கு மேலாக பாயை விரிச்சுப் படுத்தால் பஞ்சு மெத்தை தோற்றுவிடும்.

நான் இரண்டு மூன்று முறை அங்கு படுத்திருக்கிறேன். வீடு கட்டி முடிய மாமி அந்த வீட்டிற்கு மாறியிருந்தா. பிறகு இந்த குடிசை யில் முத்துப்பிள்ளை ஆச்சி வந்திருந்தா. எங்கள் தோட்டத்தில் தேங்காய் விழுந்தால் பொறுக்கி குவிச்சு வைச்சிருப்பா. எங்களுக்கு செய்தி சொல்லி அனுப்பி விடுவா. பிறகு நாங்கள் போய் உரிச்சுக் கொண்டு வருவம். சில வேளை சைக்கிளில், சில வேளை வண்டில் கொண்டு போய் ஏற்றி வருவோம். முத்துப்பிள்ளை ஆச்சியும் மிகவும் நல்லவர். எங்களிடம் அவ்வளவு அன்பு. கிராமத்தில் அந்த நேரத்தில் வாழ்ந்தவர்கள். நல்லவர்கள் என்றே நான் இப்போதும் நினைப்பதுண்டு. வஞ்சகம் சூதறியா வெள்ளந்தி மனிதர் இவர்கள்.

மாமியின் இந்த வீடு களிமண்ணால் கல்லரிஞ்சு, சுவர் எழுப்பி கட்டப்பட்டதுதான். மேல் கூரை தென்னங் கிடுகினால் வேயப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது. தோட்டத்தில் விழுந்த தென்னை ஓலைகள். அவவே துரவுக்குள் ஊறவைச்சு கிடுகு பின்னுவா. நேரம் கிடைக்கும்போது கிடுகு பின்னி அடுக்கி வைச்சு விற்பதுமுண்டு. மாமி ஓய்வறியா உழைப்பாளி. அவ கட்டின வீடு. ஒரு அறைதான். முன்னால் பெரிய கூடம். அவவும் மகன் சேதுவும் தான் அங்கு தங்கி இருந்தார்கள்.

அந்தக் கூடத்தில் நாற்பது பேர்வரை படுக்கலாம். தளம் சாணத்தால் தான் மெழுகியிருக்கும் சள்ளென்றிருக்கும். சீமெந்தை விட அழுத்த மாக இருக்கும். சாணம், கொவ்வை இலைச்சாறு, வேறு ஏதோ ஒரு மர இலைச்சாறு என்னென்று மறந்து விட்டேன். எல்லா வற்றையும் கலந்து மெழுகுவா. அது இரண்டு நாள் வேலை. முதல் நாள் மெழுகிவிட்டு. மறுநாள் பெரிய தெள்ளுக்கொட்டையால் (கடலில் அடையும், ஒருவகை மரத்தின் விதை) தீத்திவிடுவா. குந்தியிருந்து அழுத்தமாகத் தீத்துவா. பல மணிநேரம் செல்லும். தளம் கருமை கலந்த பசுமையாக இருக்கும். புது மாத்தளன் நல்ல வெயில் எறிக்கும் பகுதி. கோடையில் இங்கு உப்பு விளையும். அதனால் வெம்மையாக இருக்கும். ஆனால் மாமி வீடு எந்த நேரமும் குளிர்மை யாகவே இருக்கும். எங்கள் குடும்பம் போனால் அந்தக் கூடத்தில் தான் படுத்திருப்போம். சள்ளென்றிருக்கும். தன்னுடைய புடவை களாலேயே போர்த்தி விடுவா. எல்லாமே வெளுத்து அடுக்கி வைத்திருந்த புடவைகளே. கமகமவென்று வாசம் மணக்கும்.

வல்லிக் கட்டாடியே உடுப்புகளை எடுத்துக் கொண்டுபோய் சலவை செய்து கொடுப்பார். அவர் மாமி குடும்பத்தின் ஒரு உறவு போல்தான். நெல்லடிச்சு முடிய நெல்லளந்து கொடுப்பார்கள். இது பொக்கணையில் நடைமுறையில் இருந்தது. அதே போல்தான் மாத்தளன் கடலில் மீன்பிடிப்பவர்கள், கேட்ட நேரங்களில் மீனைக் கொண்டு வந்து கொடுப்பார்கள், இவர்களுக்கும் நெல்லளந்து கொடுப்பதுண்டு.

இந்தக் களப்புக் கடலில் சின்ன மீன்களே அதிகம் பிடிபடும். மாமியின் கைப்பக்குவம் கரும்பாக இருக்கும். குசுனிக்கிள் இருந்து தான் சாப்பிடுவோம். மாமி குந்தி இருந்து பரிமாறுவா. நாங்கள் சாப்பிட விசிறியால் விசுக்கிக் கொண்டே இருப்பா. ஐயா கொஞ்சக் குழம்பு குத்தட்டே, இன்னும் கொஞ்சத் தயிர் குத்தட்டே, விடுவது, போடுவது எல்லாவற்றிற்கும் மாமி குத்தட்டே என்றே சொல்லுவா. குப்பையை பயங்க கொண்டு போய் எறிஞ்சு விடு என்று சொல்லுவா. சந்திரகிரகணம், சூரிய கிரகணம் என்றால் முள்முருங்கை இலையை இடிச்சு சாறை எடுத்து உரலில் விட்டுக் கிரகணத்தை, அதற்குள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தால் கண்ணுக்கு எந்தப் பிரச்சனையும் வராது என்பதை மாமி சொல்லியே நாங்கள் கடைப்பிடிச்சோம். மாமி எங்களுக்கு உயிருள்ள ஒரு அன்பு. எங்கள் வீட்டில் எல்லோருக்குமே அப்படித்தான். அப்புவுக்கு தொய்வு வருத்தம். எப்போதும் ஆஸ்ப்பத்திரியில் தான் அவரது சீவியம். கேள்விப்பட்டு தம்பியாரைப் பார்க்க வருவார். இரவிரவாக இழுப்பு, இருமல் ஊரெல்லாம் கேட்கும்.

அம்மா கண்விழித்து விசுக்கிக் கொண்டு இருப்பா, மாமி வந்தால் அம்மாவுக்கு ஓய்வுகிடைக்கும். அக்காவின் நிழலில் வளர்ந்த தம்பியல்லவா. தலையைத் தடவி, வேர்வையைத் துடைத்து விடுவா. அப்புவும் தமக்கை மீது அவ்வளவு செல்லம்.

நான் சின்னப்பிள்ளையாய் இருந்த காலங்களில். மாமி திரும்ப வீட்டிற்குப் புறப்பட்டால் அழுதழுது வண்டிலின் பின்னால் பாலம் வரை ஓடுவேன். அக்காக்கள் ஓடிவந்து இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள்.

நான் வளர்ந்த நேரத்திலும் மாமியின் மடியில் படுப்பேன். கைவிரலால் தலைமயிரைக் கோதி விரலால், தலைமுழுக்கக் குத்துவா அது எனக்கு மிகவும் பிடிக்கும்.

மச்சாள் மீது அம்மாவுக்கும், அம்மா மீது மாமிக்கும் கொள்ளை அன்பு. இப்படி ஒரு உறவை வேறு எங்கேயும் பார்க்க முடியாது. நான் அறியவும் இல்லை.

மாமிக்கும் பொக்கணையில் கமங்கள் நிறைய இருந்தன. எல்லாமே மானாவாரி நிலங்கள். மழையில்லாவிட்டால். வேளாண்மை எரிஞ்சு விடும். அப்புவின் குடும்பம் பக்தி மிக்கவர்கள்.

முல்லைத்தீவில் இருந்து மாங்குளம் பாதையில் மூன்றாம் கட்டையில் இருக்கும் கல்லடியான் கோவிலில் மாமிக்கு நல்ல நம்பிக்கை. இந்தக் கோயில் மூன்றாங்கட்டையிலிருந்து இடது பக்கம் போனால் ஒரு வயலுக்குள் இருக்கிறது. கல்லில் ஒரு அடியிருக்கிறது. அதனால் இதற்கு கல்லடியான் என்று பெயர். போகும் வழியில் விடத்தல் காடு. கடந்து போனால் மரங்கள் நிறைந்த சோலை ஒன்று வரும். ஆறு பாய்ந்த பள்ளம், குளிர்ச்சி அழகான காட்டுப் பூ மரங்கள் பூத்துக்குலுங்கும். நல்ல சிகப்பு நிறத்தில் வட்டம்பூவைப் பார்க்கலாம்.

மாமி இந்தக் கடவுளுக்கே மழைக்காக நேர்த்தி வைப்பா.

மழை நிறையப் பெய்தால் அந்தக் கடன் தீர்க்க வண்டில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக்கொண்டு எப்படியும் வருவா. இதற்காக வருகிறேன் என்று முதல் யாரிடமாவது சொல்லி விடுவா. பத்துக் கொத்தரிசி மாவில் மோதகம். பொங்கல், வடை, பலகாரம் என்று பெரிய நிறைமணி என்று படைப்பார்கள்.

மோதகம் பிடிப்பதற்கு ஆட்களுக்கு அம்மா சொல்லி வைச்சிருப்பா. சின்னப்பா, சின்னத்துரை அண்ணன், துரையண்ணன், சுப்பையா அம்மான் என்று பலர் வந்து உதவுவார்கள். அரைவாசி மோதகம் அவிச்சும், அரைவாசி எண்ணெயில் பொரிச்சும் செய்வார்கள்.

அங்கே தான் பொங்கல் நடைபெறும். கோவிலின் கிட்டடி யில் குடி மனைகள் இல்லை. சங்கு ஊதுகிற சத்தம் கேட்க, நீராவிப்பிட்டியில் இருந்து முஸ்லீம் உறவுகள் வருவார்கள்.

எல்லாம் சிறப்பாக முடிஞ்சால் மாமிக்கு மிகவும் சந்தோசம்.

மீண்டும் மழைபொய்த்தால் நேர்த்திக்கடன் தீர்க்க மாமி வருவா. அப்புவின் இறுதிக் காலம் மாமியுடன் பகையை ஏற்படுத்தி யது. எங்கட பெரியக்காவை மாமியின் மகன் சேது வாத்தியாருக் கென்றே பேசி வைத்திருந்தார்கள். வந்த கல்யாணப் பேச்சுகளை எல்லாம் அப்பு தட்டிக் கழிச்சு வந்தார். சேது வாத்தியார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மாமிக்குத் தெரியாமல் ஒரு பெண்ணைக் காதலிச்சுத் திருமணம் செய்து கொண்டார். இதைக் கேள்விப்பட்ட தும், அப்புவால் இந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அக்காவுக்குப் போய் குடுத்திற்று வாறன் என்று சைக்கிள் எடுத்தார். அம்மா தடுத்தா "அந்த மனுசி பாவம். மனுசி என்ன செய்யிறது." நீங்கள் நினைச்சால் அந்தப் பெடியன் அதைச் செய்ய வேணும் என்ற அவசியமில்லை. அதுக்கு அந்த மனுசி என்ன செய்யிறது. அம்மா சொல்லியும் கேட்காமல் போய் "எங்களை ஏமாத்திப் போட்டியள் என்று மாமியிடம், சாவுக்கும் இல்லை. வாழ்வுக்கும் இல்லையென்று" சொல்லிப் போட்டு வந்தவர்தான்.

அதற்குப்பின் மாமி தம்பியாரைச் சந்திக்கவே இல்லை. செத்த வீட்டிற்கு மாமி வந்து பட்ட பாட்டை வர்ணிக்க முடியாது. அதன் பிறகும் நாங்கள் மாமியுடன் அன்பாகவே இருந்தோம். இடைக்கிடை நோய் வாய்ப்பட்டு நாகராசண்ணனின் ராசன் வந்து சொன்னபோது, குடும்பமாகச் சென்று மாமியைப் பார்த்தோம். நான் வெளியேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை மாமி நலமாகவே இருந்தா. வரும்போது சொல்லிப்போட்டு வரவில்லை என்கிற வருத்தம் எப்போதும் இருந்தது. அம்மாவின் கடிதங்களில் மாமியைப் பற்றிக் கேட்டு எழுதுவேன். அம்மாவும் எழுதுவா. ஒருநாள் ஜேர்மனியில் நிலவறையை ஒழுங்கு படுத்திய போது கிடைத்த அல்பத்தில் மாமியின் படத்தைக் கண்டேன். வீடு மாறிவந்ததால் எல்லாம் குவியலாகக் கிடந்தது. ஒழுங்காக அடுக்கி வைக்க முற்பட்ட வேளையில் இந்தப் புதையல் கிடைத்தது. அன்றே அம்மாவின் கடிதமும் வந்தது. அதில் அவசரமாக நாலு வாக்கியங் களே எழுதியிருந்தா. தம்பி உன்ர மாமி போய்ச்சேர்ந்திட்டாவாம். ராசன் வந்து சொல்லிப் போட்டுப் போறான். நான் அதிர்ந்து போனேன். மாமியைப் போன்ற பாத்திரங்கள் இவ்வுலகில் பிறப்பது அரிது. மாமி சாகமாட்டா என்று நான் எப்போதும் நினைப்பதுண்டு. அவவோடு வாழ்ந்த எங்களுக்கே அந்தப் பாத்திரத்தின் தன்மை தெரியும்.

வெள்ளை ஆச்சி, சின்னாச்சிப் பெத்தா, பரியாரியம்மா, ஆச்சியென்று ஊரவர்கள் செல்லமாக அழைத்த எங்கட மாமி போயிற்றா. பயங்க, மோர் குத்தட்டே ஐயா போன்ற வாக்கியங்களும் அவவுடன் இல்லாமலே போய்விடும்.

எங்களை அரவணைத்து, செல்லம் பாராட்டிய சின்னாச்சி மாமி, எங்கள் அன்பின் மொத்த உருவம் இனி இல்லை.

துக்கம் தொண்டையை அடைத்தது. என் கண்களில் கண்ணீர் தேங்கிக் குளமாகியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர்ப்பு

இம்முறை ஜேர்மனியில் ஆனிமாத வெயில் கொஞ்சம் அகோரம் தான். அதிகாலை வெளிக்கிட்ட பிரயாணம் அலைச்சல், கார் ஓடவே அலுப்பாக இருந்தது. பக்கங்கள் மாறி மாறி சிக்னல் போடவே விசர் வருகுது. இங்கு காரை ஓட்டுவதில் கவனமாக இருக்க வேணும். கொஞ்சம் தாமதித்தாலும் விபத்து நடக்கிறதைத் தவிர்க்கேலாது. அங்க பார் அந்த மூதேவியை. நல்லகாலம் அவள் எதுவுமே பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“மதி! நீண்ட நேரமாக நானே பேசிக்” கொண்டிருக்கிறன். உன்னுடைய சத்தத்தையே காணேல்லை. “ம்” என்று சொல்லி சின்னதாக ஒரு முனகல்.

பாவம் அவளுக்கும் அலுப்பாகத்தான் இருக்கும்.

இண்டைக்கு வீட்டை போய் சேர்ந்தது மாதிரித்தான். வுட்போல் மச் நடந்திருக்கு அதுதான் இவ்வளவு றவிக். நான் சொன்னன் அங்கபார் கொடியோட போறாங்கள். ஒருவாறு கடுகதி பாதையில் ஏறியாச்சு. அப்பாடா என்று பெருமூச்சு வந்து போனது. நெற்றியில் வேர்வை வழிந்து கொண்டிருக்கு. கொஞ்சம் துடைச்சு விடேனப்பா. அவள் ரெம்போவை எடுத்து அவனது நெற்றியில் வழிந்த வேர்வையை துடைத்து விட்டாள். படாரென அவள் கையைப் பிடிச்சவன் முத்தம் ஒன்றைக் கொடுத்தான். விடுக்கென்று கையைப் பறித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்குச் சாப்பாடு அந்த மாதிரித்தான் என்றாள். பருப்புக் கறியின் நெய் வாசம் உன்ர கையில இன்னும் மணக்குது.

சரியாக் கைகளுவேல்லையோ.

அவளைக் கிண்டலடிக்கவே இப்படி யொரு கேள்வியைக் கேட்டான்.

எனக்கெண்டா சாப்பாடு பெரிசாப் பிடிக்கேல்ல.

எனக்கெண்டால் நல்லாப்பிடிச்சது, ஒரு வெட்டு வெட்டி னேன். நீங்கள் நல்லா வெட்டியிருப்பியள் தானே. மாதவன் அவளை ஒரு முறை திரும்பிப் பார்த்தான். என்ன என்ர ராசாத்திக்கு மூஞ்சையை நல்லாக் காணேல்ல, என்ன பிரச்சனை.

"கதையை விட்டிட்டு றோட்டைப் பார்த்து ஓடுங்க." கைவேயில் அவ்வளவு ரவிக் இல்லை. அப்பாடா நல்ல காலம் நேரத்திற்கு வீட்டை போயிடலாம்.

"இனிமேல் இவ்வளவு தூரம் எந்த நிகழ்ச்சிக்கும் வாற தில்லை."

குமார் உன்னுடைய கூடப்பிறந்த அண்ணன் மாதிரி என்று சொல்லுவாய். இப்ப என்ன அலுக்கிறாய்.

அவனும் இங்கிருந்து அங்கு வந்து எங்கள் கலியாணத்தை சிறப்பாக நடாத்தி வைத்ததை மறந்திடாதே.

"ஒரு பேச்சுக்கு கதைக்க விடமாட்டியள்."

அவள் ஒரு இழுப்பு இழுத்தாள்.

உங்களுக்கு விருப்பம் என்டால் தனியாய்போனாலும் போவியள் போல. எங்கை என்னைப் பார்த்துச்சொல்லு உன்னை விட்டு தனியாக எங்கையாவது போயிருக்கிறனா? என்ர செல்லம் இல்லாமல் போனால் அந்த இடம் எனக்கு மகிழ்ச்சி தராது.

அவன் சொல்லி முடிச்சுவிட்டு அவளைப் பார்த்தான். ஒரு நெளிப்பு நெளிச்சு விட்டு நல்லாச் சொல்லுவியள். பார்த்தனே அங்கே, வந்தால் வந்த அலுவலைப் பார்க்கிறதை விட்டிட்டு, அறுத்துக் கொண்டு நிண்டியள் அவளோடை. போன நேரம் தொடக்கம் திரும்பி வருமட்டும்.

வெடுக்கென்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பி தன்ர பக்கமாக பாதையைப் பார்த்தாள். அடடே இப்ப தானே விளங்குது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர ராசாத்தியின்ர மூஞ்சை ஏன் சரியில்லையெண்டு. இதுவே சங்கதி. உனக்கந்த சந்தேகக் குணம் வந்திட்டுது. நாங்கள் இரண்டு பேரும் கல்யாணம் கட்டி ஒரு வருசமாச்சு இன்னும் என்னை நீ புரியல்லேப் பார். அவள் பற்களைக் காட்டி கடைக்கண்ணால் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

நீங்கள் ஆரோடையும் கதையுங்கோ, எனக்குப் பிரச்சனை யில்லை. உங்களோடையும் ஒருத்தி வந்தவள் என்பதை மறக்காமல் இருந்தால் சரி. அவளை உனக்கு அறிமுகப் படுத்தி வைச்சுதானே இருக்கச் சொன்னேன். நானே அவளிட்ட வலியப் போய்க் கதைச்சன். அவள் தானே என்னைத் தேடி வந்தாள்.

நீயும் நின்டனிதானே மதி. அவளை மீண்டும் மனக்கண்ணில் பார்த்துக் கொண்டான். அவள் உண்மையில் கெட்டிக்காரி. அவனையறியாமலே கொஞ்சம் சத்தமாகவே சொன்னான், என்ன சொன்னனீங்கள். பார்த்தியளே உங்களாலை அவளை மறக்க முடியேல்லை..

ஒரு நாள் சந்திப்பு.

ஏய் அசடு. உன் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லு. அவள் எவ்வளவு கெட்டிக்காரி. எத்தனை அறிவு அவளுக்கு. அவள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உன்னால் பதில் சொல்ல முடிஞ்சுதா? என்னாலையும் முடியேல்லை. அவளைப் பார்க்க பொறாமையாக இருந்தது.

எத்தனை நாட்டுப் பாசையைக் கற்று வச்சிருக்கிறாள் தெரியுமா?அவள் செய்யிற வேலையில எவ்வளவு சம்பளம் எடுக் கிறாள் என்று தெரியுமா? அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவ வைப் பார்த்தால் அவ்வளவு சம்பளம் எடுக்கிற ஆள் மாதிரித் தெரியேல்லையே. முகத்தை ஒரு மாதிரி நெளித்துக் கொண்டாள் மதி.

அவள் கூந்தல் கலைந்திருந்தது. காற்று வரும் என்பதற்காக மேல் கூட்டைத் திறந்து விட்டிருந்ததால். அவள் கூந்தலில் வைச் சிருந்த பேப்பர் கனகாம்பரம். காற்றுக்குப் பறந்து அவள் நெஞ்சில் விழுந்தது. இரண்டு விரலால் கோதி மேலிழுத்து விட்டாள். நெற்றி யில் விழுந்த மயிரை அடிக்கடி சொருகிக் கொண்டாள். இரண்டு கைவிரல்களிலும் எட்டு மோதிரங்கள். பெருவிரல்களை மாத்திரம் தவிர்த்திருந்தாள். ஏனென்று ஒருநாள் அவன் கேட்டான். அதுதான் இப்போதைய "ஃபாசன்" என்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார், நூற்றி இருபது கிலோ மீற்றர் வேகத்தில் விரைந்தது. எப்படியும் இரவு எட்டு மணிக்கு முன் டோட்முன்ட்டுக்குப் போயிடலாம் என்று மனதுக்குள் நினைத்தான்.

இப்ப அவளப் பத்தி என்ன சொன்னனீ. பின்ன என்ன, அவ்வளவு சம்பளம் எடுக்கிறவ கழுத்தில சின்னதா ஒரு கறுத்தக் கயிறு, கையில கண்ணாடி வளையல், ஒரு நூல் புடவை.

அட பாவமே! அவள் உடலும், மனமும் அறிவினால் அலங்கரிக்கப் பட்டிருந்ததே. அதை நீ காணவில்லையா? உனக்கெங்கே அது தெரியப் போகிது என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. அவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான். அவளைச் சந்தித்து நீண்ட நேரத்திற்குப் பின், அவனே அவளிடம் கேட்டாள். உங்களுக்கு தங்க நகைகளில் நாட்டம் இல்லைப் போலும். அப்போது மதியும் உடன் இருந்தாள்.

“ஆசையில்லாமலா இதைப் போட்டிருக்கிறேன். சின்னதாக சிரிப்பொன்று. வந்து போனது.” தங்க நகைகள் அழகானவை அழகான டிசைன்களில் செய்யப் படுபவை. அதை அணிந்திருந்தால் என்னை விட்டு எல்லோரும் அதைத்தான் பார்ப்பார்கள். என் அழகு தெரியாது. அழகற்றவைகளைப் போட்டிருந்தால் என் அழகு உயர்ந்து நிற்கும். அதனால் தான் இந்தக் கயிறு. அவள் மீண்டும் ஒரு சிரிப்புச் சிரித்தாள்.

அவள் கிண்டலாகவே அதைச் சொல்கிறாள் என்பதை மாதவன் புரிந்து கொண்டான். பதிலுக்கு அவனும் ஒரு சிரிப்புச் சிரித்தான். இந்தக் கயிறும் உங்களுக்கு அழகாகத்தான் இருக்கு. சொல்லிவிட்டு மதியைக் கடைக்கண்ணால் பார்த்தான். தன்னைத் தான் குத்திக் குதறுவதாக மதி நினைத்தாள். தன் முந்தானையால் கழுத்துத் தெரியாமல் இழுத்து மூடிக் கொண்டாள். “இவ ஒரு எடுப்புக்காறி போல, நடிப்பு ஏதோ ஆசையில்லாத மாதிரி மனதிற்குள் திட்டிக்கொண்டாள் மதி. மிஸ்ரர் மாதவன் நான் பகிடிக்கு உங்கள் மனைவிக்குக் கோபம் வரப்போகிது.” சீ எனக்கும் பெரிசா விருப்ப மில்லை. வேண்டாமென்றாலும் இவர் விட மாட்டார் என்றாள் மதி.

அந்த இடத்தை விட்டுக் கழன்றால் காணுமென்கிற நினைப்பு வேறு அவளுக்கு. குமார் மாதவனின் நீண்ட கால நண்பன். ஜேர்மனிக்கு வந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்து விட்டது. ஒரே விமானத்தில் வந்ததால் இருவரும் நண்பர்களானார்கள். இருவரது சிந்தனைகளும் ஒரே மாதிரி இருந்ததும் அவர்களின் நட்புத் தொடர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாய் அமைந்தது. எழுத்து வாசிப்பு எல்லாவற்றிலும் தான். இருவருமே பகிடியாகக் கதைத்து இருக்கிற இடத்தைக் கலகலப் பாக்கி விடுவார்கள்.

மதி! ஸ்ருட்காட் அதிக தூரம்தான் எனக்கென்று வேறு யாருமில்லை. நீங்கள் தான் வந்து நின்று திருமணத்தைச் செய்து தரவேண்டும் என்று உரிமையோடு கேட்டிருந்தான். மாதவன், மதி, திருமணத்தை அவனே முன்னின்று நடத்தி வைச்சவன். அதனை இருவரும் மறந்து விடவில்லை. சாப்பாடு, அலங்காரம், மண்டபம் எல்லாமே ஓடர்தான். இருவரும் பக்கத்தில் நின்று தாலி எடுத்துக் கொடுத்து, குமாரையும், மனைவியையும் மகிழ்வித்தார்கள். சடங்குகள் சம்பிரதாயங்கள் தொடர்ந்தன. வா மதி கொஞ்ச நேரம் ஒரு இடத்தில் இருப்பம் நின்று கால்வலிக்கிது.

ஒரு இடத்தைப் பார்த்து அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் இருக்கைக்கு முன்னால் இருந்த பெண் அடிக்கடி அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

மதி உடனே பார்க்காதே மணிச் சரக்கொன்று கண் குடுக்குது. அவளுக்கு ஏறும் என்பதற்காகவே அவன் இதைச் சொன்னான். "வெளுத்துப் போடுவன் தெரியுமே," மீண்டும் அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். இப்ப பார். மதியும் தலையைச் சாய்த்துப் பார்த்தாள் அவளுக்குத் தெரியவில்லை. "இவர் பெரிய மன்னவன் இவரைப் பார்க்கிறாளாக்கும்." அவள் நம்பவில்லை. அவள் நேராக அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தாள்.

அவள் கைகளில் ஒரு புத்தகம் இருந்தது. சந்தேகமே இல்லை. அவன் எழுதிய "வரம்புகள் "என்ற புத்தகம் தான் அது. அது ஒரு சிறுகதைத் தொகுப்பு. இப்போது அவனுக்கு விளங்கி விட்டது. அந்தப் புத்தகத்தின் பின் அட்டையில் அவனது படம் இருந்தது. அதனால் அவள் தன்னை அடையாளம் கண்டு கொண்டாள் என்பதை அவன் ஊகித்துக் கொண்டான்.

"வணக்கம் என் பெயர் கல்யாணி நீங்கள் தானே எழுத்தாளர் மாதவன். பதிலுக்கு அவனும் வணக்கம் செலுத்தினான். வாருங்கள் இருங்கள் என்று அன்போடு வரவேற்றான். உங்களுடன் நானும் சேரந்து கொள்ளலாமா" என்று அனுமதி கேட்டாள்.

நிச்சயமாக. என் மனைவி மதி என அறிமுகப்படுத்தி வைச்சான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவவும் முழுமதியாகத்தான் இருக்கிறா. நல்ல ரேஸற் உங்களுக்கு என்று புகழ்ந்தாள். தன்னைப் புகழ்ந்ததை ஏற்றுக் கொண்டவளாக மதி நாணத்தோடு நன்றி சொன்னாள்.

கல்யாணியே தொடர்ந்தாள். உங்களைப் பற்றி உங்கள் நண்பர் குமார் நிறையச் சொல்லியிருக்கிறார். நானும் உங்கள் புத்தகங்களை வாசித்திருக்கிறேன். புதுமைக் கருத்துகளை புகுத்தி வருகிறீர்கள். இந்தத் திருமணத்துடன் உங்களையும் சந்திக்கலாம் என்றே இன்று வந்தேன்.

உங்களைச் சந்தித்தது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. உங்கள் ஆக்கங்களில் சின்னச்சின்ன வாக்கியங்கள் நிறைந்திருக்கும். அது என்னை மிகவும் கவர்ந்திருக்கு. வாசிக்க சுவையாக இருக்கும். வாசகர்களுக்கும் இது இலகுவாகப் போய்ச் சேரும். வாசகர்களும் விரும்புவார்கள். நீங்கள் எழுதிய "வரம்புகள்" அருமை.

அவள் சொல்லச் சொல்ல அவன் பெருமிதத்தில் மிதந்தான்.

எழுத்தாளன் படைக்கும் படைப்பிலக்கியங்கள் எல்லாமே எல்லோராலையும் பாராட்டைப் பெறுவதில்லை. அதில் சிலவற்றை எல்லோரும் விரும்பு வார்கள். "வரம்புகள்" அவனுக்கு அப்படி ஒரு பாராட்டைப் பெற்றுத்தருகிறது.

நன்றிகள் என்றான்.

கல்யாணியைப் பற்றியும் குமார் ஏற்கனவே சொல்லி வைச்சிருக்கிறான்.

அவன் சொன்னதைவிட அவள் அதி புத்திசாலியாக இருக்கிறாள்.

நீங்கள் நிறைய வாசிக்கிறீர்கள் அதனால் படைப்பிலக்கி யங்கள் பற்றிய அறிவு நிறைந்திருக்கிறது. உங்களைச் சந்தித்த இந்தத் தருணத்தை பெருமையாக நினைக்கிறேன். தன்னை அவன் பாராட்டுவது அவளுக்கும் சங்கடமாக இருந்தது.

மதி சம்பந்த மில்லாமல் இருவரையும் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

அதில் இருக்க அவளுக்குச் சங்கடமாக இருந்தது.

நீங்கள் இருந்து கதையுங்கோ எனது நண்பி ஒருத்தி கூப்பிடுகின்றாள். நான் அங்கு போகிறேன் என விடை பெற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவனுக்கு அது விளங்கியிருந்தது. அவளும் பாவந்தான். இவர்களுடைய கதைகளுக்குள், அவளால் எந்த அபிப்பிராயம் சொல்லத் தெரியவில்லை.

கல்யாணி என்ன அழகு, அடக்கமாக எந்த ஆடம்பரமும் இல்லாமல் சிம்பிளாக இருந்தாள். கறுத்தக் கொழும்பான் மாம்பழம் பழுத்தது போல் மஞ்சள் கலந்தஅவளது நிறம் இருந்தது.

அவனது கற்பனை மாம்பழம் வரை சென்றது.

“என்னைப்பற்றி நான் கொஞ்சம் சொல்ல ஆசைப் படுகிறேன். நீங்கள் கேட்பீர்கள் தானே. நான் மொறிசியஸ் நாட்டைச் சேர்ந்தவள். எங்களுடைய பூர்வீகம் தமிழ் நாடுதான்.” ஆனால் அங்கிருக்கும் பெரும்பாலானவர்களுக்கு தமிழ் பேசத் தெரியாது.

அப்படியா? என ஆச்சரியமாகக் கேட்டான் மாதவன்.

நீங்கள் எப்படி இவ்வளவு அழகாகத் தமிழ் பேசுகிறீர்களே எப்படி என்று கேட்டான் மாதவன்

“நீங்கள் நினைப்பது சரிதான். இப்போது அங்குள்ளவர்களில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகிறதைப் பார்க்கலாம்.

புதிய தலைமுறை சொந்த மொழியின் அவசியத்தை உணரத் தொடங்கிவிட்டது, தமிழ்சங்கங்கள், மன்றங்கள் என்றும், தமிழுக் காக மேலதிக வகுப்புகள் என்றும் ஆர்வம் காட்டி வருகிறது.

தமிழ் நாட்டு அறிஞர்களும் இதற்கொரு காரணமே.

நான் நிறையப்படித்திருக்கிறேன் என்று சொல்ல வரவில்லை. முடிந்த அளவு முயற்சிசெய்து தமிழ்மணிப் பட்டமும் பெற்றிருக் கிறேன்.

அவள் நிதானமாக, அழகான தமிழில் கதைத்த போது, மாதவனின் பார்வை ஆச்சரியத்திலேயே இருந்தது.

கேட்கவே மகிழ்ச்சியாக இருக்கிறது.

நான் இங்கு வந்து இரண்டு வருடங்கள் தான். யேர்மன் மொழியைக் கற்றுத் தேறியிருக்கிறேன். உங்களின் “வரம்புகள்” என்ற சிறுகதைத் தொகுப்பை பல முறை படித்திருக்கிறேன். சமுதாயத் திற்குத் தேவையான கருத்துகள் நிறையவே இருக்கின்றன. பெண் விடுதலை பற்றி புதிய கோணத்தில் பார்த்திருக்கிறீரகள்.

அனுபவம் வாய்ந்த எழுத்தாளனுக்குரிய எழுத்து நடை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மார்த்தமானவை. வாசித்த போது முதியவராக இருப்பர் என்றே நினைத்தேன். படத்தைப் பிரசுரித்த அச்சகத்தாருக்கே நன்றி சொல்ல வேண்டும் என்று சொல்லிச் சிரித்தாள். மாதவனும் சேர்ந்து கொண்டான். உங்கள் நண்பன் குமார்தான் தனது நண்பன் என அறிமுகப்படுத்தியவர்களுக்கென்று ஒரு சிரிப்பை வழங்கினாள் கல்யாணி.

அவள் உரையாடலில் மாதவன் தன்னையே மறந்தான். எவ்வளவு விடயங்கள் இவளது மண்டையில். உலகப்புதினங்கள், அரசியல் என்று, பத்து உலக மொழிகளில் அவள் பாண்டித்தியம் பெற்றிருப்பதாகவும், அந்த மொழி பேசுகின்ற இனத்தவர்களின் கலை கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்கள், நாகரீகம் வரலாறு, பொருளாதாரம் என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

அப்பப்பா ஆச்சரியத்தால் கண்கள் திறக்க அவள் சொல் வதையே கேட்டுக் கொண்டிருந்தான். இடையில் குறுக்கிட அவனுக்கு விருப்பம் வரவில்லை.

தலையை ஒரு புதிய பாணியில் இழுத்திருந்தாள் நெற்றியில் சின்னதாக ஒரு பொட்டு, அடர்த்தியான அழகான புருவங்கள், அறிவு தெரியும் இரண்டு கண்கள், மூக்கு வாய் என்று,பேசும்போது சிரிக்கும் பக்குவம்.

அழகான பல்வரிசையில் ஒரு தெத்திப் பல்லு.

நீண்ட நேரம் பேசும்போது அந்தத் தெத்திப் பல்லின் இடையில் வெண்ணுரையாக வரும் உமிழ்நீர் அதனை இடைக்கிடை விழுங்கிக் கொண்டாள்.

இவள் என்ன கெட்டிக்காரி என்று மனதிற்குள் வாழ்த்திக் கொண்டவன்.

எந்த ஆணாலும் இவளை அடிமைப்படுத்திவிட முடியாது. எவரையும் தனது அறிவால் வசப்படுத்தி விடுவாள் என்று தனக்குள் சொல்லிக்கொண்டு பார்வையைச் சற்று நேரம் பக்கவாட்டில் மேய விட்டான். "மாதவன் சொறி உங்களைக் கதைக்கவிடாது நானே கதைச்சுக் கொண்டு போகிறேன்." நோ, நோ, நோ அற்புதம். எனக்குத் தெரியாத எத்தனை விடையங்களை நீங்கள் அறிஞ்சு வைச்சிருக் கிறீர்கள்.

ஏன்? நீங்கள் எழுதுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்றில்லை. நாங்கள் சிலபேர் சேர்ந்து பத்திரிகை ஒன்றை நடாத்தி வந்தோம். உங்களுடைய எழுத்து வடிவம் இல்லை யென்றாலும், முடிந்தவரை முயற்சி செய்கிறோம்.

ஸ்ருட்காட் பல்கலைக்கழகத்தில் பகுதிநேர தமிழ் விரிவுரை யாளராகவும், ஜேர்மன், மொழி, அரசியல் சம்பந்தமாகவும் படித்துக் கொண்டிருக்கிறேன். ஒருநாள் தற்செயலாகக் கதைத்த உங்கள் நணபர் குமார்மூலம் தான் உங்களைப் பற்றி அறிந்து கொண்டேன்.

தனது திருமணத்திற்கு நீங்கள் எப்படியும் வருவீர்கள் என்று அவரே சொன்னார். உங்களைச் சந்தித்ததில் பெரு மகிழ்ச்சி. அவள் அடுக்கிக் கொண்டே போனாள்.

சாப்பாட்டு நேரம் கொஞ்சம் தாமதம் தான். நண்பர்கள் உணவு பரிமாறிக்கொண்டு நின்றார்கள். “இங்கே இருந்து உணவு உண்பதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லைத்தானே” என்று அவனை நாகரீகமாகக் கேட்டாள்.

இது என்ன கேள்வி.

“உங்கள் மனைவியையும் கூப்பிடுங்களேன்.”

மதி! இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தான்.

அவள் மஞ்சுவுடன் இருந்து சாப்பிட்டுக் கொண்டு கடைக்கண்ணால் எங்கள் பக்கமும் பார்த்தாள்.

அவள் நண்பியுடன் சேர்ந்து சாப்பிடுகிறாள்.

இப்படியான அலசல்களில் அவளுக்கு நாட்டமில்லை. பாவம் அவள் நல்லவள். ஒரு குழந்தை மாதிரி. காலப் போக்கில் அவளும் இலக்கியவாதி ஆகலாம். பிரச்சனைகள் தீர்வுகளையும் கற்றுக் கொடுக்கும்.

சைவ உணவு மிகவும் அருமையாக இருந்தது. கத்தரிக்காய் பிரட்டலை அவள் விரும்பிச் சாப்பிட்டாள்.

மாதவன் நீங்கள் பெண்ணடிமைத் தனத்தை இப்படிப் பார்ப்பதில்லையா? பெண்களுக்கு சின்ன, சின்ன ஆசைகள் நிறையவே ஏற்படும். எல்லோரும் என்றில்லை. புடவை, நகை என்று கொள்ளை ஆசை. இந்தப் பலவீனத்தை ஆண்கள் பயன்படுத்துவதை பல இடங் களில் பார்த்திருக்கிறேன். இது சம்பந்தமாகவும் நீங்கள் எழுதலாமே. அவள் ஊறுகாயைத் தொட்டு நாக்கில் தடவிக் கொண்டாள். எனக்கும் அந்த எண்ணம் உண்டு. தந்தை பெரியாரே அதைத்தான் வலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுறுத்திச் சொல்லியிருக்கிறார். பெண்கள் நகைக்கும், புடவைக்கும் ஆசைப்படுவதைக் குறைக்க வேண்டும். இதனையே ஆண்கள் பயன் படுத்திக் கொள்கிறார்கள். பெண்கள் புடவைக் கடைகளிலும். நகைக்கடைகளிலும் விளம்பரத்திற்காக வைக்கப்படும் பொம்மைகள் அல்ல. அறிவை வளர்த்து தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

"உண்மைதான் மாதவன். ராஜன் முருகவேள் எழுதிய சாகாவரம் என்ற கதையில் அவர் இதனையே குறிப்பிட்டிருக்கிறார்."

தனது மனைவியை தினம் கொடுமைப் படுத்துகிற கணவன். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி இல்லை.

பெண் தேவையென்பது கணவனுக்கு எப்போதும் தேவைப் பட்டது. விலையுயர்ந்த நெக்கிலசை வாங்கிக் கொடுத்து தனது இரவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்கிறான். அவளும் ஈ என்று பல்லை இழித்து வாங்கிக் கொள்கிறாள்.

இந்த மாயவலையில் பல பெண்கள் மயங்குகிறார்கள். பெரியாரின் கருத்தும் இதுதான். இதைத்தான் அவர் தனது எழுத்தில் இதைக் கொண்டு வந்திருந்தார்.

இன்றைய காலத்தில் பெண்கள் முன்னேறி வருவதைப் பார்க்கிறோம். பலர் சாதித்தும் வருகிறார்கள். அப்பாவிகளாகச் சில பெண்கள் துன்பங்களை அனுபவிக்கிறார்கள்

காலப் போக்கில் இவர்களும் மாற்ற மடையச் சந்தர்ப்பம் இருக்கிறது.

"உங்களுக்கு அந்தமாதிரிப் பொழுது போச்சாக்கும்" மதி நக்கலாகக் கேட்டாள்.

"ஏன் உனக்குமட்டுமென்ன இருவரும் சிரிச்சுச்சிரிச்சு அந்த மாதிரி இருந்தீர்கள். "மதி எப்படி நன்றாகச் சாப்பிட்டீர்களோ கல்யாணி கேட்டாள்".

"ஓம் நன்றாகச் சாப்பிட்டேன்."

நீங்களும் நன்றாகச் சாப்பிட்டதை நான் அங்கிருந்தே பார்த்தேன். நேரத்தை ஒதுக்கி ஒருமுறை எங்கள் வீட்டிற்கும் வரலாம் தானே! மதி அவளுக்கு அழைப்பும் விடுத்தாள்.

"நிச்சயமாக வருவேன். ஒருமுறையல்ல பல முறையென்று கூறிச்சிரித்தாள் கல்யாணி."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ வந்தாலும் வருவாய் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்."

இனி வெளிக்கிடுவம். எவ்வளவு தூரம் போகவேணும், நாளைக்கு வேலை வேற, "இன்றைய பொழுது என்னைப் பொறுத்த மட்டில் மகிழ்ச்சியாகக் கழிந்தது. இலக்கிய விருது ஒன்று மொறிசியஸ் நாட்டில் இருந்து கூட மாதவன் உங்களுக்குக் கிடைக்க லாம்." அதற்குரிய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இதைக்கேட்க அவனுக்கு பெருமிதமாக இருந்தது.

அறிவால் அவள் அழகாக இருந்தாள். அந்த அழகு எல்லோருக்கும் தெரியாது. மாதவனுக்கு நன்றாகவே தெரிந்தது.

அவளோடு ஒப்பிடுகையில், தான் எந்தமூலைக்கு என்பதை அவன் எப்போதோ உணர்ந்து கொண்டான்.

பிரிய மனமின்றி அவர்கள் பிரிந்தார்கள்.

பிராங்போட் வந்தபோதுதான் மதி கண்விழித்தாள். அவள் விட்ட கொறட்டையால் தான் அவன் நித்திரை கொள்ளவில்லை. தரிப்பிடத்தில் காரை நிறுத்தியிருந்தான். மதி வெளியில் வா நல்ல காத்து விழுது என்றான்.

நான் வரவில்லையென மறுத்து விட்டாள் அவள்.

தன்னைவிட்டிட்டு அவளுடன் கதைச்ச ஆத்திரம் அவளுக்கு..

பாவம் அவளுக்கும் களைப்புத்தானே. ஒரு சிகரட்டைப் பற்றவைத்தான். பிரயாணத்தின் போது சிகரட் பிடிப்பது அவனுக்கு விருப்பம்.

பின்பொருநாள் ஒரு பிறந்த நாளுக்கு இருவருமாக டோட்முன்ட் போனார்கள். அன்று மதி மிகவும் சந்தோசமாக இருந்தாள். தனது நண்பியை அறிமுகப்படுத்தி வைத்தாள். மாதவன் ஒப்புக்கு வணக்கம் சொல்லிவிட்டு நிறுத்திவிட்டான். "சூடு கண்ட பூனை "அவன். வீட்டிற்கு வந்தவள் அவள் போட்டிருந்த நகையையும், சாறியைப் பற்றியுமே புழுகித் தள்ளினாள்.

அவன் அக்கறையாய்க் கேளாதது அவளுக்கு எரிச்சலாக இருந்தது. கள்ளன் இவைகள் ஒன்றையும் கேட்கமாட்டார். வாங்கிக் குடுக்க வேண்டி வருமென்றாக்கும்.

அவளுக்கு அழுகை வந்தது. வெம்பி வெடிச்சாள் நான் என்ன வாங்கித் தரச்சொல்லியே கேட்டனான். ஒரு அக்கறையாய் தன்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிருக்கலாம் தானே. பெண்கள் இப்படி ஆசைகொள்வதால் தான் ஆண்கள் காரியத்தைச் சாதிக்கிறார்கள் என்று பெரியாரே சொல்லியிருக்கிறார்.

பெரியார் பெரியார் பெரியார் எதுக்கெடுத்தாலும் ஒரு பெரியார் இருக்கிறார் இவருக்கு.

பெரியார் பொம்பிளையாய்ப் பிறந்திருந்தால், புடவைக்கும் நகைக்கும் இப்படித்தான் அலைஞ்சிருப்பார். அவள் ஆத்திரத்தில் என்ன கதைக்கிறது என்பதை அறியாமலே மாதவனைக் கிண்டி விட்டாள்.

மாதவனுக்கு விளங்கி விட்டது. அவன் மனம் விட்டுச் சிரித்தான். என்ர ராசாத்திக்கு அவ்வளவு கோபமா? என்மீது கொண்ட ஆத்திரம். பெரியாரைக் கேவலப்படுத்துமளவுக்கு வந்திருக்கிறது. பெண்கள் முன்னேற்றத்திற்கு பெரும்பாடுபட்டவர் பெரியார். அவர் கொள்கையில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது.

நாளைக்கு லீவு போட்டுவிட்டு உனக்கு விருப்பமான அந்த நெக்கிலசை நான் வாங்கித் தாறன். என் செல்லத்திற்கு.

ஓ ஓ நல்லா நடிப்பியள்.

எனக்குத் தெரியாட்டியென்ன உனக்குத் தெரியும் தானே. அவன் அவளை அணைத்தான். அவனது கைகளுக்குள் அகப்பட்ட அழகான பொம்மையாக அவள் செல்லம் கொஞ்சினாள். அவளது பொய்க்கோபம் அவனுக்கு எப்போதும் பிடிக்கும்.

உங்களிடம் எனக்கொரு கேள்வியுண்டு. கேட்கலாமா? என்று கேட்டாள்.

நீங்கள் நல்ல எழுத்தாளர் நானும் மறுக்கவில்லை. பெண்கள் முன்னேற்றத்திற்காக நிறைய எழுதிவருகிறீர்கள். பாராட்டுகிறேன். நான் அடுத்தவரிடம் கேட்பதைவிட உங்களிடமே கேட்கிறேன். நான் மரியாதையாக உங்களை வாருங்கள், இருங்கள், போங்கள் என்று மரியாதையாகக் கூப்பிடுகிறேன். நீங்கள் மட்டும் என்னை வா, போ, இரு என்று ஒற்றைப் பாசையில் அழைக்கிறீர்கள். நான் உங்களைவிட இளையவள் என்பதாலா? இல்லை எழியவள் என்பதாலா?

ஆச்சரியத்தில் என்னுடைய மதியா, இவள்! அவன் ஒருகணம் மாதவன், வாயடைத்துப் போய் நின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமணி மாமி!

பூமணி, அடிக்கடி வீட்டைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். எப்போதும் பெருமூச்சொன்று வந்து போனது. அவளது கடந்த கால வாழ்க்கையின் அத்திவாரமே அந்த வீடுதான். அந்தப் போக்காளனின் உழைப்பு ஒவ்வொரு கல்லிலும் இருந்தது. இந்த வீட்டைப்போலவே அந்தக்குடும்பமும் அவர் கட்டிக் காத்ததே. அதற்குப் பக்கபலமாக நின்றவள் பூமணியே!

அவளது வாழ்க்கையின் கடினமும், சுகங்களும், நினைவு களாகக் கனப்பதும் இனிப்பதுமாக கடந்து கொண்டே சென்றன.

இதில் அவர்களது காதல் வாழ்க்கை முக்கிய மானது. இரு வீட்டிலும் மறுப்புத் தெரிவித்த நிலையில் அந்த எதிர்ப்புகளை முறியடித்துத் திருமணம் செய்த புரட்சியாளர்கள் இவர்கள். கதிர், இதுவே பூமணியின் காதலன். படிக்கிற காலத்திலே காதல் அரும்பி யது. இரு வீட்டாரும் எதிர்ப்புத் தெரிவித்த போதே காதலின் வேகம் உக்கிரமாகிய து.

கல்யாணம் முடித்து சிலநாட்கள் வழமையான கஸ்ரங்கள், திரைப்படங்களில் காட்டுவதுபோல். அவர் களைப் படாத பாடு படுத்திய து.

எப்போதும் கஸ்ரங்களில் நட்பே கைகொடுக் கும் கதிருக்கும், செந்தில் என்ற நண்பன் அப்பப்ப பசியைப் போக்க உதவினான். அதுமாத்திரமன்றி இவர் கள் வாழ்க்கையில் வளம் பெற வழியும் காட்டினான்.

இவர்கள் எல்லோருமே மட்டுவில்லைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்கள்.

மட்டுவில் தோட்டச் செய்கையில் சிறப்புற்று விளங்கும் பிரதேசம்.

கதிர், படிக்கிற காலத்தில் இருந்தே தோட்டவேலைகளில் நிறைந்த அனுபவம் பெற்றவன். அதேபோல் பூமணியும் அந்த வயதில் இருந்தே வீட்டாருடன் தோட்டத்தில் இறங்கி வேலை செய்த அனுபவம் நிறைந்தவள்.

செந்தில் மூலம் கிடைத்த காணிமூலம் இருவருமே தோட்டத்தில் இறங்கி வேலை செய்தார்கள். இது குத்தகைக் காணி தான். குத்தகை போக ஆரம்பத்தில் கிடைத்த வருவாய் மூலம் குடும்பம், கஸ்ரங்களைக் கடந்து சென்றது. அப்பப்ப செந்திலும் உதவி செய்தான். விளையும் மரக்கறி, தானியங்களை சாவகச்சேரி சந்தைக்குச் சென்று விற்பதை கதிர் மேற்கொண்டு வந்தான்.

பெற்றோரின் அரவணைப்பும், அன்பும் இல்லாதது, அவர்கள் இருவருக்குமே மனதில் வருத்தத்தைத் தந்தாலும், காலம் அவர்களை இணைத்து வைக்கும் என்கிற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. இடைவிடாத கடின உழைப்பும், விடாமுயற்சியும் அந்தக் காணியை விலைக்கு வாங்குமளவிற்கு வசதியை ஏற்படுத்தியிருந்தது.

குழந்தை பெற்றுக் கொள்ளுவதை இருவருமே தள்ளிப் போட்டிருந்தனர்.

அதற்குரிய காலம் கனிந்த போதுதான். அமுதமாய் மகள், அவள் வயிற்றில் உருவானாள். அவள் பிறந்த போது அனைத்துச் செல்வங்களும் கிடைத்ததாகவே இருவரும் மகிழ்ந்தார்கள். அவளுக்கு அமுதா என்றே பெயரும் வைத்தார்கள். அமுதாவும், பூமணியைப் போலவே அழகானவள். அவள் தரும் மழலையில் அனைத்தையுமே மறந்தார்கள். அவள் சின்னதாக இருந்த போது கட்ட ஆரம்பித்ததே இந்த வீடு. கட்டிமுடிய சில வருடங்கள் சென்றன. அவர்களின் மனதைப் போன்றே தைரியமான வீடு இது. மகள் பிறந்த பின் செல்வமும் சேர்ந்து மிதந்தது.

றக்ரர், காணிகள் என்று சொத்து சேர்ந்தது.

மட்டுவில் கத்தரிக்காய் மிகவும் பெயர் பெற்றது. பெருமளவு உற்பத்தியை கதிரின் தோட்டமே வழங்கியிருந்தது.

இயற்கை உரத்தைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி விளையும் இவர்களது, மரக்கறிகளுக்கு சந்தையில் நல்ல மௌசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது.

வன்னியில் இருந்து, எரு, காவிளாய் என்று விலைக்கு வாங்கி நிலத்தில் தாட்டு, உழுது வரும்போது மண் மிருதுவாய் மாறியது. பொது பொதென்று கால்வைக்கப் புதைந்தது. இவர்கள் விளைச்சல் பெருக இதுவேதான் முக்கிய காரணம்.

அமுதா வளர்ந்து குமுதமாய் சிரித்த போதுதான் பூமணி, மாமியானார். இளவட்டங்கள் அமுதாவைச் சுற்றித்திரிந்தார்கள். அவளின் காதல் பார்வைக்காகக் காத்திருந்தார்கள். அவளை அடைய பல முயற்சி செய்தார்கள்.

அமுதா அந்த அளவிற்கு அழகானவள். படிப்பிலும் கெட்டிக்காரி. இவர்களது வாழ்க்கை சந்தோசத்தில் கடந்தது.

அந்த நேரத்தில் இவர்கள் வாழ்க்கையில், இது நடந்திருக்கக் கூடாது.

வயல் வரம்பில் நடந்து வந்த கதிரை, பாம்பு தீண்டியது. அப்படியே வரம்பில் சரிந்தான். "பூமணியென்று கதறினான். பூமணி ஓடி வா என்னைப் பாம்பு கடிச்சுப் போட்டுது. ஓடிவா" எனக்கூப் பிட்டான்.

அவள் பதறிப் போனாள்.

தோட்டக் காணிக்குள் அப்போது யாரும் நிற்கவில்லை. "ஐயோ அது வரம்பில கிடந்திருக்கு, நான் தான் தெரியாமல் மிரிச்சுப் போட்டன். அது கோபத்தில் கொத்திப் போட்டுது."

இஞ்ச வந்து பார் நாலு பல்லும் பட்டிருக்கு. நாகம் வாய் வைச்சால் யாரும் தப்புவது அரிது. பூமணி நிலை தடுமாறிப் போனாள். தைரியத்தை வரவளைத்து, "ஒன்றுமில்லேங்கோ கெதியாய் வைத்தியரிட்ட கொண்டு போகச் சரிவரும்."

தனது சீலைத்தலைப்பைக் கிழிச்சு பாம்பு கடிச்சதுக்கு மேலாக இறுக்கிக் கட்டினாள்.

"இது காலக்கடி, நான் தப்ப மாட்டன், பூமணி, உன்னையும், பிள்ளையையும் விட்டிட்டுப் போகப் போறன். ஐயோ நான் என்ன செய்ய.

என்னை நம்பி வந்தவள் நீ. என்னை மன்னிச்சு விடு.

எனித்தான் நீ தைரியமாக இருக்கவேணும். உன்ர மடியில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் படுக்க வை. "அவன் குரலில் இயலாமை தெரிந்தது. அவன் பயந்து தான் போனான். பாம்பு கடிச்சால் பயப்படக் கூடாதென்று சொல்லுவார்கள். இரத்தம் கொதிப்பேறினால், தலையில் விரைவாக விசம் ஏறிடுமாம். அது இன்று நடந்தது. தனக்கேதாவது நடந்தால் தன்னை நம்பி வந்த பூமணி, மகள் அமுதா தனித்து விடப்படுவார்கள் என்ற ஏக்கம், கொதிப்பாக மாறி விசம் விர்ரென தலைக்கேறுவதை அவன் உணர்ந்தான். அவள் தன்னைப் பார்த்து பயந்து விடுவாள் என்பதை நானறிவேன். அக்கம் பக்கம் பார்த்தாள். ஐயோ! எனத்தலையில் அடித்தாள். உதவிக்கு யாரும் இருக்கவில்லை. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அவனை தன் மடியில் படுக்க வைத்தாள். அது அவனது கடைசி வேண்டுகோளாகவும் இருந்தது. விசம் விரைவாகத் தலைக்கு ஏறியது." பூமணி மனதை விட்டு விடாதே பிள்ளை முக்கியம். நான் எங்கும் போகமாட்டன். இந்தக் காணி, நாம் கட்டின வீடு, இங்கேதான் உங்களுக்கு காவலாக நான் நிற்பேன்.

கண்கள் சொருகிக் கொண்டு வந்தது. பச்சை பச்சையாகச் சத்தி எடுத்தான்.

"என்னுங்க என்னுங்க என்று தலையில் அடிச்சுக் கதறினாள். கதிர், காலனுடன் கலந்து போனான்.

அன்று அவள் பட்ட வேதனையை யாரும் அறியமாட்டார். தனது குடும்ப விருட்சத்தின் ஆதார வேர், இடையில் அறுந்து போனது.

அவள் வாழ்க்கையில் மறக்கமுடியாத நினைவுகளை மறுபடியும், மறுபடியும் நினைத்தழுவாள்.

இந்த வீட்டில் தங்களுடன் கதிர் வாழ்வதாகவே அவள் எப்போதும் நினைத்திருப்பாள்.

நான் ஒரு சாதி, நீ ஒரு சாதி என்பதாலேயே எங்களின் காதலை இரண்டு குடும்பங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை.

எங்களுக்குப் பிறந்த எங்கள் மகள் அமுதா எந்தச்சாதி? அவள் தான் உண்மையான மனிதஜாதி. அன்பையும், பண்பையும், அவளுக்கு ஊட்டி வளர்க்க வேணும். மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதை அவள் வாழ்ந்து காட்ட வேண்டும்.

இருவரும் சேர்ந்து கதைத்ததை அவள் என்றும் மறக்க வில்லை. அமுதா விரும்பியவனையே அவளுக்கு மாப்பிள்ளையாக கினாள். நல்ல உத்தியோகம். அன்பானவன் முற்போக்கு வாதி. பத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினைந்து வருச வாழ்க்கை. இரண்டு பெண் பிள்ளைகள். அன்பான குடும்ப வாழ்க்கை. பூமணி பூரித்து நின்ற நாட்கள். பேரப்பிள்ளைகளுடன் குதூகலித்தாள். கதிர் இந்த வீட்டை யும், தன்னையும் சுற்றியே தான் வருவான் என அவள் இப்போதும் நம்புகிறாள்.

எப்போதும் பூமணி எதிர்பார்த்த ஒன்றும் அவளது வாழ்க்கையில் நடந்ததில்லை.

யுத்த காலம் வாழ்க்கையை எச்சரித்த வண்ணமே கழிந்தது. என்ன நடக்குமோ என்ற பயத்திலேயே ஒவ்வொரு நாளும் கடந்து சென்றது. பேரப்பிள்ளைகள் தாரிகாவும், சாரிகாவும் பருவம் அடைந்து மொழுமொழு என்றிருந்தார்கள்.

இரணைப்பிள்ளைகள் என்றதால் அடையாளம் காண்பதே சிரமமாக இருக்கும். ஒரே முகச்சாயல், வளர்த்தியும் ஒரே மாதிரி. மழலை பொழிந்த போது மகிழ்ந்திருந்த பேரப்பிள்ளைகள் வளர்ந்து பருவத்திற்கு வந்த போது பயமாக இருந்தது. அச்சுறுத்தல்கள் எல்லாப்பக்கமும் இருந்து வந்து கொண்டிருந்தது.

கொழும்புக்கு வேலையலுவலாகச் சென்ற மருமகன், மதன் திரும்பி வரவேயில்லை. தேடாத இடமே இல்லை.

பொலிஸ், இராணுவம், இயக்கங்கள் என்று தேடி அலுத்து விட்டது.

அமுதா நொடிந்து போனாள். குடும்பத்தில் இழவு விழுந்தது போல் எப்போதும் சோகம் நிலவியது.

மதன் காணாமல் போய் இரண்டு வருடங்கள் கடந்து விட்டது. மதன் இல்லாத வாழ்க்கை எதற்கு, தற்கொலை செய்வோமோ என்று கூட பல தடவைகள் சிந்தித்திருக்கிறாள். தாரிகாவும், சாரிகாவும் மதனை நினைக்க வைத்தனர்.

மதன் இன்னும் உயிரோடுதான் இருப்பார். அவருக்கு எதுவுமே நடந்திருக்காது. அவர் ஒரு நாள் உயிரோடு திரும்பி வருவார் என்றே அவள் நம்பினாள்.

எல்லா யோசனையும், பூமணியையும் வாட்டியது.

இரத்த அழுத்தம் அதிகரித்த போது. ஒரு கையையும், காலையும் இழுத்து விட்டது. "பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்ச மாதிரி" மேலும் ஒரு இடி அந்த குடும்பத்தில் வந்து விழுந்தது. பாரிச வாதம் வந்து படுத்த படுக்கையானாள் பூமணி. அமுதா மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படி நிலைகுலைந்து போனாள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. பக்கத்தில் இருந்த நாட்டு வைத்தியர் முருகேசரைக் கூட்டி வந்து காட்டினார்கள்.

அவர் வந்து பார்த்துவிட்டு பூசுவதற்கு எண்ணெயைக் குடுத்து காலையும் கையையும் நல்லா உருவி விடும்படி தான் அடிக்கடி வந்து பார்ப்பதாகவும் சொன்னார்.

நாட்டு வைத்தியர் முருகேசு புகழ்பெற்றவர். "இது கொஞ்சக் காலம் செல்லும். மாத்திப் போடலாம்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வயதிலும் தோட்டத்தில் கம்புபோல் வேலை செய்து திரிந்த பூமணியை கூடத்தில் ஒரு மூலையில் படுக்க வைத்தது இந்த வியாதி.

மகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் பாரமாகிப் போனதை எண்ணி தனிமையில் அழுது வடித்தாள். எதற்கும் அடுத்தவரை எதிர் பார்க்கும் நிலை அவளுக்கு வந்திருந்தது.

நாட்டு நிலமையும் மிக மோசமாகப் போய்க்கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் உக்கிரமான யுத்தம் நடபெற்றுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

யாழ்ப்பாணம் இராணுவ வசமானபோது மக்கள் பெருமளவில் இடம்பெயர ஆரம்பித்தார்கள். அவர்களது இலக்கு வன்னியை நோக்கி இருந்தது. மக்களோடு மக்களாக இயக்கமும் வன்னியை நோக்கிப் பயணித்தது. பலர் விருப்பமில்லாமலே புறப்பட வேண்டிய சூழ்நிலைக்குள்ளானர்கள்.

செய்தி மட்டுவில் மக்களையும் இடம்பெயர வைத்தது. பூமணி அமுதா பிள்ளைகள் செய்திகளைக் கேள்விப்பட்டு விழிபிதுங்கி நின்றார்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை.

பூமணி எல்லோரையும் தனது பக்கத்திற்கு வருமாறு அழைத்தாள். "அமுதா என்னை என்ன செய்வது என்றுதானே யோசிக்கிறியள். என்னை விட்டிட்டு நீங்கள் புறப்படுகள். நான் வாழ்ந்து முடித்து விட்டேன். நீங்கள் வாழ வேண்டியவர்கள். இந்தப் பிள்ளைகளை வைச்சுக் கொண்டு இங்க இருக்க வேண்டாம். கேள்விப் படுகிற கதைகள் ஒன்றும் நல்லதாக இல்லை. வாற ஆமிகள் என்னென்னவோ செய்யிறாங்களாம். இதுகளைக் கெடுத்துச் சீரழிச்சுப் போடுவாங்கள்."

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அம்மா சும்மா விசர்க் கதைகதைக்காதையுங்கோ. உங்களை விட்டிட்டு நாங்கள் போவமாக்கும். பிள்ளைகளையாவது செந்தில் அண்ணனுடன் அனுப்புவம் என்று கதைச்சனான். இதுகள் மாட்டன் என்று சொல்லுதுகள். உங்களையும் அம்மம்மாவையும் விட்டிட்டு நாங்கள் போகமாட்டம் என்று அடம்பிடிக்கிதுகள். என்ன நடந்தாலும் இந்த வீட்டிலேயே கிடப்பம். நடக்கிறது நடக்கட்டும்"

அமுதா சொன்ன பதிலால் பூமணியால் எதையும் சொல்ல முடியவில்லை. அவர்கள் மூவரும் பூமணிமீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தார்கள் என்பதை பூமணியும் அறிவாள்.

"எனக்கு வந்த இந்த வியாதி உடனே கொன்றிருக்கலாம்."

இரவு முழுக்க அழுது வடிச்சாள்.

விடிய எழும்பிப் பார்த்த போது அமுதா விறைத்துப் போனாள். பூமணியை அங்கு காணவில்லை. உடல் பதறத் தொடங்கியது. எங்கு போவதற்கும் வாய்ப்பில்லை. பிள்ளைகளை எழுப்பி அம்மம்மாவைக் காணவில்லை என்பதை அழுதபடி கூறினாள்.

அந்தக் கடிதம் மாத்திரம் தாரிகாவின் கண்ணில் பட்டது.

"அன்பான மகளே அமுதா! முதலில் என்னை மன்னிச்சு விடு. நான் எடுக்கும் இந்த முடிவு மிகச் சரியானது. என்னால் உங்களுக்கு உதவ இந்த வழி மட்டும் தான் சரியானது. பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வன்னிக்குப் போ. எனக்கு இந்த வீடுதான் சொந்தமானது. இங்குதான் உன் அப்பாவும் வாழ்கிறார். அவர் விருப்பப் படி எங்கள் பரம்பரை வாழவேண்டும். அதற்கு நீயும் இந்தப் பிள்ளைகளும் வாழ வேண்டும். என்னைக் காணாமல் துடித்துப் போவீர்கள் என்பதை நானறிவேன். இந்த நேரத்தில் உங்களை நினைத்துக் கண்ணீர் வடிக்கிறேன். இதுவே உங்களுக்காக நான் தரும் இறுதிவிடை. நான் எங்கும் போகவில்லை. இந்தக் கிணற்றில் தான் விழப்போறன். முடிந்தால் என்னைத்தூக்கி அப்பாவைப் புதைத்த இடத்தில் புதைத்து விடுங்கள். என் போக்காளன் என்னை எதிர் பார்த்துக் காத்திருக்கிறான். நீங்கள் வரும்வரை நாங்கள் இங்கு காவலாக இருப்போம்.. மன்னிச்சு விடுங்கள். உங்கள் எல்லோருக்கும் எனது அன்பு முத்தங்கள். அம்மா, அம்மம்மா. பூமணி."

கடிதத்தை வாசித்து விட்டு ஓவெனக் கதறி அழுதார்கள்.

இப்போது அவர்கள் வன்னியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கு அக்கா

இன்று காலை எட்டுமணிக்கே வெயில் கொளுத்தத் தொடங்கியது. வயலுக்குள் காலை வைக்க அவளுக்கு விருப்ப மில்லாமல் இருந்தது.

வயல்கள் ஒவ்வொன்றுக்கும் கடப்புகள் இருந்தன.

வேலியைக்கடந்து செல்வதால் இதனைக் கடப்பு என்று சொல்லுவார்கள்.

சங்கு. இக்கதையின் கதாநாயகி. மூன்று பிள்ளை களின் தாய். வட்டுவாகல் என்ற கிராமத்தில் வாழ்பவள்.

கணவன் மாரியப்பன் இருந்தவேளை அவன் கொண்டுவருவதை ஆக்கிக் கொடுத்து, அவனது விருப்பத்திற்கு நேரம் கருதாது இடம் கொடுத்து, வத வதவென்று மூன்று பிள்ளைகளைப் பெற்று அவர் களின் பாசப்பிணைப்பில் கட்டுப்பட்டு இன்று, இந்த வாழ்க்கையில் போராடிக் கொண்டிருக்கிறாள்.

சொந்தக்காரரன் ஒருவனின் காணிப் பிரச்சனை யில் விலக்குப் பிடிக்க போனபோது துவக்கால் சுடப்பட்டு மாரியப்பன் மாண்டு போனான்.

சங்கு வாழ்க்கையில் பல சோதனைகளைச் சந்தித்தவள், அன்றும் அதிர்ந்து போனாள். மாரியப்பன் கொண்டு வருவதைச் சமைச்சு வாழ்ந்த அவளுக்கு உலகமே வெறுமையாகத் தெரிந்தது.

இனியென்ன நான் செய்வது. இந்த மூன்று பிள்ளைகளையும் எப்படி வளர்ப்பது. இதுவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குப் பெரும் கவலையாக இருந்தது.

வட்டுவாகலில் வீரமுத்து, தையலி தம்பதி களுக்கு மூத்த மகளாகப் பிறந்தவள் சங்கு. இவளுக்கு கந்தசாமி என்கிற தம்பியும் உண்டு.

வீரமுத்தர் நல்ல உழைப்பாளிதான். கடலிலும், வயலிலும் பாடுபட்டு உழைத்து, பெரும்பகுதியை கைலாயற்றை கள்ளுத் தவறணைக்குக் கொடுத்ததே மிச்சம்.

மனைவி தையலியார் நோய் வாய்ப்பட்டு நேரத்தோடு போய்ச் சேர்ந்திற்றா

ஏற்கனவே இவர் வேறு பெண்ணைத் திருமணம் செய்து அவருக்கு ஒரு ஆண்குழந்தை இருப்பதாக ஊரில் கதையொன்று உலா வந்தது.

கொஞ்சம் பெரிய மால். கீழ் தளம் சீமெந்ராால் ஆனது. மேலே பனையோலையால் வேய்ந்திருந்தது. பக்கமாக சின்னக் குசினி இதுதான் அவர்களின் வீடு.

சங்கு மூன்றாம் வகுப்பு வரை படிச்சவ. அதே போல் தம்பி யாரும் மேற்கொண்டு படிக்க விருப்பம் வரவில்லை. பெற்றோர் களும் அதைப்பற்றி யோசிக்க வில்லை. கொண்டு வந்தால் சமைச்சுக் கொடுப்பாள். தாயிருந்த போதே சங்கு சமைக்கப் பழகிக் கொண் டாள். அம்மா இறக்கும் வரை சங்குவும் வீட்டில் செல்லப்பிள்ளை தான்.

அம்மாவின் இறப்பிற்குப் பின் எல்லாமே தலைகீழானது.

சங்கு ஒன்றும் பெரிய அழகியல்ல. கருமை நிறம். எந்த நேரமும் உடல் வேர்த்திருப்பது போல் எண்ணெய் வழியும் தேகம். நடுத்தர உயரம்.

குடும்பத்தில் பெண்பிள்ளையிருந்தால் அம்மா இருக்க வேணும் என்பதை அவள் பருவமடைந்தபோது உணர்ந்தாள். அது அவளுக்கு விளங்காதிருந்தது. அது அருவருப்பாகவும் வெட்கமாக வும் தோன்றியது. ஏனிப்படி நடக்குது என்று தெரியாதிருந்தது.

தகப்பனுக்கு இதை எப்படிச் சொல்வது. யோசிச்சு முடிவுக்கு வராமலே விட்டு விட்டாள்.

அவளோடு சேர்ந்து விளையாடும் அவளது நண்பி பூரணம் அவளும் ஒரு கலியாணவீட்டிற்காக புதுக்குடியிருப்பிற்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருந்தாள்.

மூன்று நாளுக்குப்பின்பு தான் அவள் திரும்பியிருந்தாள்.

அதுவரை இவள் பட்ட பாடு சொல்லி மாளாது. இயற்கை தானாக எதையும் கற்றுக்கொடுக்கும். அதனை அவள் செயல்படுத்தி யிருந்தாள்.

பூரணத்திற்கு சொல்லும்போதே தேம்பித் தேம்பி அழுதாள். மூன்று நாளாச்சு பூரணம். எனக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. ஐயாவிட்ட சொல்ல முடியாமல் இருந்தது. பூரணம் இந்த அம்மா மனுசி ஏன் எங்களை விட்டுப்போனது. செத்துப் போடலாம் என்று கூட நினைச்சேன்.

“அடி இது ஒண்ணுமில்லையடி நீ அழாதை”. பூரணம் இது பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருந்தாள். அவள் முகம் மலர்ந் திருந்தது.

“சங்கு இது ஒவ்வொரு பொம்பிழைகளுக்கும் நடக்கும். நீ சாமத்தியப் பட்டிட்டாய். எங்கட அக்காவுக்கு இது நடந்த போது. அவள் எனக்குத்தான் முதல் காட்டினாள். நான் தான் அம்மாட்டைச் சொன்னேன். இது எனக்கும் தான் நடக்கும். பொறு வாறன்”

என்றவள் தாயிடம் சொல்லி, அதன்பிறகு குப்பைத் தண்ணி என்று ஏதோ சடங்குகள் எல்லாம் செய்து மகிழ்வாக நடந்து முடிந்தது. வீரமுத்தர் அன்று மகிழ்ச்சியாக இருந்தார். புதுப்புடவை, வந்தவர்களுக்குச் சாப்பாடென்று சந்தோசம் தாண்டவமாடியது. தம்பி கந்தசாமியும் தான். நீண்ட நாட்களின் பின் அவர்கள் வீடு பரபரப்பாக இருந்தது.

“அண்ணை! வீட்டில் ஒரு குமர் இருக்கு. எப்போதும் பாது காப்பாக நீங்கள் தான் இருக்க வேணும். இனிமேல் தவறணைக்குப் போறதை நிற்பாட்டுங்கோ” என்று பூரணத்தின் தாய் நாகப் பண்ணக்கா சொன்னபோது வீரமுத்தர் பொறுப்போடு தலை யாட்டினார்.

அன்றுதான் சங்குவை அணைத்து அன்பாக முத்தமிட்டார். அது, சங்குவுக்கு மிகவும் பிடிச்சிருந்தது.

அதன் பிறகு அவர் பொறுப்போடு நடந்து கொண்டது சங்குவுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. கடுமையாக உழைத்தார். நந்திக் கடலில் இறால் வீச்சு இரவிரவாக நடந்தது. ஏகப்பட்ட இறால். பணத்தை சங்குவிடமே கொடுத்துப் பத்திரப் படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு பருவமடைந்த பின் பொலிவாக இருந்தாள். அப்போது தான் மாரியப்பரின் வரவு சங்குவை சுற்றி இருந்தது. மாரியப்பர் முறை மச்சான் தான். சங்குவுக்கும் அது விளங்கியிருந்தது. வீரமுத்தரும் கவனிக்கத் தவறவில்லை.

நல்ல நாளாகப் பார்ப்போம் என மனதில் நினைத்திருந்தார்.

இந்த மகிழ்ச்சி அதிகநாள் நீடிக்கவில்லை.

இரவு படுத்த வீரமுத்தர் மறுநாள் பிணமாகக் கிடந்தார்.

இரவு படுக்கையில் நல்ல பாம்பு கடிச்சுச் செத்துப்போனார். அவருடைய காலில் நாலு பல்லுப் பட்டிருந்தது. குடிச்சிருந்த படியால் தெரியாமலே மரணம் அவரைத் தழுவிக்கொண்டது.

வானமே தலையில் விழுந்தது போல் அதிர்ச்சியில் உறைந்து போனாள் சங்கு.

எதிர்காலம் சூனியமாகத் தெரிந்தது.

மாரியப்பரைத் திருமணம் செய்வதே வழியென நாகப் பண்ணக்கா சொன்னபோது அவளால் தட்டமுடியவில்லை.

ஒரு நாள் இரவு சோறு காய்ச்சிக் கொடுத்து தனிமையில் விட்டதுடன் அவர்கள் கலியாணம் முடிந்தது. மாரியப்பரின் வீடு அக்கரையில் இருந்தபடியால் அவளும் அங்கு குடியேறினாள்.

போகும்போது தம்பியாரைப் பிரிவது கவலையாக இருந்தது. கூட வரும்படி கேட்ட போது அவன் மறுத்து விட்டான். தகப்பனின் இறப்பிற்குப் பின் அவனும் நிறையக் குடிக்க ஆரம்பித்து விட்டான்.

காலம் எவ்வளவு விரைவாகக் கடந்து போனது.

போகாதே போகாதே என்று அவள் மறுத்தும் மாரியப்பர் போய் மாண்டது அவளுக்கு இப்போதும் ஆத்திரம் தான்.

பாவி! மூன்று பிள்ளைகளையும் எனக்குத் தந்து போட்டு நட்டாற்றில் விட்டீயே. நான் என்ன செய்வேனெனப் புலம்பித் தவித்தாள்.

வாழ்க்கையில் அவளது மகிழ்ச்சியெல்லாம் தனது தாயுடன் போனது என்பதை பல முறை நினைத்து அழுதிருக்கிறாள்.

சொல்லப் போனால் மனம் விட்டுச் சிரிச்சறியாள் என்றே சொல்லலாம். ஆத்தில குளத்தில விழுந்து சாவோமா? என்று பல முறை நினைத்திருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஒரு தாய் என்பதை உணரும்போது உருகிப் போனாள். நண்டும் குஞ்சும் போல் அம்மாவைச் சுற்றி வரும்போது, அவர்களுக் காகவேனும் தான் வாழ்ந்தாக வேண்டு மென்று முடிவெடுத்தாள்

ஊருக்குள் அவளுக்கு அனுதாபங்கள் இருந்தது. அதை இரக்கத்தால் பெற விரும்பவில்லை. ஏதாவது வேலைசெய்து பெற வேண்டுமென்று அவள் நினைத்தாள்.

தன்னோடு இருந்த வேளை கந்தசாமிக்கும் ஒரு தாயாக அவள் இருந்திருக்கிறாள்.

கொண்டு வந்ததைச் சமைச்சுக் கொடுத்த அவளுக்கு, கொண்டு வந்துதான் சமைக்க வேண்டுமென்ற நிலை வந்தது.

கந்தசாமியும் கலியாணம் கட்டி இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பனானான். அவனுக்கு வாச்சவளும், அவனைப்படாத பாடு படுத்துவதாகக்கேள்வி.

இப்போது யாருக்காகவும் கவலைப்பட அவள் நினைக்க வில்லை.

நெல்லுக்குத்து, அரிசி, இடிப்பு. அரிவு வெட்டென்று கூலியைப் பெற்று வாழப் பழகிக்கொண்டாள்.

அரிவு வெட்டுவது, வெட்டிய வயலில் கதிர் பொறுக்குவது என்று, ஓய்வின்றி உழைத்தாள்.

வேலையால் வந்து நெல்லுக் குத்தி சோறு காய்ச்சி பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுக்கவேணும். அவள் சாப்பாடு கொடுக்கும் நேரத்தில் பிள்ளைகள் அரைவாசியில் நித்திரையாய் போய்விடுவார்கள்.

அப்போதெல்லாம் அவள் வேதனையில் வெந்து போவாள்.

ஒரு தாயாக அவளால் எப்படிச் சாப்பிட முடியும். தண்ணி, வென்னியைக்குடிச்சு விட்டு படுத்து விடுவாள். சோற்றுக்குள் தண்ணியை ஊற்றி மறுநாள் பிள்ளைகள் சாப்பிடும் என எடுத்து வைச்சு விட்டு தானும் பழஞ்சோறை தூக்குச் சட்டியில் விட்டுக் கொண்டு போய்விடுவாள். இதுதான் அவளது மதிய உணவு.

நேற்றைய தினம் நந்திக்கடல் கரையோரம் இருக்கும் கரைச்சி வயல் அரிவு வெட்டி இருந்தார்கள். இன்று கதிர் பொறுக்குவதற்காக அந்த வயலை நோக்கிப் போகிறாள். மணல்தறை, குடாத்தறை, என்று இவற்றைக் கடந்துதான் கரைச்சி வயலுக்குப் போகவேணும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டும்போது கொட்டுப்படும் கதிர்களைப் பொறுக்கி, குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு மரநிழலில் இருந்து கடகத்திற்குள் உருவிப் போடவேண்டும்.

இந்த வயல் கதிர்களைப் பொறுக்க வென்று கிளிகள், குரங்குகள், கௌதாரி, காட்டுக் கோழியென்று அவளுடன் போட்டா போட்டி. தூரத்தில் இருந்து பார்க்கும் போதே நிற்கின்ற நீருடன் அடிக்கின்ற வெயிலால் கானல் நீரும் சேர்ந்து நந்திக்கடல் சமுத்திரமாய் காட்சி தந்தது.

எல்லாக் கடப்புகளும் தாண்டி வயல் வரம்பில் நடந்தாள். கதிர் அறுத்த ஒட்டுகளின் வாசம் மூக்கைத் துளைத்தது. வரம்பில் நின்ற நாயுருவி அவளது சேலையில் பட்டு ஒட்டிக் கொண்டது. வெட்டொட்டிச் செடியின் கற்பூரவாசம். சுவாசிக்க இதமாக இருக்கும்.

எதையும் ரசிக்கிற நிலையில் அவள் இருக்கவில்லை. இண்டைக்கு நேரத்தோட வீட்ட போகவேணும். பிள்ளைகளுக்கு சுடச்சுட சோறும், நல்ல மீன்குழம்பும் வைச்சுக் கொடுக்க வேணும் என அவள் நினைத்தாள்.

பக்கத்தில் விடத்தல் காடு குரங்குகளின் கும்மாளம். அதுவும் கேட்டுக் கொண்டே இருந்தது.

கரைச்சி வயலுக்க வந்தவள். கடகத்தை வாகை மர நிழலில் வைச்சுவிட்டு. கதிர் பொறுக்க ஆரம்பித்தாள். கிளிகள் படை படையாக வந்து விழுந்தன. எத்தனை உயிர்களுக்கு இந்த வயல் வாழ்வளிக்கிது.

கொளுத்துகின்ற வெயிலில் நந்திக்கடலில் பட்டுவரும் வாடைக்காற்று. இடைக்கிடை இதமாக இருந்தது.

முந்தானையைத் தலையில் போட்டுக் கொண்டு தனது வேலையில் மும்முரமாக இருந்தாள். உடல் வேர்த்து வழிந்தது. பிள்ளைகள் சாப்பிட்டுதுகளோ என்ற நினைப்பும் அடிக்கடி வந்து போகும்.

சேர்த்த கதிர்களை ஒன்றாகத் திரட்டி வாகை மர நிழலுக்குக் கொண்டு சேர்த்தாள்.

தண்ணிவிடாய் தொண்டையையும், உதட்டையும் உலர வைத்தது. வாகை மரநிழலில் அமர்ந்து கொண்டு வந்த பழந் தண்ணீரைக் குலுக்கி விட்டு குடிக்க ஆரம்பித்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வெயிலுக்கும், தாகத்திற்கும் இதமாக இருந்தது. வெங் காயத்திலும் ஒரு கடி கடித்தாள். பிள்ளைகள் சாப்பிட்டதுகளோ என்ற நினைப்பு வேறு வந்து வேதனை தந்தது.

மூத்தவள் மகேஸ் கெட்டிக்காரி, அவள் தம்பிமாரைப் பார்ப்பாள். அந்தத் துணிவில் தான் எப்போதும் அவள் இருந்தாள்.

இன்றைக்கு எப்படியாவது பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடு கொடுக்க வேணும். மனம் ஒருமுறை சொல்லிக் கொண்டது.

உயரமான வரம்பில் கடகத்தை வைத்து நெல் கதிர்களை உருவ ஆரம்பித்தாள். அப்போதுதான் தூக்கித் தலையில் வைக்க இலகுவாக இருக்கும். முக்கால் வாசி கடகம் நிரம்பி இருந்தது.

வெயில் தணிந்திருந்தது. கடகத்தைத் தூக்கி தலையில் வைத்தவள் வீடு நோக்கி நடந்தாள்.

பாலத்தில் காந்தி வீசிக்கொண்டு நின்றான். தம்பி காசு தாறன் மீன் கொஞ்சம் தாறியே.

"எனக்கொண்டும் காசு தர வேண்டாம். பாரத்தோடை நிற்காதைங்கோ. நீங்க போங்கோ நான் கொண்டு வந்து தாறன்." சங்குவுக்காக பல பேர் உதவத் தயாராக இருந்தார்கள்.

அவள் அதனை தட்டிக்கழித்தே வந்தாள். இக்கரையில் இருந்த வேளையில் காந்தியைத் தூக்கித் திரிந்தவள் சங்கு.

வளர்ந்த பின் அவர்கள் வீட்டில் சொல்லியிருக்க வேணும். அதன் பிறகு சந்திக்கும் ஒவ்வொரு வேளையிலும் தாயாக அவளைப் பார்த்தான்.

அவன் கொண்டு வந்த மீனை அறுத்து குழம்பும், சொதியும், பொரியலும் செய்தாள். பிள்ளைகள் வேலை செய்ய விடாமல் கழுத்தைக் கட்டிக் கொண்டு மாறி மாறி கொஞ்சி மகிழ்ந்தார்கள்.

அவளுக்கும் அந்த சுகம் தேவைப்பட்டது. இன்று ஆசை தீர சாப்பாடு கொடுக்க வேணும். என்ர பிள்ளைகள் சுடு சோறு திண்டு எத்தனை நாளாச்சு.

மனம் திருப்தி அடைவது போல் மகிழ்ந்தாள். பிள்ளைகள் பக்கத்தில் நின்று மீனை வர்ணித்துக் கொண்டு நின்றார்கள்.

சாப்பிட ஆயத்த மாகிற நேரத்தில பக்கத்து வீட்டு மல்லிகைக் கண்டு அவசரமாய் ஓடி வந்தாள். சங்கு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு கெதியா வெளிக்கிடு. அவள் குரலில் பதட்டம் இருந்தது. ஏனக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள்ள ஆமி இறங்கிற்றாங்கள். சுட்டுக்கொண்டு வாறாங்களாம். பெடியளோடை சண்டை நடக்குது சனமெல்லாம் ஓடுதுகள். பதறி அடிச்சு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஓடினவள்

அக்கா இதுகளையும் கூட்டிக் கொண்டு போங்கோ நான் வாறன். அம்மா போகவேண்டாம் நீங்களும் வாங்கோ என்று பிள்ளைகள் கத்த. அம்மா இப்ப வாறன் என்று வீட்டை நோக்கி நடந்தவள். குசுனிக்கிள் சென்று தூக்குச் சட்டியை எடுத்து காய்ச்சிய சுடு சோத்தையும், கறியையும் அதற்குள் கொட்டிக் கொண்டு ஓடும்போது சேர்த்து வைச்ச மூன்று மூடை நெல்லுச் சாக்குகளைப் பார்த்தாள். ஒரு மூடையை விற்று, பிள்ளைகளுக்கு உடுப்பெடுக்க வேண்டுமென்று நினைத்திருந்தாள்.

மாறி மாறி வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தது. அவர்கள் போனவழியில் அவளும் ஓடினாள். சுர்ரென்று வயிற்றில் நெருப்புச் சுட்டது போல் இருந்தது. அப்படியே சரிந்தாள். ரத்தம் பீறிட்டு வழிந்தது. நான் என்ன செய்தேன். என்னை ஏன் சுடுகிறார்கள். முதன் முதலாக அவள் சிரித்தாள். ஏன் சிரித்தாள் என்பது அவளுக்குரியது.

கையில் அந்தத் தூக்குச் சட்டி இருந்தது. இதயப்பக்கம் தடவிப் பார்த்தாள். அங்கு எந்தக் காயமும் இல்லை. அப்பா என்ற பெரு மூச்சு வந்தது. அங்குதான் பிள்ளைகள் மூன்றும் இருந்தன. நினைவு மங்கிக் கொண்டு போனது. ஆசையாக பிள்ளைகளுக்கு மீன் குழம்பு, பொரியலுடன் சோறு ஊட்டிக் கொண்டு இருப்பது போல் உணர்வு.

அவள் போயிற்றாள். கடந்த காலத்தின் சோகங்கள் மறைந்தன. மொழிப்பிரச்சனை, இனப்பிரச்சனை எதைப்பற்றியும் அவளுக்குத் தெரியாது. வயிற்றுப் பிரச்சனை மட்டும் தான் அவளுக்கு இருந்தது. அதற்காக மட்டும் தான் போராடினாள்.

இப்படி எத்தனை பேர் இவளைப்போல் இந்தப் போரில் மடிந்தார்கள்.

இவர்களுக்கெல்லாம் வரலாறு இருக்குமா? இருக்காது. அதற்கும் ஒரு தகுதி வேண்டும்.

அந்தி வானத்து சூரியன் நந்திக் கடலைத்தாண்டி கேப்பாபில வுக்குக் காட்டிற்குள் மறைந்தது. வானம் சிவந்து இருளானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணை இழத்தல்!

எங்கள் வீட்டுச் சமையல் அறையில் நின்று பார்த்தால் மேற்குப் பக்கமாகச் செல்லும் பாடசாலைப் பாதை தெரியும்.

இந்த வீடுமாறி ஒரு கிழமைதான் இருக்கும். பக்கத்து தொடர் மாடிக் கட்டிடத்தில் இருந்து, அடுத்த தொடர்மாடிக்கு மாறியிருந்தோம். இரண்டு வீட்டிற்கும் இடைவெளி இருபது இருபத்தைந்து மீற்றர் தான் இருக்கும்.

பழைவீட்டில் மூன்றாம் மாடி ஏறி இறங்கி, இந்த வீட்டிற்கும் இரண்டாம் மாடி ஏறி இறங்க வேண்டும். பக்கத்து வீடுதானே சுகமாக கொண்டு வந்து சேர்த்திடலாம் என்று நானும் நினைத்ததுண்டு. அதைச் செயல்படுத்தும் போதுதான் அதன் கஸ்ரம் புரிந்தது.

பெரிய சாமான்களைத் தூக்குவதற்கு நண்பர்கள் சிலர் உதவி செய்தார்கள் தான். என்னுடன் என் மனைவி பிள்ளைகளும் தான். சேர்ந்து கொண்டார்கள்.

அங்கிருந்த சாமான்களை இங்கு கொண்டு வந்து சேர்த்தாகிவிட்டது. அப்பாடா என்று மூச்சு விடமுடியவில்லை. எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தி அடுக்கி வைக்கப் பல நாட்கள் செல்லலாம்.

இந்த ஒரு கிழமையில் ஐந்து கிலோ குறைந் திருக்கிறேன். ஆனாலும் எங்கள் எல்லோருக்கும் இந்த வீடு நன்றாகப் பிடித்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டைவிட பெரிய வீடிது. பிள்ளைகள் இரண்டு பேருக்கும், தனித்தனி அறை.

இருவரும் அறைக்கு அடிபட்டதே எனக்கும் மனைவிக்கும் சந்தோசமாக இருந்தது.

அந்த வீட்டில் இருவரும் ஒரு அறையில் தான் இருந்தார்கள்.

பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதையும், வருவதையும், பார்ப்பதிலே தாய்க்கு ஒரு மகிழ்ச்சி இருந்தது. மகன் இளையவன் என்பதால் அவனது குறும்புகளை ரசிப்பது எங்களுக்கு மிகவும் விருப்பம்.

மகள் அமைதியானவள். அவளது குறும்புகளை ரசித்த காலமும் இருந்தது. இப்போது இளையவன் அதனை எடுத்துக் கொண்டான்.

பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதை விட வரும்போது தான் அவர்களை ரசிக்க முடியும். எங்கள் வீட்டைச்சுற்றியிருந்த நாலைந்து பிள்ளைகள், மகனுடனும் மகளுடனும் ஒன்றாகப் படிக்கிறார்கள்.

பள்ளிக்குப் போகும்போது பிள்ளைகள் அநேகமாகச் சேர்ந்து போவதில்லை. மட்டு மட்டாகவே மகன் வெளிக்கிடுவான். அம்மா காரில கொண்டு போய் விடுவா என்று, அவனுக்கு நல்லாத் தெரியும். அந்த அளவிற்கு காலைச் சோம்பல் அவனுக்கு.

பெரும்பாலும் என் மனைவியே கூட்டிக் கொண்டு போய் பள்ளிக்கூடத்தில் விடுவா. பாடசாலைக்குச் செல்லும் பிரதான பாதையிலிருந்து குறுக்காக வர எங்கள் வீடு பாதித்தூரம் தான் இருக்கும்.

இந்தப்பாதையை பிள்ளைகளே உருவாக்கியிருந்தார்கள்.

எங்கள் வீடு பள்ளத்தில் இருந்தமையால் மேட்டில் நடப்பவை எல்லாமே தெரியும். இவர்களின் வரவு, குறும்புச் சேட்டைகள், அடாவடித்தனங்கள் அனைத்தையும் வீட்டிலிருந்தே பார்க்கலாம்.

வின்ரர் காலங்களில் பனிவிழுந்து நிறைந்து வெள்ள வெளேரெனக் காட்சியளிக்கும். சினோவை மாறி மாறி எறிந்து விளையாடுவதும், சினோ மனிதனை பெரிய அளவில் கட்டி மகிழ்வதும் பார்க்கும் எங்களுக்கும் மகிழ்ச்சிதான்.

பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வரும்போது நண்பர்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து வருவதையே அவன் விரும்பினான். திரும்பி வரும்போது கார்ப்பயணம் பிடிக்காது. அப்போதுதான் கூத்தடிக்கலாம்.

மகள் பிரதான பாதை வழியாகவே வருவாள் இவளுக்கும் சினேகிதிகள் எங்கள் வீட்டைச் சுற்றி இருந்தார்கள். ஜேர்மனியிலும் பெண் பிள்ளைகள் சின்னவயதில் அமைதியாகவே இருந்தார்கள். எல்லோரும் என்றில்லை.

மகனுக்கு அநேகமாக நேரத்துடன் பாடசாலை முடிந்து விடும்.

கதவைத்திறந்து வீட்டிற்குள் வந்தவுடன் புத்தகப் பையைத் தூக்கி எறிந்து விட்டு குசினிக்குள் நிற்கும் தாயிடம் தான் போவான். பள்ளிக்கூடப்புதினங்கள், நண்பர்களைப் பற்றிய செய்திகள் என்று வழமையாகச் சொல்லுவான்.

அன்று எனக்கு நல்ல காய்ச்சல் வேலைக்குப் போய், வேலை செய்ய முடியாமல் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வைத்தியர் ஒரு கிழமை சுகயீன விடுப்பெழுதித்தந்து ஓய்வெடுக்கச் சொல்லியிருந்தார்.

நான் வரவேற்பறையில் உள்ள சோபாவில் படுத்திருந்தேன்.

மனைவி சமையல் கட்டில் சமைத்துக் கொண்டு நின்றா. பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவன் புத்தகப்பையைத் தூக்கி எறிந்து விட்டு தாயிடம் போய், "ஒரு துக்கமான செய்தி. கேள்விப்பட்டனீங்களோ! என்னையா என மனைவி குறுக்கிட்டாள். என்னோட படிக்கிற நுவேலின் அப்பம்மா நேற்று செத்திற்றாவாம்" என்றான்.

இவனோடு படிக்கிற நுவேல் என்று ஏற்கனவே இவன் சொல்லிக் கேள்விப் பட்டிருந்தாலும். யாரென்று அவவுக்குத் தெரியவில்லை. "ஆ! அப்படியா? எங்க அவியளின்ர வீடு.?" என்னம்மா நீங்கள் என்னோட படிக்கிற நுவேலின்ர வீடு தெரியாதே உங்களுக்கு.

சிலவேளைகளில் அவன் நம்புவதுபோல் வெடிப்பான். அம்மாவும் அதனை நம்பி விடுவா. கொஞ்ச நேரம் செல்ல "அம்மா நீங்கள் என்ன சொன்னாலும் நம்பிவிடுவியள் என்று சொல்லிச் சிரிப்பான். அதனால் அவள் இவன் சொல்வது எதையும் இலகுவாக இப்போது நம்புவதில்லை. என்மனைவி தானுண்டு தன்வீடு, என்று வாழ்பவள். எங்களைச்சுற்றியே தான் அவளது உலகம். நல்ல குடும்பத் தலைவி. பிள்ளைகளுக்கு நல்ல தாய். எனக்கு நல்ல மனைவி. எங்கள் வீட்டுக் குத்துவிளக்கு அவதான். பக்கத்து வீட்டு ஜேர்மன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர்களைப் பார்த்துச் சிரிப்பதுடன் சரி. அது அவளின் குணம்.

ஆட்களை யாரென்று தெரியாத தால் ஒரு சாதாரண செய்தியாகவே என் மனைவி அதனை எடுத்துக் கொண்டாள்.

"மார்க், அப்பா தலைமயிர் வெட்டப்போவாரே ஒரு தாத்தா அவற்ற மனுசியம்மா" எலிசபெத்! அவவின்ர பெயர் அவவைப்பற்றி அப்பா பல தடவை சொன்னவர். நீங்களும் இருந்தனீங்கள்.

படுத்திருந்த எனக்கு இந்த செய்தி கேட்டு பகீர் என்றிருந்தது. இரண்டு நாளைக்கு முதல் தலைமயிர் வெட்டப் போன போது நான் பார்த்துக் கதைச்சிருந்தேன். எங்கள் குடும்ப நலம் பற்றி அக்கறையோடு விசாரிச்சிருந்தா.

அவசரமாக மகனை அழைத்தேன். "என்ன அப்பா இண்டைக்கு வேலைக்குப் போகேல்லையோ? அப்பாக்குச் சுகமில்லை வேலைக்குப் போய், முடியாமல் சொல்லிப் போட்டு வந்திட்டார், டொக்டரிட்ட போய் வந்து, படுத்திருக்கிறார்" தாய் சொன்னதைக் கேட்டுக் கொண்டே அவன் என்னிடம் வந்தான்.

வந்தவன் நெற்றியில் கையைவைத்து தொட்டுப் பார்த்தவன். "இப்பிடிச் சுடுகிது, மருந்து குடிச்சனீங்களா?" என்று கேட்டு விட்டு அந்தத் துயரச்செய்தியை திரும்பவும் எனக்குச் சொன்னான்.

என்ன வருத்தம். எப்பையா நடந்தது? நான் பதறிப்போய் கேள்விகளாய்க் கேட்டேன்.

"நேற்றைக்காம் நடந்தது. இரவு சாப்பாடு முடிய, மார்க்கோட சிரிச்சுச் சிரிச்சு கதைச்சுக் கொண்டிருந்தவவாம். திடீரென்று நெஞ்சைப் பொத்திக்கொண்டு சரிஞ்சவ தான். அம்புலன்சுக்கு அறிவிச்சு அவங்கள் வந்து சோதிச்சுப் பார்த்திற்று அவசெத்திற்றா என்று சொன்னாங்களாம்." என்றான் அவன்.

ஆரையா உனக்குச் சொன்னது என்று நான் கேட்டேன். நுவேல். அவன் இண்டைக்குப் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. அது தான் ஏனென்று கேட்கப் போனபோது அவனே சொல்லி அழுதான். அவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

"அந்த செத்தமனுசியை உங்களுக்கும் தெரியுமோ" என்னிடம் மனைவி கேட்டாள். என்ன கதைக்கிறியள். அந்த மனுசி எனுக்குத் தலைமயிர் வெட்டிற மார்க்கின் மனைவி இரண்டு பேருக்குமே எழுபத்திரண்டு வயசு. எலிசபத். மனுசியின்ர பெயர் மெல்லிய மனுசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்புமாதிரி, எப்போதும் சுறுசுறுப்பாய் இருக்கும்.

நம்ப முடியாமல் இருக்கு. பாவம் அந்த மனுசன் இனி எப்படி இருக்கப் போகிதோ.

அன்றிரவு முழுக்க எனக்கு நித்திரை வரவில்லை. அவர்களின் நினைவாகவே இருந்தது. கண்ணுக்குள் நின்று கலங்க வைத்தார்கள்.

கீழ்வீட்டுக் கிழவிதான் என்னை அந்த மனிதரிடம் அனுப்பி வைத்தவர். "ஏன் அவ்வளவு தூரம் போய் முடிவெட்டுறாய் பக்கத்தில மார்க் வந்திருக்கிறார். அவர் பிரதான கடைத்தெருவில் சலூன் வைச்சிருந்தவர் இப்போது பென்சன் இந்தத் தொழிலில் அவர் பிரபலமானவர். பார்க்கேல்லையோ சில நாட்களில் பொலிஸ் காரெல்லாம் வந்து நிற்கிறதை. அவர்களே அவரிட்ட வந்துதான் வெட்டிறாங்கள். அங்குள்ளதை விட காசும் குறைவாக இருக்கும். நீயும் போய்க் கேட்டுப்பார்." றேசிதான் இதைக்கூறினார்.

பக்கத்துத் தெருவில் இரண்டு வருடங்களுக்கு முன் தான் அவர்கள் வீடு வாங்கிக் குடியேறினார்கள்.

மேல்வீட்டில் மகன் கிறிஸ்தோபர் குடும்பமும் கீழ்வீட்டில் அவர்களுமாகக் குடியேறி இருந்தனர். அவர்களின் பேரன்தான் நுவேல். என்னுடைய மகனுடன் ஒன்றாகப் படிப்பவன்.

எங்கள் வீட்டின் முன் தெருவில்தான் அவர்களின் வீடிருந்தது. அந்தப்பக்கமாகப் போகும்போது, முன்பு பார்த்துச் சிரிப்பதோடு சரி.

ஜேர்மனியில் அறியாதவர்களைப் பார்த்துச் சிரிப்பது மிகக் குறைவு. ஆனால் அவர் அப்படி இருக்கவில்லை. பார்த்தவுடன் எனக்கு அவரைப் பிடித்துப் போனது.

றேசி சொன்னபிரகாரம் ஒரு நாள் போய் பெல்லடித்தேன். அவரே கதவைத்திறந்து, அந்த நாள், வாழ்த்தைத் தெரிவித்தார். அவர் என்னை எதிர்பார்க்கவில்லை, ஆனாலும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். நான் விடயத்தைச் சொன்னேன்.

"அடடா எனக்கு இன்று நேரமில்லை. பிறகு ஒரு நாளைக்கு வாருங்களேன்" என்றார்.

எப்போது என்றேன். பின் ஏதோ யோசித்தவராய் வாருங்கள் என்று என்னை அணைத்தவாறே வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். அவர் அன்போடு அழைத்துச் சென்ற விதமே எனக்கு நன்றாகப் பிடித்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர் மனைவி அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தார். அவரும் எனக்கொரு வாழ்த்துச் சொல்ல “இவதான் என்மனைவி எலிசபெத்” என அறிமுகப்படுத்தி வைத்தார். “இவர் மதி பக்கத்துத் தெருவில் இருப்பவர்.” ஓ எனக்குத் தெரியும். எங்கள் பேரன் நுவேலுடன் இவரது மகன் படிக்கிறார். எப்படி நலமாக இருக்கிறீர்களா? குடும்பம் எப்படி இருக்கிறது. மலர்ந்த முகத்துடன் அவர் நலம் விசாரித்தது, எனக்கு மகிழ்வை அளித்தது.

ஜேர்மனியர்களில் பெரும்பாலானோர் வீட்டை அழகாகத் துப்பரவாக வைத்திருப்பார்கள். அதற்கு இவரும் விதிவிலக்கல்ல. சிலர் கதையால் மனதை வெல்வார்கள். ஆனால் இவர் அமைதியாக இருந்து எனக்குள் ஒரு மரியாதையை ஏற்படுத்தி இருந்தார்.

மார்க். மனைவியைவிட கொஞ்சம் கட்டையர் தான், தலையில் காதோரம் கொஞ்சம் மயிர் இருந்தது, நடுவில் சொட்டை. அது அவருக்கு அழகாகவே இருந்தது.

ஒருநாள் சொட்டையைக் காட்டி எங்கே என்று பகிடியாகக் கேட்டேன். சிரித்தவர். “நான் எவ்வளவு கொலைகள் செய்கிறேன். அதற்குரிய தண்டனை தான் இது.” எனக்கு விளங்க வில்லை. “எத்தனை பேருடைய தலைமயிரை வெட்டி விழுத்தியிருக்கிறேன், அந்தப் பாவம் தான் இது என்று சொல்லிக் கொல்லென்று சிரித்தார். நானும் சேர்ந்து சிரித்தேன். அவர் ஒரு நகைச்சுவைப் பிரியர். அவர் டோட் முண்ட் உதைபந்தாட்ட ரசிகர். நான் பிறேமன் இருவரும் சந்திக்கும் போது, மனம் விட்டுக் கதைப்போம். அதில் ஜேர்மன் அரசியலும் இருக்கும். வீட்டில் முடிவெட்டுவதற்கென்றே சலூன் மாதிரி ஒரு அறையை ஒதுக்கியிருந்தார்.

“தனது சலூனில் முடிவெட்டியவர் தான் எலிசபேத் எனக்கும் அவரைப் பிடிச்சுப் போச்சு இருவரும் காதலிக்க ஆரம்பிச்சோம். பிறகு சலூனுக்கும், எனக்கும் இவ தான் முதலாளி என்று சொல்லிச் சிரித்தார். சொல்லும்போது எலிசபேத்தும் இருந்தார். “போங்கோ” என்று அவரது தலையில் ஒரு தட்டுத்தட்டிவிட்டு குசுனிக்குள் ஓடி விட்டார். அவர் முகத்தில் கொஞ்சமாக வெட்கத்தைப் பார்த்தேன்.

இரவு முழுக்க இதே சிந்தனைதான். நித்திரை வராமல் பிரண்டு பிரண்டு படுத்தேன். மனித இலக்கணத்தோடு வாழ்பவர்கள் அன்பாலும், மரியாதையாலும் எங்கள் இதயத்திற்குள் புகுந்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சல் நெருப்பாக்க் கொதித்தது, குளிர் உலுக்கி எடுத்தது. எனக்கு சுகம் வர இரண்டு கிழமையாகிவிட்டது. இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளவும் முடியவில்லை.

எப்படியாவது அந்த மனிதரைச் சந்தித்து ஆறுதல் கூற வேண்டும். எப்படி அவரின் முகத்தைப் பார்ப்பது, அதை நினைக்கும் போதே சங்கடமாயிருந்தது. மனைவியிடம் சொல்லிவிட்டு அவர் வீட்டிற்குப் போய் பெல் அடித்தேன். யாரும் வரவில்லை. எலிசபேத் இருந்திருந்தால் கதவைத்திறந்து சிரித்த முகத்துடன் பதில் தந்திருப்பார்.

பலமுறை முயன்றும் யாரும் வரவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பினேன். வீட்டின் பின் பக்கம் யாரோ நிற்பதற்கான அரவம் கேட்டது. பின்பக்கமாகச் சென்று எட்டிப்பார்த்தேன். புல்லுவெட்டு வதற்காக மெசினை அவர் ஸ்ராட் பண்ண ஆயத்தமானார். என்னைக் கண்டதும் அப்படியே போட்டு விட்டு குழந்தையைப் போல் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்து ஓவெனக்கதறி அழுதார். தேம்பித் தேம்பி அழுது "மதி! என் மனைவியை இந்த வீடெல்லாம் தேடுகிறேன்." எங்கும் காணவில்லை என்று குலுங்கிக் குலுங்கி அழுதார்.

அந்த வாக்கியம் என்னாலும் அடக்க முடியாமல் போனது. அதற்குள் எத்தனை கவலைகள் புதைந்து கிடக்கிறன. எஞ்சிய காலம் பூராவும் அந்த எழுபத்திரண்டு வயதுக்குழந்தை வீடெல்லாம் தேடி அழுது கொண்டே இருக்கப் போகிறது.

எப்படி ஆறுதல் கூறுவது என்று தெரியாமலே ஒருவாறு விடைபெற்று வீட்டிற்கு வந்தேன். சோகம் இதயத்தை அழுத்திக்கொண்டே இருந்தது. அனைத்தையும் அடக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து கதவைத்திறந்தேன். என் முன்னால் மனைவிதான் நின்றாள். அடக்கி வைத்திருந்த சோகம் உடைப்பெடுக்க கட்டிப்பிடித்து ஓவெனக் கதறினேன்.

மனைவியுடன், பிள்ளைகளும் விறைத்துப் போய் நின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை ஒரு வரம்!

இது ஜேர்மனியில் நாம் வாழும் பக்கத்து வீட்டில் நடந்த உண்மைச் சம்பவம்.

இதனை உங்களோடு பகிர்ந்து கொள்ள நினைத்தேன். சர்வதேச பெண்கள் தினத்தில் இப்பதிவு வருவது எனது மனதுக்கு நிறைவைத் தருகிறது. "வெற்றிமணி" யில் பங்குனி மாத இதழில் வெளிவந்திருக்கிறது.

இதன் மூலம் வாசிப்போர் அனைவருக்கும் தமது தாய்மாரைப் பற்றிய அருமையும், சிறப்பும் மேலும் அதிகமாகும்.

இந்தச் சம்பவம் என் கண்முன் நிகழ்ந்ததால் இன்றுவரை என்னால் மறக்க முடியவில்லை. நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. நான் இந்த தாய்மையை நினைத்து பெருமை கொள்வதும் வருந்து வதும் உண்டு.

நாங்கள் இருந்த வீட்டிற்குப் பக்கத்தில் தான் அவர்களது வீடு. எங்களுக்கு அவர்களுடன் எந்த தொடர்பும் அப்போது இல்லை. பார்த்துச்சிரிப்பது கூட இல்லை. ஆனால் அந்த தாய்க்காக இன்று கவலைப்படுகிறேன்.

நாம் வந்த புதிசில் அவர்களின் பின்பக்க வீட்டுத் தோட்டத்தில் கதிரையைப் போட்டுக் கொண்டு ஒரு முதியவர் இருந்து முளிசிக் கொண்டிருப்பார். பார்க்கவே பயமாக இருக்கும். நான் பலமுறை சிரித்துப் பார்த்தேன். அதற்கு அவர் என்னை முறைத்துப் பார்ப்பதுபோல் அப்போது எனக்குத் தோன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த மனிதர் எப்பவும் இப்படித்தான். ஒருத்தரோடையும் கதைக்காது. ஆனால் மனுசி நல்ல மனுசி. அந்தாளுக்குப் பயத்தில ஆரோடையும் கதைக்கிறதில்லை. அவர் இல்லாத நேரத்தில இந்த வேலிமட்டும் வந்து கதைக்கும்." இது எங்கள் வீட்டுக் கீழே வாழ்ந்து வருகிற றேசி என்னிடத்தில் சொன்னது.

பிள்ளைகள் இல்லையா? என்று நான் கேட்டதற்கு. "ஏனில்லை இரண்டு பெடியள். ஒருவன் உங்கள் நாட்டுப் பக்கம் போனவன் திரும்பி வரவேயில்லை. ஒருவன் பேர்லினில் பாராளு மன்றத்தில வேலை. அவன் எப்பாலும் இருந்திற்று வருவான். மற்றவன் இந்தியாவில் இருப்பதாகக் கேள்வி. இந்த மனிசன்ர குணத்தால அவன் திரும்பி வர விரும்பவில்லை. இருபத்தைந்து வருசம் இருக்கும். ஏதோ மதம்மாறி சாமியாராகி விட்டானாம். வேவா, என்னிடம் சொல்லிக் கவலைப்படுவா. என்று றேசி என்னிடம் சொல்லி இருக்கிறா. வேவாதான் அவவின்ர பெயர். சில வருடங்களில் அந்த மனுசனும் செத்துப் போய்விட்டது. அது கூட எனக்குத் தெரியாது.

எங்க அந்த ஆளைக் காணேல்லை என்று றேசியைக் கேட்ட போதுதான். அவர் இறந்த செய்தி எனக்குத் தெரிஞ்சது. இத்தனைக்கும் பக்கத்து வீடு. எங்கள் வீட்டிற்குக் கீழ் எனக்கும் ஒரு வீட்டுத்தோட்டம் இருந்தது. நான் இருந்த வீட்டிற்கு சொந்தமானது. கோடை காலத்தில் வேலை முடிஞ்சு வீட்டிற்கு வந்து.

தோட்டத்தில் தான் மிகுதி நேரத்தைச் செலவழிப்பேன். அதில் ஒரு மகிழ்ச்சி இருந்தது. எனக்கு அதில் விருப்பமும் அதிகம். இதனால் எங்கள் வீட்டைச்சுற்றி இருப்பவர்கள் எங்களுடன் ஆரம்பத்திலிருந்ததை விட நட்போடு இருந்தார்கள். பெரும்பாலான ஜேர்மனியருக்கு சோம்பேறியாய் இருப்பவர்களைவிட உழைப்பவர் களை அதிகம் பிடிக்கும். அதனால் தோட்டத்தில் நிற்கும் என்னுடன் நட்போடு பழக ஆரம்பித்தார்கள். நானும் தோட்டவிளைச்சல்களை அவர்களுக்குக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். ஆனால் அதனை உடன் வாங்க மறுத்தவர்களே அதிகம். எவ்வளவு கஸ்ரப் படுகிறாய் நீ பிள்ளைகளுக்குக் குடுத்துச் சாப்பிடு என்பார்கள். அடுத்த வர் உழைப்பை அபகரிப்பது பெரும்பாலான ஜேர்மனியருக்குப் பிடிப்பதில்லை. தங்களுடையதையும் இலகுவில் கொடுக்க மாட்டார்கள். அதனால் உதவமாட்டார்கள் என்று அர்த்தமில்லை. அவ்வாறான அமைப்புகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக சிறுதொகையாவது பெரும்பாலானவர்கள் வழங்குவதுண்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனது தோட்டத்தில் போஞ்சி, கரட், சுக்கினி, உருளைக் கிழங்கு, எங்கட சின்ன வெங்காயம், கோவா, பூசணி என்று பயிரிடுவேன்.

எல்லாமே இயற்கை உரத்தில் விளைபவை.

வேவாவும் சிரிப்பில் ஆரம்பித்து என்னுடன் நிறையக் கதைக்க ஆரம்பித்தார். எங்களைப்பற்றியும் அவ தெரிஞ்சு வைச்சிருந்தா.

றேசி சொல்லியிருக்க வேணும் என்று நான் நினைத்துக் கொண்டேன். தனக்கு எழுபத்தைந்து வயது கடந்து விட்டது என்று அவவே என்னிடம் சொல்லியிருந்தா. பார்த்தால் சொல்ல முடியாது. அழகான பெண்ணவர்.

தனது மகன் இந்தியாவில் பெங்களூரில் இருப்பதாகவும், எத்தனை வருடங்கள் நான் அவனைப் பார்க்கவில்லை என்று கவலைப் படுவா. “வாழ்க்கையில் அவனைப் பார்ப்பேனா? என்கிற கவலைதான் இப்போது எனக்கு. இந்த நினைவுகள் தான் தினம் எனது வாழ்க்கை யாகிவிட்டது. நீ இந்தியா போனால் என்னையும் கூட்டிக் கொண்டு போறியா”? என்று சந்திக்கும்போது கேட்பார்.

அப்போது அவரின் கண்களைப் பார்க்க முடியாமல் இருக்கும். எனதுகண்ணிலும் நீர் சுரக்கும். இந்த வேளையில் என்ர அம்மாவையும் நினைப்பேன். அந்தக் கவலை எத்தகையது என்பதை தாயை, நீண்ட காலம் பிரிந்திருக்கும் அனைவருக்கும் இருக்கும்.

தானும், சினேகிதியும் மகனைப் பார்க்கப் போவதாகச் ஒருநாள் சொல்லிச் சந்தோசப்பட்டா. தனக்கு விமானத்தில் பறக்கப் பயம். அதனால் தான் அவவைக் கூட்டிக் கொண்டு போறன் என்றார். நானும் அவருக்கு வாழ்த்துக் கூறினேன்.

எனக்கும் மனம் சந்தோசமாக இருந்தது. மகனைக்காணாது ஏங்கிய அந்தத் தாயின் தவிப்பை அறிந்தவன் நான்.

என் மனைவியிடம் அதனைச் சொல்லி மகிழ்ந்தேன்.

ஒரு மாதத்திற்கு மேலாக மகனோடு அங்கு நின்றிருக்க வேணும். அடிக்கடி நான் திரும்பித்திரும்பி அந்த வீட்டைப் பார்ப்பதுண்டு.

அந்த சந்திப்பைப்பற்றிய அவரது மகிழ்ச்சியில் பங்குகொள்ள எனக்கும் ஆர்வம் அதிகம் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் தோட்டத்தில் நின்ற என்னை பரபரப்போடு அழைத்தார். இந்திய வெக்கையால் உடல் சிவந்திருந்தது. பெங்களூர் என்பதால் வெயில் அதிகம் தாக்கவில்லை. மகனைச் சந்தித்த பூரிப்பு அவர் முகத்தில் தெரிஞ்சது.

மண்வெட்டியை வைத்துவிட்டு வேலியடிக்குப் போனேன். நலங்களை விசாரித்தேன். நிறையக்கதைக்க வேணும் நாளைக்கு வீட்டிற்கு வருமாறு அழைத்தார். எடுத்த படங்களைக் காட்டி மகிழ்ந் தார். மகனுடைய பெயர் எறிக் என்பதை முன்னமே சொல்லியிருந்தார். சாமியாரைப் போல் காவி உடையில் இருந்தான் எறிக். "எனி செத்தாலும் பரவாயில்லை. என்ர பிள்ளையைப் பார்த்திற்றன்." என்று பூரித்தார்.

ஒருநாள் அவசரமாகக் கூப்பிட்டார். அவர் முகத்தில் மலர்ச்சி குடியிருந்தது. "என் மகன் எறிக் வாறான். என்னைப் பார்க்க முடியாமல் அவனால் இருக்க முடியவில்லையாம்". தாய்மை என்கண் முன்னால் சிலிர்த்துப் போய் நின்றது. இடைவெளி விழுந்த அந்த வாழ்க்கையில் அவரது இந்தியப் பயணம் நெருக்கத்தை ஏற்படுத்தி யிருந்தது.

என் மகனை வந்து பார்ப்பியா? அவன் சந்தோசப் படுவான்." என்று என்னைக்கேட்டார். நிச்சயமாக என்றேன் நான்.

காவியுடையில் தான் அந்தச் சாமியைக் கண்டேன். அக்கம் பக்கம் இருந்தவர்கள் புதினமாகப் பார்த்தார்கள். அவனை தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று எல்லோருமே புதினமாகப் பார்த்தார்கள்.. அவன் மச்சம் சாப்பிடுவதில்லை என்று முன்னமே வேவா என்னிடம் சொல்லியிருந்தார். ஏழெட்டு மரக்கறிகள், அப்பளம் மிளகாயுடன் பசுமதி சோறும் கொண்டு அவர்கள் வீட்டிற்குப் போனேன். அவனுக்கு அவ்வளவு சந்தோசம். எனக்கு முன்னாலேயே சாப்பிட ஆரம்பித்தான். நல்லா சுவையாக இருப்பதாக புழுகித்தள்ளினான். எனக்கும் மனம் நிறைந்தது. அவன் உடலில் இருந்து வந்த சந்தன வாசம் இன்றும் என் நெஞ்சில் நிற்கிறது. எறிக் அன்பும், அறிவும் பண்பும் கொண்டவன். நட்பு அவனிடத்தில் நிறையவே இருந்தது.

சந்தித்து கதைக்கிற நாட்களில் "இன்னும் ஒரு கிழமை இருக்கு எறிக் போவதற்கு, என்னால் இப்ப முடியவில்லை. அவனை விட்டிட்டு இருப்பனோ தெரியவில்லை. பார்க்காமலே இருந்திருக்க லாம் எனத்தோன்றுகிறது." என்று வேவா என்னிடம் சொல்லிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்பட்டார்.

அவர் நன்றாக வாடியிருந்தார். பிரியும் துயர் அவர் கண்ணில் தெரிந்தது. நான் எப்படித் தேற்றுவேன். அது தாய்மையின் ஏக்கம். தவிப்பு.

மனைவியிடம் சொல்லிக் கவலைப் படுவேன்.

அவ்வளவுதான் என்னால் முடிந்தது.

போவதற்கு சில நாட்களே இருந்தன. வேலையால் வந்த போது என்மனைவி அந்த செய்தியைச் சொன்னாள்.

"வேவாக்கு கடுமை வருத்தம் போல, அம்புலன்ஸ் வந்து ஆளைக் கொண்டு போகிது." நானும் அதிர்ந்து போனேன்.

அன்று பின்னேரமே நானும் மனைவியும் ஆஸ்ப்பத்திரியில் இருந்த வேவாவைப் பார்த்தோம். அவவுக்கு அது சந்தோசமாக இருந்தது.

பார்த்த போது பரவாயில்லை உசாராக இருந்தா பக்கத்தில் எறிக் கவலையோடு நின்றிருந்தான். நாளை மறுநாள் புறப்படுவதாகச் சொன்னான். இன்னும் சில நாட்கள் நிற்க முடியாதா என்று கேட்டேன்.

"எப்போதோ ஒருநாள் போகத்தானே வேண்டும். அவ எழுந்திற்றா. இனிமேல் அவ சுகமாக இருப்பா என்றான்.

அவன் வார்த்தையில் நம்பிக்கை தெரிந்தது. "எனக்கு அங்கே நிறைய வேலை காத்திருக்கு. நான் அவசியம் போகத்தான் வேணுமென்றான்."

அவனைப்போல் நானும் அவ நலம்பெறுவா என்ற நம்பிக்கையோடு இருந்தேன்.

அதன் பிறகு நான் எதுவும் கதைக்கவில்லை.

மறுநாள் வேலை செய்து கொண்டிருக்கும் போது இகேபேட் அவசரமாக வந்து சொன்னான். வேவா போயிற்றா. நான் அதிர்ந்து போனேன். கேபேட் எனது வீட்டிற்குக் கீழ் இருப்பவன். அவனும் நானும் கூட இது பற்றிக் கதைத்திருக்கிறோம்.

வேலையால் வந்து சொன்னபோது தான் என் மனைவிக்கும் தெரிந்தது. இருவருமே கவலைகளைப் பரிமாறிக் கொண்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ப முடியவில்லை.

நேற்று நல்ல உசாராத்தானே மனுசி இருந்தது. மனைவி என்னிடம் சொல்லி கவலைப் பட்டாள். "எறிக் எனக்கு மூத்த பிள்ளை. நான் செத்தால் அவன் என்னருகில் இருந்து எனக்காகப் பிரார்த்திக்க வேணும். அம்மாவுக்குரிய கடமைகளைச் செய்யவேணும். அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும். அவன் இல்லையென்ற வேதனையை என்னால் தாங்கமுடியவில்லை."

வேவா கடைசியாக எனக்குச் சொன்ன உருக்கமான வார்த்தைகள் அவை. அவன் நிற்கும் போதே அந்த தாய்மை இவ்வுலகிற்கு விடைகொடுத்தது. பெத்த மகனாக அவன் கடமைகளைச் செய்கிறான். பெறாத மகனாக நான் நின்று உருகுகிறேன்.

பெண்மையையும், தாய்மையையும் போற்றுகிற அனைவருக்கும் இச்செய்தியைச் சமரப்பிக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டையும், வேடிக்கையும்!

வனம் என்றாலே வனப்பு, வளம், வாளிப்பு, வாசம் இப்படியே வர்ணித்துக்கொண்டே போகலாம். வன்னி பரந்து பட்ட பெரும் காடுகள் நிறைந்த பிரதேசம், பாலையும், வீரையும், முதிரையும், கருங்காலியும், கொண்டலும் கூடிச் சிரிக்கும் சோலை இது. பலன் தரும் பழமரங்கள், மூலிகைச் செடிகள் என்றும், கொடியும், செடியுமாய் பூத்துக்குலுங்கி மணம் வீசும் ஒரு பெருஞ்சொர்க்கம் வன்னிக்காடுகள்.

ஒரு காலத்தில் குடியேறிகள் வாழ்ந்து இடம் பெயர்ந்து திரும்பவும் காடுகளான வரலாறும் இதற்குள் அடங்கும். இங்கே ரசிக்கத்தக்க கலைவடிவங்கள் நிறை யவே இருக்கின்றன. வேட்டையாடுவதையும் ஒரு கலை யாக எண்ணி வாழ்வோர் பலர் இன்னும் இருக்கிறார்கள்.

இதன் கட்டுரை முப்பது நாப்பது வருடங் களுக்கு மேல் வன்னியில் வாழ்ந்து வேட்டையைப் பற்றி அறிந்தவர்கள் சிலரின் கூற்றாக அமைகிறது.

சிலர் இதனைத்தொழிலாகவே செய்து வாழ்க்கையை ஓட்டிவந்திருக்கிறார்கள். அவர்களின் அனுபவங்களை வாய்வழி கேட்டு ஆவென வாய்பிழந்த வர்களில் நானும் ஒருவன். அதனால் ஈர்க்கப்பட்டு வேட்டைக்குப்போய் அனுபவப்பட்ட வரலாறுகள் என்னிடமும் பல உண்டு. இது தொழிலாகச் செய்த தல்ல வேட்டை என்கிற பெயரில் வேடிக்கைக்காகச் செய்தது.

சில சந்தர்ப்பங்களில் வேட்டையும் ஆடி யிருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கு வேட்டை, குழுமாட்டு வேட்டை, விடிய விடிய காடுகளில் சுற்றித்திரிவது, வயல்வெளிப் பண்டிக்காவல், உடும்பு வேட்டை என்பனவும், அடங்கும். இதைப்பற்றி மேலும் மிக விரிவான கட்டுரைதான் எழுத வேண்டும். வேட்டைக்கலையில் அவ்வளவு விடயம் இருக்கு.

இந்த அனுபவங்களை கதைவழிக் கேட்கும் போதே அக்கறையோடு கேட்டு ஆசைப்படுவோர் அதிகம்.

என்னையும் இதில் சேர்த்துக் கொண்டே இக்கட்டுரையைப் பதிவு செய்கிறேன். அப்போது வாலிபவப் பருவம். தொழில் நிமித்தம் கொழும்பில் சில வருடங்கள் தங்கியிருந்த காலம். ஊருக்கு வந்து தங்கும் காலத்தில் இரண்டு மூன்று நாட்களில் இந்த வேட்டை ஆசை வருவதுண்டு. நண்பர்கள் இதற்கென்றே இருக்கிறார்கள். அவர்களைச் சேர்த்துக் கொண்டு தண்ணீரூற்று, பூதன்வயல்வெளி, நித்தகைக் குளக் காடுகளில் திரிஞ்ச நாட்கள் சந்தோசம்தான். நண்பன் சிவ நாதன், நண்பன் காந்தன், திருநாவுக்கரசு, தங்கராசன், சீலன் என்று இன்னும் பலர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் எமது நட்பு வட்டம். இவர்கள் தவிரவும் கைதேர்ந்த வேட்டைக்காரர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஒரு நாள் நானும் சிவநாதனும், காந்தனும், திருநாவுக்கர சனோடு முறிப்புக்குள காடு நோக்கிப் பயணமானோம். போகும் போது அப்பன் வீட்டில் பனங்கிழங்கும் அவிச்சுக் கொண்டு மிளகாய்த்தூளும் வாங்கிக் கொண்டு சிரிப்பும், களிப்புமாக காட்டுக்குள் இறங்கினோம். பகலிலேயே இருட்டாக இருக்கும் காடு, இரவில் எப்படி இருக்குமென்று யோசித்துப் பாருங்கள். போகும்போதே ஜில்வண்டுகளின் சத்தம், மின்மின்மினிப் பூச்சிகளின் ஜாலவித்தை. எல்லாம் சேர்த்து பலத்த அமைதி நிலவும். வேட்டைக்குப் போகிறவர்களின் காலடிச்சத்தமே கேட்கக்கூடாது என்று தலைமை தாங்குபவர் முதலே சின்ன சொற்பொழி வாற்றுவார். காலில் செருப்புக் கூட போடக் கூடாது. அடிமேல் அடிவைச்சு மெது வாகப் பின் தொடர்வோம். அவர் கையில் மாத்திரம் பவரான ரோச் லயிற் இருக்கும். முதலாவதாகக் கண்கொடுக்கும் மிருகம் எதுவானா லும் வெடி வைக்க வேண்டும் என்பது வேட்டைத்தர்மமாம்.

சில வேளைகளில் எதுவுமே சந்திக்காது. கொண்டுபோன பனங்கிழங்குகள். பலகாரங்களைச் சாப்பிடுவதோடு சரி. கதை பேச்செல்லாம் இரகசியக் குரலாகவே வெளியில் வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலில் முள்ளுக்குத்தினால் கூட சத்தம் போடக்கூடாது. இவையெல்லாம் வேட்டையின் நடைமுறைச்சட்டங்கள். இருட்டில் பின்னால் வாறவர் தடுக்குப் பட்டுவிழுந்தால் எல்லோரும் கொல் லென்று சிரித்துவிடுவதுண்டு. ஆனால் வேட்டைத்தலையாரி முறைத்துப் பார்ப்பார்.

காலைப் பதம்பார்க்கும், தொட்டாச்சி முள்களுடன், முட் செடிகளும் சேர்ந்து கொள்ளும். இரத்தமும் வரும். மரங்களோடு மரங்களாக நிற்கும் காய்ஞ்சொண்டி பட்டால் நெருப்பால் சுட்டது போல் சுர்ரென்று எரிந்து அரிக்கும், சொறிஞ்சு கொண்டு போக வேண்டியது தான். இந்த வேதனைகளோடு மூலிகைச் செடிகளின் வாசம் இதமாக இருக்கும். வேட்டை என்பது ஒரு அனுபவம். வேடிக்கை நிறைந்தது.

அன்று நாங்கள் போனபோது நீண்ட நேரம் எந்த மிருகமும் சந்திக்கவில்லை. முறிப்புக்குளக்கட்டில் ஏறி நடந்து பூதன்வயல் வெளிதாண்டி காட்டில் இறங்கினோம். சத்தம் போடாமல் வாங்கோ இந்தக் காட்டு மிருகங்கள் கள்ளனுகள். சின்னச்சத்தம் கேட்டால் காணும், பறந்திடுங்கள், தலைவரின் கட்டளை. கொண்டு போன பனங்கிழங்கும் சாப்பிட்டு முடிஞ்சு போச்சு. நீண்ட நேரம் நடந்ததால் பசி எடுத்தது. தொடர்ந்து நீண்டதூரம் நடந்தும் எதுவும் சந்திக்க வில்லை. டேய் கொஞ்சத்திற்கு இருப்பம் மச்சான் என்றேன். காந்தன் என்னை சற்றுக்கோபமாய்ப் பார்ப்பதுபோல் பார்த்தான். “இதுதான் இப்படியானவங்களைக் கூட்டிக் கொண்டு வரக்கூடாது” என்று சலித்துக் கொண்டான். “சரி சரி இப்பவொரு வெட்டை வரும் அதில இருங்கோ என்று சொல்லிக் கொண்டு தனியாக வலது பக்கமாக இறங்கி நடந்தான். அவன் போய் பத்து நிமிடம் சென்றிருக்கும். டமார் என்று ஒரு வெடிச்சத்தம் கேட்டது.” வைச்சிற்றான்ரா வெடி, இது தைச்சவெடி.”என்றான் சிவநாதன். அவனுக்கும் வேட்டை அனுபவம் நிறைய உண்டு.

திருநாவுக்கரசு பரபரப்போடு அவன் சென்ற வழியையே பார்த்துக் கொண்டு நின்றான். அவன் என்ன கொண்டு வருவான் என்பதைப் பார்க்க எனக்கும் அந்த ஆவல் இருந்தது. கொஞ்ச நேரத்தில் அவனும் வந்தான். கையில் சின்ன மிருகம் ஒன்று இருந்தது.

மானின் முகம் தோலெல்லாம் மானைப்போல் புள்ளி, முயலைவிடப் பெரிசு. நான் இதுவரை இப்படி ஒரு அழகான மிருகத்தைக் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் உக்கிளான்" என்று திருநாவுக்கரசன் சொன்னான். நல்ல இறைச்சி மச்சான்.

இதை ஒரு வழிப்பண்ணுங்கோடா பசி குடலைப்பிடுங்கிது என்றேன் நான். "இதை உரியுங்கோ நான் இப்ப வாறன்" என்று சொன்ன காந்தன் திரும்பவும் காட்டுக்குள் இறங்கினான்.

பக்கத்தில் நின்ற பட்ட மரமொன்றில் உக்கிளானைக் கட்டிய திருநாவுக்கரசு உரிக்க ஆரம்பிச்சான். சிவநாதன் லயிற்றைப்பிடிக்க அலுவல் நடந்தது. "இதை லேசாக உரிக்கேலாது. தடிப்பான தோல்." இதை நெருப்பில் வாட்டினால் சுப்பராக இருக்கும் பண்டி இறச்சி போல் வார் கடிபடும், தனது பங்கிற்கு சிவநாதனும் கருத்தொன்றைச் சொன்னான்.

உரிச்சு முடியவும். காட்டைக் கிழிச்சுக் கொண்டு அந்தலயிற் வெளிச்சம் வந்தது. காந்தன் ஒரு சாக்குப் பையைக் கொண்டு வந்து பொத்தென்று போட்டான். அதற்குள் சில சட்டி பானைகள் கிடந்து கலகலத்தது. அவனுக்கு இது ஏற்கனவே பழக்கப்பட்டது தான் வேட்டையாடி அங்கேயே சமைச்சுச்சாப்பிடுவதற்காக இந்த சட்டி பானைகளை அங்கேயே பதுக்கிவைப்பார்கள். இது வேட்டைக்கு வருகின்ற வேறு குழுக்களுக்கும் தெரியும்.

அதற்கென்று ஒரு அடையாளம் இருக்கும்.

இது இவர்களுக்கு மாத்திரமே தெரியும்.

"பக்கத்தில் ஆறோடுது தண்ணி எடுக்கலாம். இந்தா அடுப்பிருக்கிது இறைச்சியை அடுப்பில தூக்கி வையுங்க வாறன்" திரும்பவும் அவன் காட்டிற்குள் இறங்கினான்.

சிவநாதனும், திருநாவுக்கரசுவும் நெருப்பை மூட்டி அவன் காட்டிய அடுப்புக் கல்லில் தூக்கி வைத்தார்கள். நெருப்பிற்குப் பக்கத்தில் கையை விரித்தபடி குளிர் காயத்தான் என்னால் முடிந்தது.

சிறிது நேரத்தில் திரும்பவும் காந்தன் வந்தான். அவன் கையில் குளக்கட்டொன்று இருந்தது. மடியில் சின்னச்சின்ன கொச்சிக் காய்கள். இதுதான் திப்பிலிக் கொச்சிக்காய், கானல் கொச்சி என்றும் சொல்லுவார்கள். குளக்கட்டை கொண்டு வந்து போடும்போதே அதன் வாசம் கருகப்பமிலை (கறிவேப்பிலை) என்பதைக்காட்டியது.

இந்தப் பிரதேசங்களில் இவைகள் காடுகளில் நிற்கின்றன. விசயம் தெரிந்தவர்கள், ஏற்கனவே வந்து பழக்கப்பட்டவர்களுக்கு பரிச்சயமாகி இருந்தது. காந்தன் அடிக்கடி வந்ததால் அறிந்து வைத்திருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானல் கொச்சிக்காய் இத்தினையூண்டு தான். கடிச்சால் சொர்க்கம் தெரியும்.

அரிசியையும், இறைச்சியையும் ஒன்றாகப் போட்டு தூள், பத்துப் பதினைஞ்சு கொச்சிக்காயையும் அதோடு சேர்த்து இறைச்சிப் புக்கையென்று இறக்கி வைத்தான் திருநாவுக்கரசு.

காட்டு கருகப்பமிலை வாசம் கமகமத்தது.

பக்கத்தில் நின்றவடலியில் ஓலைவெட்டி பிளாக்களைச் செய்தான் சிவநாதன்.

இதற்குள்தான் சாப்பிட வேண்டும்.

பச்சை ஓலை சுடு புக்கை, பெய்யும் பனிக்குளிருக்கு சுவையாக இருந்தது.

உறைப்பு ஆளைக் கொண்டொழுப்பியது. ஆனாலும் விடுவதாக இல்லை. இப்படி ஒரு சுவையான உணவை நான் இதுவரை சாப்பிடவில்லை.

இறைச்சி சொல்லி வேலையில்லை.

இப்போது நினைத்தாலும் நாக்கில் சுர்ரென்று எச்சிலை ஊறவைக்கிறது.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. பகிடியும் கதையுமாக சாப்பாடு முடிந்தது.

மூட்டிவிட்ட அடுப்பில் பெரிய கட்டைகளை செருகி விட்டான் திருநாவுக்கரசு. பனிக்குளிருக்கு இதமாக இருந்தது. காட்டு விலங்குகளின் சத்தம், ஆற்றுக்குள் விழுந்து குளறும் மறிக்கரடிகளின் சத்தம் என்று அந்த அமைதியான நேரத்தில் பக்கத்தில் என்பது போல் கேட்டுக் கொண்டே இருந்தது.

சட்டிபானை இருந்த சாக்கை விரித்து சின்னதாகச் சாஞ்சது தான் தெரியும்.

கண்விழித்தபோது விடிஞ்சிருந்தது. உடுத்திருந்த சாறத்தால் போத்தி குறண்டிக் கொண்டு படுத்திருந்தேன். மூட்டி விட்ட நெருப்பு அணையாமல் அடங்கி எரிந்தது. அந்த நாசமறுப்பான்கள், ஒருத்தரையும் காணவில்லை. அப்ப நான் இந்தக் காட்டுக்குள்ள தனியப்படுத்திருந்தேனா?

இல்லாட்டி ஒழிஞ்சு விளையாடுறாங்களா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேய் காணும் வாங்கடா என்று குரல் கொடுத்தேன். ஒரு சிலமனும் இல்லை. விட்டிட்டுப் போயிற்றாங்களோ!சீ அப்படிச் செய்ய மாட்டங்கள். பார்ப்பம் வருவாங்கள். என்னைச் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

சுற்றிவர பறவைகளின் இனிமையான குரல்கள். மந்திகள் அலப்பரிக்கும் சத்தம். மிருகங்களின் விதவிதமான குரல் வளங்கள். ஆற்றங்கரையில் நின்று அலறும் ஆட்காட்டி குருவிகள். நல்ல காலை தான் ரசிப்பதற்கு நான் மட்டும்தான் இருந்தேன்.

பசியெடுத்தது. மிச்ச இறைச்சிப் புக்கையை அடுப்பில் வைத்து சுடவைச்சு சாப்பிட ஆரம்பித்தேன்.

"உங்கேற்றா சாப்பிடுறான்ரா?" முதல் வந்த காந்தன், குரல் கொடுத்தான். அவன் நடையில் ஒரு மிடுக்கிருந்தது. மற்றவர்கள் பின்னால் வந்தார்கள். இரண்டு மூன்று ஓலைக்குடலைகளை தடியில் தொங்க விட்டிருந்தார்கள். ஓ காந்தனின் மிடுக்கான நடைக்கு இதுதான் காரணமோ என மனதில் நினைத்துக் கொண்டேன்.

நீங்களும் ஒரு மனுசர்தான்.

சிரிக்காதை இந்தக் காட்டுக்குள்ள என்னை தனியாத்தானே விட்டிட்டுப் போனனீங்கள். "அதுதானே இந்தப்பெரிய வீரங் கட்டையை மூட்டிவிட்டுப் போன்னாங்கள். நீ விட்ட குறட்டையில எந்த மிருகமும் கிட்ட நெருங்கி இருக்காது." என்று கூறிப்பலமாகச் சிரித்தான். அவர்களும் சேர்ந்து சிரித்தார்கள். என்னடா இறைச்சி இது. "பிறகென்ன மான்தான். பெரியதொரு மான் மச்சான்" என்றான் சிவநாதன். "நீ வந்திருந்தால் கஸ்ரப்பட்டிருப்பாய். மிருகங்கள் போன அதர் அடியெடுத்து வைக்க முடியாத அளவிற்கு தொட்டாச்சிணுங்கி இஞ்ச காலப்பார்." என்றான் காந்தன். ஒவ்வொருவற்ற காலிலும் தொட்டாச்சி கிழிச்ச காயங்கள், நல்லகாலம் நான் தப்பிற்றேன் என்று மனதிற்குள் நினைத்தேன். மிச்சப்புக்கையையும் பகிர்ந்து சாப்பிட்ட பின் காந்தன் சட்டிபானைகளை இருந்த இடத்தில் வைத்தான். பின்பு வீடு நோக்கி நடந்தோம். செருப்பில்லாமல் நடந்து எனது கால்கள் வீங்கி நடக்கமுடியாமல் வலி எடுத்தது.

இலைகுழைகளைக் காலில் சுற்றிக் கட்டினார்கள். ஆனாலும் முடியவில்லை. வந்து சேர நான்கு மணித்தியாலத்திற்கு மேல் எடுத்தது. நான் மிகவும் வேதனையை அனுபவித்தேன் தான் ஆனாலும் அந்த நாளை மறக்கமுடியாது.

இப்போதைக்கு இதைமுடிக்கிறேன். மீண்டும் தண்ணி முறிப்புக் காட்டில் சந்திக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா உன்னை நினைத்து...

அம்மா நீ செய்த தியாகங்கள் எத்தனையோ! நீ அப்பழுக்கற்ற கடின உழைப்பாளி என்பதை நாம் அறிவோம்.

அப்பு இருந்த காலத்தில் ஆரோக்கியமாக வாழ்ந்தவரில்லை. வைத்தியசாலையில் நீண்ட காலம். அப்போதும் அம்மாவே குடும்பத்தைச் சுமந்தவர்.

அம்மா அதிக உயரம் இல்லாத சின்னமனுசி உழைப்பால் உயர்ந்தவர் என்பதால் என் இதயத்தில் யாராலும் எட்டித்தொட முடியாத உயரத்தில் இருந்தார். இருக்கிறார்.

நாங்கள் நண்டும் குஞ்சுகளாக இருந்த காலத்தில் இருந்தே அம்மாவே பொறுப்பானவர்.

வயல் வேலையென்றால் என்ன, வீட்டு வேலை என்றாலென்ன அம்மாவுக்கு நிகர் வேறு யாருமில்லை.

இருக்கின்ற போது சிறப்பாக வைத்திருப்பதை விட, இல்லாத போது சிறப்பாக வைத்திருப்பதே குடும்பத் தலைவியின் ஆளுமை. இதனை அம்மா சிறப்புறச் செய்தவர்.

நான் அப்போது வியாபார நிமித்தம் கொழும்பில் இருந்தேன். ஊருக்கு வருவதே அம்மாவைப் பார்ப்பதற்காகத்தான்.

சில மணித்துளிகள் அம்மாவின் மடியில் படுத்துறங்கும் அந்தச்சுகம் இன்று வரை இன்பத்தைத் தருகிறது. ஏங்க வைக்கிறது.

ஒருமுறை நான் கொழும்பில் இருந்து வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வரத்து அறிவித்தலின்றி திடீரென்று தான் இருக்கும். நேரம் இரவு பத்து மணிக்குமேல் இருந்தது.

சின்னக்காவும் பிள்ளைகளும் தான் வீட்டில் இருந்தார்கள். அவர்கள் படுக்கைக்குப் போயிருந்தார்கள்.

அம்மாவைத் தேடினேன். அம்மா படுத்திருக்கும் இடத்தில் அம்மாவைக் காணவில்லை.

நான் வந்திருந்த ஆரவாரத்தில் அக்காவும் எழும்பி விட்டா. "என்னடா திடீரென்று இந்த நேரம் வந்திருக்கிறாய்"

இது சாதாரண கேள்விதான்.

அம்மா எங்கே என்றுதான் எனது அடுத்த கேள்வி இருந்தது.

"அதனையேன் கேட்கிறாய். அம்மா சூட்டுக்காவலுக்கு வயலுக்குப் போயிற்றா"

இந்த நேரத்திலா?

சுற்றிவர இருந்த வயலெல்லாம் சூடடிச்சிற்றாங்கள். அவங்கள் தங்கிட வேலை முடிய கண்டாயங்களைத் திறந்து விட்டிட்டாங்கள். எங்கட சூடென்னும் அடிக்கேல்ல. வயலெல்லாம் மாடய்யா. தம்பிக்கு இரவு வேலை. வேற என்ன செய்யிறது. உனக்கு அம்மாவைப் பற்றித் தெரியுந்தானே. லாம்பை எடுத்துக் கொண்டு மனுசி, சாப்பிடவும் இல்லை. சாக்கொன்றைச் சுற்றிக்கொண்டு ஆள் போயிற்றுது

"சாப்பிடவும் இல்லையா?" இல்லையடா. எணேய் சாப்பிட்டுப் போணை என்றேன்.

"நான் இஞ்ச இருந்து சாப்பிட அங்க சூட்டை மாடு தின்னிட்டுப் போயிடும். புறுபுறுத்துக் கொண்டு போகுது. கண்டாயங்களைத் திறந்து விட்டவங்களுக்கும் பேச்சுத்தான்."

அக்கா சாப்பாட்டைப் போட்டுத்தா. ஒரு போர்வையும் தா. என்றேன். நான் வயலுக்குப் போகப்போறன்.

"நீ எங்க போகப்போறாய். இந்த இருட்டுக்குள்ள"

அங்க அந்த மனுசி இருட்டுக்குள்ள தனியாக்கிடக்கிது. இஞ்ச நான் நிம்மதியாய்ப் படுக்கேலுமே?

அக்கா கட்டித்தந்த சாப்பாட்டையும் தண்ணீர்ப் போத்தலையும், போர்வையையும், ரோச்சையும் எடுத்துக் கொண்டு சைக்கிளில் வயலை நோக்கிப் புறப்பட்டேன். கும்மென்று அமாவாசை இருட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் வீட்டிலிருந்து வயல் ஒரு கிலோமீற்றர் தள்ளியிருந்தது. ஊருக்கு வெளியே ஒரு காட்டுப் பகுதி அது. அளம் தாண்டி சிறு பற்றைக் காடு அதையும் தாண்டிப் போகத்தான் வயல் வெளி வரும்.

இந்தப் பகுதியில் இப்படி இருட்டுக்குள் எந்தப்பெண்ணுமே தனியாக இருக்க மாட்டாள்.

பக்கத்து விடத்தல் காட்டில், நரி ஊளையிடும் சத்தம் அளத்திற்குள் போகும் போதே கேட்டது.

பாவம் அம்மா என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்

வயல் வேலியில் சைக்கிளைச் சாத்திவிட்டு கடப்பால் கடந்து வயலுக்குள் போனேன். போகும்போதே அம்மா என்று குரல் கொடுத்தேன்.

திடீரென்று போனால் அம்மா பயந்து போய்விடுவா என்று எனக்குள் நினைத்தே குரல் கொடுத்தேன்.

நான் வருவேன் என்று அம்மா துளியளவும் நினைத்திருக்க மாட்டா.

தீவறையை மூட்டி அதற்குப் பக்கத்தில் இருந்து கொண்டு இடைக்கிடை ஆகூ என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தா.

தூரத்தில் நின்று அம்மாவைப் பார்க்க அழுகைதான் வந்தது. எங்களை வளர்ப்பதற்காக அம்மாவின் கடின உழைப்பு வயலோடு தான் அதிகம் இருந்தது.

உழுவதில் இருந்து அரிவு வெட்டி சூடடிக்கும் வரை அதற்கு அப்பாலும் இருந்தது.

நான் வருவேனென்று அம்மா கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை.

“இடேய் நீ எப்ப அய்யா வந்தனீ.” சடாரெனத்திரும்பி என்னைப்பார்த்துக் கேட்டா.

என்னம்மா இந்த இருட்டுக்குள்ள வந்து இந்த காட்டுக்கை தனிய இருக்கிறாய்.

உனக்குப்பயமில்லையா என்று கேட்டேன், “எனக்கென்ன அய்யா பயம். எங்களுக்கும் இந்த வயலுக்கை சூடு இருக்கென்று பக்கத்து வயல் காரர் யோசீக்கேல்லை. கண்டாயம் எல்லாம் திறந்து விட்டிட்டாங்கள். காவல் இல்லையெண்டால் சூடு முழுக்க மாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்றிடும். இப்ப எத்தனை தடவை கலைச்சுப் போட்டு வந்திருக்கிறன்."

அம்மா சொன்னபோது இயலாமையின் சாயல் தெரிந்தது. இந்த வயசிலும் உழைக்க வேண்டும் என்கிற அம்மாவின் வைராக்கியத்தை எப்படியென்று நான் சொல்ல.

அம்மா, சாப்பாடு கொண்டு வந்தனான் சாப்பிடணை. அவவுக்கும் நல்ல பசிபோல சொன்னவுடனே அம்மா எதுவும் பறையாமல் சாப்பாட்டை எடுத்தா.

கொண்டு வந்த தண்ணீரில் கையைக் கழுவிவிட்டு. சாப்பாட்டைப் பினைஞ்சு முதலில் எனக்குத்தான் தந்தா.

தன் கையால் எனக்குத் தீத்திவிட்டா.

நல்ல இறால் குழம்பு சாப்பிட அந்த மாதிரி ருசியாக இருந்தது.

அம்மாவின் கையால் தீத்திவிட்டது இன்னும் இரட்டிப்பு சுவையாக இருந்தது.

எப்ப சூடடிக்கிறது. இப்படி ஒவ்வொரு நாளும் இந்தப் பனியுக்குள்ள காவல் காக்க முடியுமே. "நாளைக்கு சிவலிங்கம் வருவதாகச் சொன்னான் வந்தால் தான் உண்மை."

முதல் தெரிஞ்சால் தானே ஆட்களுக்குச் சொல்லலாம். எப்படியும் சூடடிக்க நாலு ஐஞ்சு பேராவது வேண்டாமே.

வேணும் தான். சின்னத்துரையர், சின்னப்பா, துரையர், கோவிந்தன், அவர்களைக் கேட்டால் வருவார்கள்.

இல்லையேல் சூட்டைச் சுற்றி வேலி அடைக்கவேணும்.

அடைச்சாலும் ருசி கண்ட மாடுகள் விடாது. வேலியைத் தள்ளி விழுத்திப் போட்டுத் தின்னத்தான் பார்க்குங்கள்.

சிவலிங்கனுக்கு நேரமில்லாவிட்டால் சிலாவத்தை நாகேந்திரத்தைக் கேட்டுப் பார்க்கலாம். அவன் எப்படியும் உதவி செய்வான் என்று நான் சொன்னேன்.

அவனும் நிற்கவல்லோ வேணும். காலமை போயிற்று வாறன்.

அம்மா மூட்டிவிட்ட தீவறை வெக்கை, பெய்து கொண்டிருக்கும் பனிக்குளிருக்கு இதமாக இருந்தது. விடத்தல் காட்டில் நரிகள் தொடர்ந்து ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

எனக்கு வயல் வெளியில் படுத்து நித்திரை கொள்வதில் விருப்பம் அதிகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தைப் பார்த்தபடி மின்னிக்கொண்டிருக்கும் கும்பல் நட்சத்திரங்களைப் பார்த்தபடி அதுதரும் ஒளியை ரசித்தபடி, முழுநிலவின் அழகில் மிதந்தபடி எத்தனையோ கற்பனையில் கலக்க முடிகிறது.

வயலின் ஒட்டுச்செடிகளில், அதனிடையே நிற்கும் மூலிகை வாசம் என்ன சுகம்.

“நீ கொஞ்சத்திற்குப் படையா” என்ற அம்மாவின் ஆதரவான வருடல் என்னைத் தூக்கத்திற்கு அழைத்துச் செல்ல முயற்சித்தது.

எனக்கு நுளம்பு கடிக்காமல் இருக்க அம்மா விசிறிக் கொண்டிருந்தா. அது இன்னும் இதமாக இருந்தது.

தில்லைமரங்களில் உறையும் நாரைகள் இடைக்கிடை வாக்கு வாக்கென்று கத்தும் சத்தம் பக்கத்தில் கேட்டது.

எனக்குள் இருந்த பிரயாணக்களைப்பு நித்திரையை வர வேற்றது. கண்ணை மூடுவதும் வில்லங்கத்திற்கு கண்ணைத் திறப்பதுமாக இருந்தேன்.

அம்மாவின் தனிமைக்கு எனது துணை அவசியம் என்பதை உணர்ந்தே செயல்பட்டேன்.

நான் எப்போது தூங்கினேன் என்பதை காலை கண்விழித்த போதுதான் தேட முற்பட்டேன்.

இரவு முழுக்க அம்மா நித்திரை கொள்ளவே இல்லை.

பாவம் அம்மா, எத்தனை காலங்கள் எங்களுக்காக கண் விழித்தவ. இன்னும் நாம் அவரை ஓய்வாக இருக்க விடவில்லை. வேலை வெட்டி இல்லாமல் சும்மா இருக்க அம்மாவால் முடிவதில்லை. அப்படி இருக்கவும் மாட்டா.

எங்களுக்கு இன்னும் ஒரு கடைக்குட்டி இருந்தான்.

பக்கத்து வீட்டில் கூழ் காய்ச்சி குடித்ததைப் பார்த்தனான்.

அப்புவிடம் கண்ணகையக்கா வீட்டில் கூழ் காய்ச்சிக் குடிக்கிறாங்கள். பார்க்கவே ஆசையாக இருக்குதென்றேன்.

அதுக்கென்ன காய்ச்சுவம், நாளைக்கு பாலத்தில் இறால் வீசுகிற ஆட்களிடம் போய் இறால் வாங்கிவா என்றார்.

நான் விடிய, அதனை முற்றாக மறந்து விட்டேன்.

அப்புவே எனக்கு நினைவூட்டினார். நானும் பாலத்திற்குப் போனேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே எனது பள்ளி நண்பன் சின்னராசா வலை வீசிக் கொண்டு நின்றான்.

எனக்காக அவன் எதையும் செய்வான். அப்போது ஆறு பாய்ஞ்சு கொண்டிருந்தது. அந்த நேரம் ஆற்றில் இறங்கி வீசுவது ஆபத்து நிறைந்தது.

வெள்ள நேரத்தில் கடல் நீர் வந்து நீரை நிறைப்பதும், வடுவென்றால் திரும்பிக் கடலில் பாய்வதுமாக இருக்கும்.

எனக்காக அவன் முயற்சித்து நீரில் மூழ்கப் பார்த்தான்.

நீச்சல் தெரிந்ததால் அவன் தப்பிப் பிழைச்சான்.

இறாலை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு வா கூழ்குடிக்க என்று அழைப்பும் கொடுத்தேன். வீட்டிற்கு வரும்போது வெளிக் கேற்றில் ஊர்ச்சனம் கூடியிருந்தார்கள். கோயிலுக்குள் பயித்தங்காய் பிடுங்கப் போன நேரம் பாப்பு கடிச்சது.

வைத்தியசாலைக்குக் கொண்டு போன இடைவெளியில் எங்கட தம்பி இறந்து போனான். அப்போது அவனுக்கு ஆறுவயது.

கடைக்குட்டி ஒவ்வொரு குடும்பத்திலும் செல்லப் பிள்ளை.

எங்கள் குடும்பத்தை சோகத்தில் புரட்டிப் போட்ட முதலாவது நிகழ்ச்சி இது. எங்கடை அம்மாவை இது வெகுவாகப் பாதித்தது. மனநிலை பாதிப்புள்ளானவர் போல் காணப்பட்டா. அதிலிருந்து மீள் வதற்கு எத்தனை வருடங்கள் சென்றன.

அவனது கதை நினைவுக்கு வந்தால் அம்மாவின் கண்கள் கண்ணீரைச் சொரியும். அது இப்போதும் தான்.

எத்தனையோ சோகத்தைச் சுமந்தவள் எங்கள் அம்மா.

அம்மா என்றால் எல்லோருக்கும் உயர்ந்தவர்தான். எங்கடை அம்மா போல் யாருக்கும் கிடைக்காது என்பதை நான் நினைப்ப துண்டு.

அந்தச் சூட்டுக்காவலுக்குப் பின் ஒருகிழமைக்கு மேல் செண்டது சூடடிக்க. றைக்ரர் காரர் இந்தா வாறன் இந்தா வாறன் என்று ஏமாத்தி ஒருவாறு சிலாவத்தை நாகேந்திரன் சூடடித்துத் தந்த தாக அம்மா எனக்குக் கடிதம் எழுதியிருந்தா.

இப்படி எத்தனையோ சம்பவங்கள் அம்மாவைப் பற்றி.

தொடர்ந்து எழுதிக் கொண்டே போகலாம். எனக்கு நடந்த பல தாக்குதல்கள் அம்மாவை நிலைகுலைய வைத்திருந்தது. ஒருமுறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில விசமிகளால் முல்லைத்தீவில் வைத்துத் சம்மந்த மில்லாமல் தாக்கப்பட்டேன்.

அந்த நேரத்தில் அம்மா தண்ணிமுறிப்பு வயலில் வேலைசெய்து கொண்டு நின்றா.

செய்தி அறிந்ததும் அம்மா பதறி அடித்துக் கொண்டு எட்டுமைல்கள் நடந்து வந்தா. வந்து என்னைப் பார்த்த கோலத்தை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன். பத்ர காளியாகவே காட்சி தந்தா. தம்பியின் இறப்பு, பெரியக்காவின் மரணம், எனது சிறைச் சாலை, மரணத்திற்கு நிகரான தண்டனைகள் என்று அம்மாவைப் பார்த்து நான் நெகிழ்ந்து போனேன்.

98ம் ஆண்டு பதினான்கு வருடத்திற்குப் பின் இலங்கைக்கு வந்த நேரம். எனது வரவு அம்மாவிற்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததை நானும் பார்த்து மகிழ்ந்தேன். அத்தோடு எனது பிள்ளைகளைக் கண்டது, அவவுக்கு பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

அது நெருக்கடிமிகுந்த யுத்தகாலம். எங்கும் சுதந்திரமாக செல்ல முடியாத நேரம். நாய் குலைத்தாலே பயமாக இருந்தது. ஆமி சுற்றி வளைத்ததாகவே நினைக்கத் தோன்றியது.

அம்மா கண்விழித்துக் காத்திருப்பா.

ஒருநாள் நீ பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு இந்தியாவுக் குப் போயா என்றா.

எனது பாதுகாப்பு முக்கியமாக இருந்தது. எல்லோருக்கும் கதிர்காமம் போக விருப்பமாக இருந்தது. அம்மாவுக்கு அது விருப்ப மில்லை "என்ர பிள்ளையைப் பார்த்திற்றன். கதிர்காமக் கந்தன் ஒண்ணும் பெரிசில்லை யெண்டா. நான் விம்மி வெடித்த கணம் அது. கடவுளே தன் வயிற்றில் பிறந்ததென்று என்னைப் புகழ்ந்து கடிதம் எழுதுவா. எனக்கு வாசிக்கவே சங்கடமாக இருக்கும். ஆனாலும் அம்மாவின் இதயத்தில் அந்த அளவிற்கு இடம்பிடித்தேன் என்ற மனத்திருப்தி இருந்தது.

குடும்பத்திற்காக உழைத்த குலவிளக்கு அம்மா.

எவ்வளவுதான் பணம் அனுப்பினாலும் அவவால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அது எமது நாட்டு நிலமை. அதற்காகவே அவபெயரில் புத்தகம் ஒன்று எழுதினேன். அது அவவுக்கு நல்ல சந்தோசத்தைக் கொடுத்திருந்தது.

படுக்கும் போது தலைமாட்டில் வைத்து ஒவ்வொருநாளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வாசித்து மகிழ்ந்ததாக அக்கா சொன்னா.

இலங்கையை விட்டு வெளியேறும் போது அம்மா அழுதழுது கையசைத்த காட்சி இன்றும் என் கண்களில் நிற்கிறது. அதற்கு என்றுமே மரணமில்லை.

என் மகன் அழுது அடம்பிடித்து அப்பம்மாவைப் பார்த்து வந்தான். பிரிவு என்பது உருவத்தால் மட்டும் வருத்தத்தைத் தருவதில்லை. உள்ளம் உடைந்து நொருங்கி விடுகிறது. அந்த உடைவை அம்மாவின் பிரிவால் உணர்கிறேன்.

அது ஒரு நத்தார் காலம். எங்கள் தொழிலகத்தின் விருந்துபசாரம். ஏனோ அன்று மனம் சஞ்சலப்பட்டது.

என்னை ஏற்றிக்கொண்டு போவதற்காக என் மனைவி பிள்ளைகள் வந்திருந்தார்கள்.

அவர்கள் முகத்திலும் வாட்டம் இருந்தது.

ஏதோ நடந்து விட்டதை உள்ளுணர்வு உணர்த்தியது.

அம்மா... என்று மனைவி ஆரம்பித்தாள்.

எனக்கு விடயம் விளங்கியது. அம்மா போய்விட்டா.

ஒரு உழைப்பு ஓய்வெடுக்கப் போய்விட்டது.

இறுதி நேரத்திலும் கொப்பறா கொத்தும்போது நாரியில் பிடிப்பு ஏற்பட்டதாம். ஆறுபோத்தல் தேங்காய் எண்ணையை காய்ச்சி வைச்சுவிட்டு ஆஸ்ப்பத்திரிக்குப் போனவ.

திரும்பி வரவேயில்லை.

இறுதி நேரத்தில் அம்மா தவறான சிகிச்சையால் மரணமானார் என்றார்கள்.

தான் போகிறேன் என மாமாவுக்குச் (எனக்குச்) சொல்லும்படி சொல்லி விட்டுச் சென்றாராம்.

அம்மாவை நினைத்து எப்போதும் அழுகிறேன்.

அம்மா உன்னை நினைத்து எப்போதும் தான்........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணவாடை!

அவன் அழுதபோது என்னால் தாங்கமுடிய வில்லை. ஏற்கனவே ஒன்று பாதியில் போய்விட்டது. இதுவும் என்னபாடோ தெரியவில்லை. "மச்சான், கமலா பாவமடா. எத்தனை வேதனைகளைச் சுமக் கிறாள். அவள் முன்னால் நின்று பார்க்கவே முடியா திருக்கிறது. எனக்கு எல்லாமே அவள்தான். உனக்கு எல்லாம் தெரியும்." அவன் தேம்பித் தேம்பி அழுதான்.

"டேய்! மனதைக் கைவிடாதே. அவளுக்கு ஒன்றும் நடந்துவிடாது. அவர்கள் நன்றாகப் பார்க்கிறார்கள். நான் பலதடவை இதுபற்றி அவர்களுடன் கதைத்திருக் கிறன். அவர்கள் இப்படி எத்தனை பேரைப் பார்த்திருப் பார்கள். எல்லாமே நல்லதாக முடியும். நீ ஒன்றுக்கும் யோசிக்காதே!" நான் ஆறுதல் கூறியும் அவன் கேட்க வில்லை. கமலா தங்கியிருந்த அந்த வாட்டுக்கு முன்னால் உள்ள மரத்தின் கீழ் நாங்கள் நின்றோம். கமலாவின் அண்ணன் கருணா எங்களுக்குப் பக்கத்தில் ஓரமாகப் போடப்பட்டிருந்த வாங்கில் உட்கார்ந்திருந் தான். அவன் முகத்திலும் கவலையின் சாயல் தெரிந்தது.

வாட்டை விட்டு செல்லம் மிஸ்ஸி வெளியில் வந்தா. அவவை எனக்கு ஏற்கெனவே தெரியும். விரைந்து சென்ற நான் கமலாவின் நிலமைபற்றி விசாரித்தேன். "காய்ச்சல் அளவுக்கு மேல் குளிருடன். மலேரியாவாக இருக்கும் என்று டொக்டர் சந்தேகப்படு கிறார். ரத்தம் பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறோம். உடன் வந்திடும். ரத்தப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. பெரியாஸ்பத்திரிக்கு அனுப்புவது நல்லது என்று டொக்டர் சொன்னார். அம்புலன்ஸுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்திருக்கிறோம். அநேகமாக அம்புலன்ஸ் வந்துவிடும். பெலவீனமாக இருக்கலாம். நிறைய ரத்தம் போயிருக்கு. பிறசர் குறைந்துகொண்டு வருகிறது. பார்ப்பம். பயப்படத் தேவையில்லை." அவ ஒவ்வொன்றாக விழுங்கி விழுங்கிக் கதைத்தது எனக்கு ஒரு மாதிரி இருந்தது.

"அவளை நீங்கள் நேற்றைக்கே கொண்டு வந்திருக்கலாம்."

"இன்றைக்குக் காலையில்தானே இது நடந்தது." நான் சொல்லு முதலே அவ அவசரமாக - அடுத்த வாட்டுக்குப் போய்விட்டா. எனக்குப் பக்கத்தில் சிவா நின்றிருந்தான். வைத்தியசாலை நிர்வாகமே சரியில்லைபோல் அவனுக்குப்பட்டது.

"உவங்கள் ஏதோ பிழைவிட்டிட்டாங்கள் மச்சான். அதுதான் ஆளுக்கொரு பக்கம் நின்று முழுசுகினம். அங்கை உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பது என்னுடைய மனைவி கமலா மச்சான். அவளுக்கு ஏதாவது நடக்கட்டும். எல்லாரையும் கொத்திப் பிளந்து போடுவன்!" அவன் ஆவேசத்தில் கத்தினான்.

"சிவா, பேசாமல் இருடா. டொக்டரும் அவளுக்குப் பக்கத்தில் தான் இன்னும் இருக்கிறார். அப்படியொன்றும் நடந்திருக்காது. எங்கள் நிலமையில் இப்போது அப்படித்தான் இருக்கும்."

"என்னை நீ சமாளிக்கிறாய். அவங்களுக்கு எல்லாம் தெரியும். அவளைப் பார்க்கவும் விடுகிறாங்கள் இல்லை. மச்சான் நீயாவது போய்ப் பார்த்துக் கொண்டு வாடா."

நான் உள்ளுக்குப் போகும்போதே, "இப்போது பார்வையாளர் நேரம் இல்லை. வெளியில் போங்கோ! டொக்டர் நிற்கிறார். பிறகு எங்களுக்குத்தான் பேச்சுவிழும்." பெண்தாதி ஒருவர் தனது கடமை உணர்வுடன் சொன்னபோது என்னால் மீற முடியவில்லை.

"ஒரு நிமிடம் டொக்டருடன் கதைத்துவிட்டுப் போகிறேன்" என்று அனுமதிக்கும் காத்திராமல் உட்புகுந்தேன். கமலாவின் கையைப் பிடித்து டொக்டர் நாடி பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகம் வெளிறி இருந்தது. கண்கள் மூடியபடி அரைத் தூக்கத்தில் இருப்பதுபோல் டொக்டர் என்னை அண்ணாந்து பார்த்தார். அவர் பார்வையில் இவரை யார் உள்ளேவிட்டது என்பதுபோல் அர்த்தம் தெரிந்தது. அவர் கதைப்பதற்கு முன் நானே முந்திக் கொண்டேன். "டொக்டர் இப்போது எப்படி இருக்கிறது?"

கொஞ்சநேரம் அவர் ஒன்றும் பேசவில்லை. என்னை முறைத்துப் பார்த்தார். "அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தெரியவில்லையோ?"

பதில் காரசாரமாக வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அந்த வைத்தியசாலையின் முதன்மை டொக்டர் இல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி லீவில் போன பின்பு இவர் அந்தக் கடமைகளை எப்போதாவது பார்ப்பவர். மற்றும்படி இவர் மூன்றாவதுதான். அவருக்கு வயது ஐம்பதுக்குமேல் இருக்கும். ஏழெட்டுப் பிள்ளைகள். இந்த வைத்தியசாலைக்கு வந்து ஐந்து வருடங்களுக்கு மேல். அவரை அங்கேயே தங்க வைத்தார்கள் பென்சன் காலம்மட்டும் இருக்கட்டும் என்று. நோயாளிகள் எப்போதும் இவரைத் திட்டிக்கொண்டே இருப்பார்கள். மனுசன் நாய்மாதிரி. அன்பாய் ஆதரவாய் கொஞ்சமாவது பேசக்கூடாதோ? வெடுக்குப் பிடுக்கென்று. வருத்தத்தோடு போனவர்களுக்கு வருத்தம் அதிகரிக்குமே தவிர கொஞ்சமும் குறையாது. அத்தி பூத்தாற்போல் மனுசன் எப்போதாவது சிரிக்குமாம். அங்கு வேலைசெய்யும் ஊழியர்களே கதைப்பார்கள். சம்பளநாள் கிட்ட வந்திற்றுது என்று கிண்டலாகப் பேசிக்கொள்வார்கள். அந்த அளவிற்குப் பொருளாதார நெருக்கடி. பிள்ளைகளின் படிப்புச் செலவு, சாப்பாடு, வீட்டு வாடகையென்று ஒருவிதத்தில் பாவம்தான்!

டி.எம்.ஓ. லீவில் போகும்போது, பதிலாக எம்.ஓ.எச்சை நியமித்திருந்தார். அவ ஒரு பெண். இன்று காலை டி.எம்.ஓ எப்படியும் வேலைக்கு வந்திருக்க வேணும். அந்த நம்பிக்கையில் எம்.ஓ.எச். ஏதோ மகாநாட்டிற்காக கொழும்பிற்குப் போயிருந்தா. அடுத்தது இவர்தான். அந்த மனுசனுக்கு ஏற்கனவே ரென்சன் இருந்தாலும் அவருக்கு உள்ளூர விருப்பம்தான். இன்று அவர்தானே முதன்மை டொக்டர். வாட் றவுண்ட், அவருக்குப் பின்னால் ரெண்டு நேர்ஸ். கம்பீரமாக நடக்க முயற்சித்தார். வாழ்க்கையில் எப்போதாவது இப்படிச் சந்தர்ப்பங்கள் வருவதுண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் அதிஷ்டவசமாக சில நோயாளிகள் தப்பித்துக் கொள்வார்கள். இன்று நண்பன் சிவாவின் மனைவி கமலா பாவம். அவளுக்கு இந்த மனுசன் மாறி மருந்தைக் குடுத்துவிட்டது. பக்கத்து “பெட்”டில் இருந்து கதைத்த சனங்கள் சொன்னது எனக்குக் கேட்டது. எனக்குள் யோசித்தேன். டொக்டரின் முகமும் வெளிரிப்போய் இருந்தது. ஏதோ பிழை நடந்துவிட்டது.

“சேர்” என்று மெதுவாகக் கூப்பிட்டார் “இங்கே பாரும். எங்களுடைய கடமையைப் பார்க்க எங்களுக்குத் தெரியும். நீர் முதலில் வெளியே போம்.”

எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டேன். அது ஒரு சின்ன வாட். பத்து நோயாளிகள் மாத்திரம் படுத்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் என்னைப் பரிதாபமாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார்கள். பக்கத்தில் நின்ற செல்லம் மிஸ்ஸி வெளியில் போகும் படி கண்களால் ஜாடை காட்டினாள். வெளியில் நான் போக, சிவா எப்படியும் கேள்வி கேட்பான். என்ன சொல்லுவது என்று தெரிய வில்லை.

அம்புலன்ஸ் வெளியில் வந்து நின்றது. பரபரப்பு. அவசரமாக இரண்டு ஊழியர்கள் வெளியில் இருந்து உள்ளே வந்தார்கள். படுத்திருந்த கமலாவைத் தூக்கி அம்புலன்சில் ஏற்றினார்கள். ஒரு கையில் குளுக்கோஸ் போத்தல். செல்லம் மிஸ்ஸி பத்திரமாக தாங்கி வந்தா. டொக்டர் ஒரு பிரச்சனை முடிந்தது என்பதுபோல் ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டார்.

நான் திரும்பவும் அவர் பக்கத்தில் போனேன். "சார் ஒன்றை யோசிச்சுப் பாருங்கள். எங்களுக்கு நிலமை தெரியாது. நீங்கள்தான் எங்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். மனைவியின் நிலமை தெரியாது நண்பன் வெளியே அழுது வெந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்லுவது என்று தெரியவில்லை. ஓரளவுக்காவது நோயாளியின் நிலமை எங்களுக்குத் தெரிய வேண்டும். நீங்கள் எங்கள்மீது எரிஞ்சு விழுகிறியள்." நான் கொஞ்சம் காரசாரமாகவே பேசினேன்.

டொக்டர் என்னை அண்ணாந்து பார்த்தார். மெதுவாக அழைத்து, "சொறி" என்றார். "கத்தாதையும். எனக்கு உங்கள் நிலமை விளங்குகிறது. நீங்களும் ஒன்றை யோசிக்க வேண்டும். உங்களைவிட நாங்கள் நோயாளிகள்மீது கவனமும் அக்கறையும் கொள்ள வேண்டும். ஒரு நோயாளிக்கு ஏதாவது நடந்தால் நாங்கள்தான் பொறுப்பு. அதனால்தான் அப்படி எரிந்துவிழுந்தேன். நோயாளியின் நிலமை கொஞ்சம் கஸ்ரம்தான். அதிகமாக ரத்தம் போயிற்றுது. ஆனால் பயப்பிடுகிற அளவிற்கு இல்லை. பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பு கிறோம். இங்க வச்சிருந்து ஒண்ணும் செய்யேலாது. டி.எம்.ஓ.வும் இல்லை. எப்படியும் அனுப்பத்தான் வேணும்." அந்த மனுசனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. நன்றாகப் பயந்திருப்பது தெரிந்தது.

"சேர், அம்புலன்சில் ஒருவர் துணைக்குப் போகலாம்தானே" என்று கேட்டேன்.

"நர்ஸ் ஒருவர் கூடவே போவார். முதல், அதற்கு அனுமதியும் இல்லை" என்றார்.

வெளியில் அம்புலன்சைச் சுற்றி சனம் புதினம் பார்த்தது. நண்பன் சிவா கமலாவைப் பார்க்க வேணும் என்று கேட்டதற்கு அனுமதி கிடைத்தது. ஓவெனக் கதறினான். "மச்சான் அவளுக்கு ஒன்றும் நடக்காது. நாங்கள் பின்னால் போவம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலாவின் அண்ணன் கருணாவும் அழுதுகொண்டு பக்கத்தில் நின்றான். “தம்பி கருணா, காரை எடும். நாங்களும் போவம்.” “வீட்டிற்குப் போய் அம்மாவைக் கூட்டிக்கொண்டு போவமே?” கருணா தயங்கித் தயங்கிக் கேட்டான்.

“ஏன் எல்லோரையும்? இருபது மைல் போய்வர நேரம் போய்விடும். நாங்கள் மட்டும் போவம்.”

அம்புலன்ஸ் புறப்பட்டது. சிவா அழுதுகொண்டு காரில் ஏறினான். அவன் தலையை மெதுவாக வருடி என் மார்போடு சாத்திக்கொண்டேன். அவனுக்கு ஆறுதலாக இருந்தது. “அண்ணை பெற்றோல் அடிக்கவேணும்.” கார் சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பியது. அம்புலன்ஸ் வலது பக்கப் பாதையில் போய்க் கொண்டிருந்தது.

பெற்றோல் நிரப்பி நாங்களும் புறப்பட்டோம். என் மனதிலும் பதட்டம். நேரம் மதியம் பன்னிரண்டு மணிக்கு மேல் இருந்தது. பெரியாஸ்பத்திரி இங்கிருந்து தொண்ணூறு மைல் இருக்கும். மூன்று நான்கு மணித்தியாலங்கள் பிடிக்கும். ஒழுங்கான பாதைகளா நம்ம ஊரில். கிடங்கும் பள்ளங்களும். போகின்ற பிரதான பாதையில்தான் எங்கள் வீடும் இருந்தது. “காரை நிறுத்தி வீட்டாருக்கு சொல்லிப் போட்டுப் போவம் மச்சான்.” “நேரம் போகாதே?” “அவர்கள் போறதுக்கிடைல நாங்கள் இடையில் பிடித்திடுவோம்.” கருணா காரை எங்கள் வீட்டு வாசலில் நிறுத்தினான். சிவாவும் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருபவன். சிலவேளைகளில் ரவுணுக்கு வந்தால் தங்கி மறுநாள்தான் வீட்டிற்குப் போவான்.

அம்மாவைக் கண்டவுடன் அழத் தொடங்கிவிட்டான். எதுவும் அறியாத அம்மா திகைத்துப் போய் நின்றா. அம்மாவைக் குசினிக்குள் கூட்டிக்கொண்டு போய் நடந்தவற்றைச் சொன்னபோது அம்மாவுக்கும் கவலையாக இருந்தது. இருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை. “தம்பி, நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ. அப்படி ஒன்றும் நடக்கப் போவதில்லை. இந்த நேரத்தில் பெண்களுக்கு சிலவேளை களில் இப்படி ஏற்படுவதுதான். கடவுள்மீது பாரத்தைப் போடுங்கள். எல்லாம் அவர் பார்த்துக் கொள்ளுவார்.”

அவசரமாக சில உடுப்புக்களை எடுத்து மடித்து வைத்தேன். அதற்குள் அம்மா பாத்திரத்தில் சோற்றைப்போட்டு குழைத்துக் கொண்டு வந்து, “ஆளுக்கொரு கவளம் சாப்பிடுங்கோ, பட்டினி யோடு போகாமல்.”

பரிவோடு சொன்னபோது, “வேண்டாமம்மா” என்று சிவாவும் கருணாவும் மறுப்புத் தெரிவித்தார்கள். அம்மா விடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டித்து ஆளுக்கொரு கவளம்தான் கொடுத்தா. எனக்கே சாப்பிட மனம் வரவில்லை. இருந்தாலும் ஏதோ கொஞ்சம் சாப்பிட்டேன்.

நாங்கள் புறப்பட்டபோது மதியம் ஒரு மணியாகிவிட்டது. "அம்மா, போயிற்று வாறம்."

"பொறுங்க தம்பி!" என்று ஏதோ நினைத்தவளாய் கையில் ஒரு தேங்காயும் கற்பூரப் பைக்கற் ஒன்றும் தந்தா. "போகும்போது கன்னிமாருக்கு தேங்காயையும் அடிச்சு, கற்பூரத்தையும் கொளுத்தி வேண்டிக் கொள்ளுங்கள். எல்லாம் நல்லதாகவே நடக்கும்."

சிவா தேங்காயைக் கையில் வாங்கிக்கொண்டான்.

எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில்தான் கோவில் இருந்தது. சொன்னதை அவன் நிறைவேற்றினான். "தாயே! என்ர கமலாவைக் காப்பாற்று" என்று சத்தமிட்டு வேண்டியபோது நானே விம்மிவிம்மி அழுதுவிட்டேன்.

வெய்யில் அகோரம் தாங்க முடியவில்லை. கார் வேகமாகப் புறப்பட்டது. பாலத்தைக் கடந்து அக்கரைக்கு வந்துவிட்டோம். சற்று வளைவான பாதைகள். "இன்னும் எவ்வளவு தூரம்? அவளுக்கு என்ன நடந்ததோ?" என் மனம் ஒருமுறை நினைத்துப் பார்த்தது. "ஒன்றும் நடக்காது." நானே சமாதானம் சொல்லிக் கொண்டேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்தான் சிவாவுக்குத் திருமணம் நடந்தது. பெண்ணைப் பார்த்ததிலிருந்து திருமணம் முடியும்மட்டும் அவனுக்கு நல்ல ஆலோசகராக இருந்தேன். கமலா எட்டாம் வகுப்பிற்கு மேல் படிக்கவில்லை. ஆனாலும் நல்ல புத்திசாலி. இந்தத் திருமணத்திற்குப் பிறகு சிவா, மனைவியின் புராணத்தைத் தவிர வேறு புராணமும் பாடுவதில்லை. "கமலா! கமலா!" என்று நூறு தரம் சொல்லுவான். அவர்கள் வீட்டில் இருந்து அவன் வேலை செய்யும் கந்தோர் பத்து மைல் தூரம் இருக்கும். அதிகாலை ஐந்து மணிக்கு எழும்பி சமைச்சு சாப்பாடு கட்டி ஏழு மணிக்கு வஸ்சுக்கு அனுப்பி வைப்பாள். மாலை சிலவேளைகளில் சரியான நேரத்திற்கு வஸ் வராது. இரவு ஏழு எட்டு மணியாகிவிடும். அவன் வஸ்ஸில் இறங்க, கமலா தாயையும் கூட்டிக்கொண்டு வந்து வஸ் தரிப்பில் நிற்பாள். எத்தனை தடவைகள் இவன் சொல்லியிருப்பான். "கமலா, நான் என்ன குழந்தைப் பிள்ளையா? நான் வரமாட்டனா? எனிமேல் வரக்கூடாது."

"ஓம்" என்று தலையாட்டுவாள். கையில் அந்த அரிக்கன் லாம்பு வேறு வைத்திருப்பாள் வெளிச்சத்திற்கு. "இரவில் பூச்சி பொட்டுக்கள் நடமாடும். உங்களுக்கென்ன தெரியும்?"

"ஏன் இவளையும் கூட்டிக்கொண்டு..?"

"எத்தனை தடவைகள் சொன்னாலும் இவள் கேட்டால்தானே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தம்பி. மறுப்புச் சொன்னால் கோபம் வந்திடும்." கமலா கொஞ்சம் குள்ளம்தான். மாநிறம். சிவாவுக்கு ஏற்ற ஜோடிப் பொருத்தம். பல தடவைகள் அவன் வீட்டிற்குப் போயிருப்பேன். "அண்ணா அண்ணா" என்று அன்பாகக் கூப்பிடுவாள். பெருவிருந்தே வைப்பாள். தன் கணவனின் நண்பன் என்ற காரணம். எப்போதும் சிரித்த முகம்.

திருமணமாகி ஒரு வருடமாகியும் குழந்தையில்லை. "மச்சான், கமலாவுக்குக் குழந்தை என்றால் கொள்ளை ஆசை." ஒருநாள் கவலையாகச் சொன்னான். "டேய், உடனே எல்லாம் நடந்துவிடாது. சில பேருக்கு உடனேதான். இதற்காக நீ இப்ப கவலைப்படத் தேவையில்லை. நாள் இருக்கு" என்று ஆறுதல் கூறினேன்.

அடுத்த மாதம் சந்தித்தபோது அவன் மகிழ்ச்சியாக இருந்தான். அவள் கர்ப்பமாக இருக்கிறாளாம். "கமலாவை நீ இப்ப பார்க்க வேணும். அந்த அளவிற்கு பூரிப்போடு இருக்கிறாள்."

"சரி ஒருநாள் வருகிறேன். கமலாவுக்கு எனது வாழ்த்துக்களைச் சொல்லிவிடு."

அடுத்த கிழமை நான் அங்கே போயிருந்தேன். "என்ன கமலா, செய்தி அறிந்தேன். சந்தோசம். பாவம் சிவா. குழந்தை பிறந்த பின்பு அவனைக் கவனிக்காமல் விட்டிடாதையுங்கோ!"

"போங்கண்ணா!" என்று வெட்கப்பட்டபோது தாய்மையின் பூரிப்பு அவள் முகத்தில் தெரிந்தது.

இந்தச் சந்தோசமும் அதிக நாள் நீடிக்கவில்லை. மூன்று மாதத்தில் இரத்தப்போக்கு ஏற்பட்டு, அந்தக் குழந்தையையும் அழித்தது. அவள் தன்னைக் கவனிக்காமல் எல்லா வேலையையும் இழுத்துப்போட்டுச் செய்திருக்கிறாள். பெலவீனம்தான் காரணம் என்று வைத்தியர் சொன்னாராம்.

ஆறு மாதத்திற்குள் திரும்பக் கருத்தரித்தால் ஆபத்து என்று வைத்தியர் வேறு எச்சரிக்கை செய்தார். கமலாவை அதன் பிறகு போய்ப் பார்த்தேன். பேயறைந்தவள்போல் இருந்தாள். முன்னைய மகிழ்ச்சி சந்தோசங்கள் எதுவுமே இருக்கவில்லை. எத்தனை பகிடிக் கதை கூறியபோதும் அவள் சிரிக்கவே இல்லை. அவனும் சோர்ந்து போனான். அவர்கள் வாழ்வில் ஏன் இப்படி நடந்தது. எனக்கும் மனதில் வேதனைதான்.

இது நடந்து பத்து மாதத்திற்குமேல்தான் அடுத்த குழந்தை வயிற்றில் வந்தது. முன்பு நடந்ததுமாதிரி இல்லாமல் அவள் அக்குழந்தைக்காக பத்தியங்கள் வேறு. தாயார் எந்த வேலையையும் அவளைக் கொண்டு செய்வதில்லை. அவள் விரும்பிய சாப்பாடுகள் விட்டாமில்க், கோர்லிக்ஸ் என்று சிவா வாங்கிக் குவித்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குச் சத்தியும் இருக்கவில்லை. சாப்பிடக் கூடிய மனமும் இருந்தது. கிளினிக்குக்குப் போய்வந்தாள். டொக்டர், "குழந்தை ஆரோக்கியமாக இருக்கிறது" என்று அந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னபோது கமலாவுக்கும் சிவாவுக்கும் சந்தோசம் தாங்கவில்லை.

இன்று காலையில்தான் இது நடந்தது. அவ்வளவென்றில்லை. கொஞ்சமாக இரத்தம். தாயும் மகளும் குசுகுசுத்தபோது சிவா கேட்டான். அவள் முகம் வாடியிருந்தது. "எதுக்கும் தம்பி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்க. இப்படி சில வேளை நடக்கிறதுதான்."

மாமி எட்டுக் குழந்தைகளைப் பெற்ற அனுபவசாலி. இருந்தாலும் மனதில் சிறு அச்சம்.

கருணாவையும் அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனான் சிவா. போகும்போது அவள் தாயை அணைத்து அழுதாள். தாயார் தலையை வருடிக் கொடுத்தார். "பிள்ளை, அது சிலவேளைகளில் இப்படி வரும். பிறகு இல்லைப் பார்த்தியே."

அதன் பிறகு அவளுக்கு இருக்கவில்லைத்தான். "நானும் வாறதோ தம்பி."

"வேண்டாம் மாமி. நீங்கள் நில்லுங்கள். நான் கருணாவை கூட்டிக்கொண்டு போயிற்று வாறன்."

வைத்தியசாலை. அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து பத்து மைல்களுக்கு மேல் இருக்கும். மாவட்ட வைத்தியசாலை இதுதான். கமலா இடையில் வரும்போது சோர்ந்து போயிருந்தாள். கை கால் எல்லாம் நடுக்கம். "குளிருது" என்று சொன்னாள். அவளைத் தொட்டுப் பார்த்தபோது சிவா அதிர்ச்சியடைந்தான். உடம் பெல்லாம் நெருப்பாய் கொதித்தது. "குளிருது, குளிருது" என்று கத்தினாள். அவள் உதடுகள்கூடத் துடித்தன.

வைத்தியசாலைக்கு இன்னும் பாதித் தூரம் இருந்தபோதுதான் இது நடந்தது. காரின் பின் சீற்றில் அவன் மடிமீது தலைவைத்துப் படுத்திருந்தாள். உடலெல்லாம் நடுங்கிக் கொண்டேயிருந்தது. கண் திறந்து அடிக்கடி, அவள் அவனைப் பார்த்து அழுதாள். ஒரு குழந்தையைப்போல் அவனும்தான். "கருணா, கொஞ்சம் கெதியாகப் போ."

வைத்தியசாலை வந்தவுடன் சிவாவே அவளைத் தூக்கிக்கொண்டு வாட்டுக்குள் ஓடினான். செல்லம் மிஸ்ஸிதான் அங்கே நின்றா. அவசர மாக தெர்மா மீட்டர் வைத்துப் பார்த்தபோது அவவுக்கு அதிர்ச்சி யாக இருந்தது. அளவுக்கு மேல் காய்ச்சல். கட்டிலில்போட்டு அந்த மொத்தப் போர்வையால் போர்த்தியும் அவளுக்கு நடுக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கவில்லை. சிவா பக்கத்தில் நின்றான். நானும் அன்று தற்செயலாக வைத்தியசாலைக்கு வந்திருந்தேன். கருணா மூலம் செய்தி அறிந்து சிவாவையும் கமலாவையும் பார்த்தேன். அவளுக்கு ஆறுதல் கூறியபோது, அவள் கேட்டதாகத் தெரியவில்லை. "அம்மாவுக்குச் சொல்லிவிடுங்கோ!" என்று மாத்திரம் சொன்னாள். அதன் பிறகு டொக்டர் வந்து பார்த்து மருந்து கொடுத்தார்.

எங்கள் கார் விரைவாகப் போய்க் கொண்டிருந்தது. கருணாதான் கதையைத் துவங்கினான். "ஆஸ்பத்திரியில்தான் ஏதோ மாறி மருந்தைக் குடுத்துப் போட்டாங்கள்."

"சீ... அப்படியொன்றும் நடந்திருக்காது." "வாட்டிலிருந்த சனங்கள் அப்படித்தானே கதைக்கிதுகள்."

"அவர்களுக்கு என்னவென்று தெரியும். எங்கடை சனங்களின்ர கதையைக் கேட்டு ஒன்றும் முடிவெடுக்கக் கூடாது."

அதற்குப் பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை. சிவா பக்கவாட்டில் வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சிந்தனை எல்லாம் அவளைப்பற்றியதாகவே இருக்கும். அவன் மனம்படும் வேதனையை அவன்தான் அறிவான். வயல் வெளியில் யாரும் இல்லை. அருவி வெட்டி சில காணிகளில் அடுக்கியிருந்தார்கள். சில இடங்களில் உப்பட்டிகள். மதியம் வேலையை முடித்து இளைப்பாறி மரங்களின் நிழலில் படுத்திருந்தவடகளையும் பார்க்கக் கூடியதாக இருந்தது.

திடீரென்று கடகடவென்று சத்தம். கார் அங்கும் இங்கும் உலாஞ்சியது. பின் சில்லு காத்துப் போய்விட்டது. காரை நிறுத்தி இறங்கிப் பார்த்த கருணா அதை உறுதிப்படுத்திச் சொன்னான். "எல்லாம் சனியன் பிடிச்சமாதிரி."

இறங்கி ரயரை மாற்றுவதற்கு நானும் உதவி செய்தேன்.

"என்ன மச்சான் இப்படியெல்லாம் நடக்கிது."

"சிவா, இவையெல்லாம் தற்செயலாக நடப்பவை. மனதைக் கைவிட்டு விடாதே."

நாங்கள் ரயர் மாற்றிக்கொண்டிருந்தவேளையில் எங்கள் அருகில் அந்தக் கார் நின்றது. "மச்சான், மாமியாட்கள்தான்."

மாமி அழுதுவடித்த முகத்துடன் இறங்கி சிவாவைப் பார்த்து விம்ம ஆரம்பித்து விட்டாள். அழுகிறதால ஒரு பிரச்சனையும் தீரப் போவதில்லை. அவவுடன் மூத்த மகள் அருணாவும்தான் வந்திருந்தாள். "நீங்கள் புறப்படுங்கோ. நாங்கள் ரயரை மாற்றிவிட்டு பின்பு வருகிறோம்." நான் இதைச் சொல்ல அதற்கு ஆமோதித்தவர் களாய் திரும்பவும் அவர்கள் காரில் ஏறிக் கொண்டார்கள். பத்து மைலுக்குள் எப்படியும் அவர்களைப் பிடித்துவிடுவோம். நாங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாகச் செயல்பட்டோம்.

எங்கள் கார் புறப்பட்டு ஒரு மணித்தியாலம் இருக்கும். அந்தச் சந்தி. "கருணா, காரைக் கொஞ்சம் நிற்பாட்டு." வலது பக்கத்தில் அந்தத் தேனீர்க் கடை இருந்தது. அந்தப் பக்கத்தில் அம்புலன்ஸ் வண்டிகள் போனால் அவர்களுக்குத் தெரியாமல் போக வாய்ப்பிருக் காது. யாரோ அவசர நோயாளிகளை ஏற்றிச் செல்லும் வாகனம். எப்படியும் கவனிப்பார்கள். கல்லாவில் இருந்த முதலாளியைக் கேட்டேன். "அண்ணே சற்று நேரத்துக்கு முதல் அம்புலன்ஸ் ஒன்று போயிருக்கும்."

"எந்தப் பக்கத்தால போனது?" அவரும் நிதானித்து விளக்கம் சொன்னார். "இடது பக்கமாகத்தான் திரும்பிப் போகிறது. அநேக மாக அவர்கள் இப்ப வைத்தியசாலைக்குப் போயிருப்பார்கள். அம்புலன்ஸில் கொண்டு செல்லும் நோயாளிகள் கொஞ்சம் கஸ்ரமான நிலமையென்றால் அதிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள அந்த வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வது வழக்கம்."

எனக்கு மனம் படபடத்தது. கடையில் இருந்தவர்கள் என்னைப் பரிதாபத்துடன் பார்ப்பதுபோல் தெரிந்தது. சிவாவை எப்படித் தேற்றுவது என்று தெரியவில்லை.

"கருணா, காரை இடது பக்கமாகத் திருப்பு" என்றேன். "ஏன் மச்சான்?" என்று சிவா கலங்கிய குரலில் கேட்டான்.

"எதெற்கும் பார்த்துவிட்டுப் போவம்" என்று சமாளித்துக் கொண்டேன். கருணாவுக்கு நிலமை விளங்கியிருக்க வேண்டும். அவன் கண்களில் இருந்து நீர் வழிவதை நான் கவனித்தேன்.

எல்லாம் முடிஞ்சுபோச்சுபோல. என்ன மனித வாழ்க்கை! நேற்றைய தினம் எவ்வளவு சந்தோசமாக இருந்திருப்பார்கள். இன்று, காலத்தின் கோலம். ஏன் இப்படி நான் நினைக்கிறேன்? சீ, வேண்டாம். நல்லதாக நினைப்போம்.

பிரதான பாதை. சின்னதாக ஒரு பட்டினம். வாகன நெரிசல் அதிகம். பல பகுதிகளில் இருந்து செல்லும் பஸ்கள் விரைந்து சென்று கொண்டிருந்தன. வெயில் வேறு அகோரமாக. மனதில் ஏற்பட்ட புழுக்கத்துடன் சேர்ந்து வேர்த்துக் கொட்டியது. சிவா விறைத்தபடி வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

வைத்தியசாலையினுள் கார் சென்றதுதான் தாமதம், "ஐயோ! என்ர செல்லம் என்னை விட்டிட்டுப் போயிற்றாளடா கருணா" என்று கமலாவின் தாய் அடித்துப் பிடித்துக்கொண்டு ஓடிவந்தாள். பிறகென்ன? "ஐயோ! கமலா!" என்று அந்த வைத்தியசாலையே அதிருகின்ற அளவிற்கு சிவாவின் அழுகுரல். யாரைத் தேற்றுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரியவில்லை. வைத்தியசாலையில் இருந்த நோயாளர்கள் எல்லோரும் பரிதாபமாகப் பார்த்தார்கள். நான் சிவாவை இறுக அணைத்துக் கொண்டேன். என் கண்களிலும் நீர் வழிந்து கொண்டிருந்தது.

கமலாவின் உடலை யாரும் பார்க்கேலாதாம். சவச்சாடியில் வைத்திருந்தார்கள். போஸ்மாட்டம் செய்துதான் உடலைத் தருவார்களாம். எனக்கு இது முதல் அனுபவம். என்னைத் தவிர மற்றவர்களால் அந்த நிலையில் இயங்கவும் முடியாது. அப்போது தான் அவன் அறிமுகமானான். "என்னுடைய பெயர் மோகன். நான் இந்த வைத்தியசாலையில்தான் வேலை செய்கின்றேன். ஏதாவது உதவி தேவைப்பட்டால் தாராளமாக என்னைக் கேளுங்கள்."

எப்படியும் அவனுக்கு இருபத்திமூன்று இருபத்திநாலு வயதிருக்கும். மெலிந்த உடல். முகத்தில் சாந்தம். அவன் எனக்கு இதைச் சொன்னபோதே எல்லா அலுவல்களையும் முடித்துவிடுவேன் என்கின்ற தென்பு ஏற்பட்டது. அவன் கைகள் இரண்டையும் பற்றிப் பிடித்தேன். "நன்றி தம்பி, இப்ப நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"அண்ணை, உடலைப் போஸ்மோட்டம் செய்யாமல் தர மாட்டார்கள். இது வைத்தியசாலைச் சட்டம். எதற்கும் நீங்கள் டி.எம்.ஓ. உடன் கதைச்சுப் பாருங்கள். அவர் நினைத்தால் தரலாம்."

கமலாவின் அம்மா, கருணா, சிவா, அருணா எல்லோரும் தலையில் அடித்துக் குளறிக் கொண்டிருந்தார்கள். யாரிடம் எதைக் கேட்பதென்று தெரியவில்லை. பக்கத்தில்தான் பிரதான வைத்திய அதிகாரியின் விடுதி இருந்தது. சற்று முன்தான் உடலைப் பொறுப் பேற்றுவிட்டு விடுதிக்குப் போயிருந்தாராம். நேரம் மூன்று மணியைக் கடந்திருந்தது. மோகனை அழைத்துக்கொண்டு அவர் விடுதிக்குப் போனேன். கதவை மெதுவாகத் தட்டினேன். அவர்தான் கதவைத் திறந்தார். நடுத்தர வயது. அமைதியான புன்முறுவல் பூத்தமுகம். பார்த்தால் நல்ல மனிதர் போல்பட்டது.

நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். மேற்கொண்டு நாங்கள் என்ன செய்யலாம் என அவர்மூலம் கேட்டுப் பெறுவதில் ஆர்வமாக இருந்தது. "சேர்! என்ன செய்யலாம்?" என்று கேட்டேன்.

"சரி உள்ளே வாருங்கள். உட்காருங்கள்" என்று அன்போடு அழைத்தார்.

நல்ல மனிதர் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். அவர் அமைதியாகவே பேசினார். "தம்பி, உடலை வெட்டி பரிசோதனை செய்யாமல் நாங்கள் தரமுடியாது. இது வைத்தியசாலைச் சட்டம். காரணம் தம்பி, அந்த நோயாளியின் இஸ்ரறி றிப்போட் அனுப்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த, வைத்தியசாலையால் எங்களுக்குத் தரப்படவில்லை. அவ எப்படிக் காலமானா என்ற விடயம் எங்களுக்குத் தெரியாது. எங்கள் வைத்தியசாலையில் வைத்திருந்து இருபத்திநான்கு மணித்தியாலத் திற்குப் பிறகு இறந்திருந்தால் நீங்கள் உடன் எடுத்துச் செல்ல அனுமதி உண்டு."

"அம்புலன்சில் வந்தவர்கள் விபரம் தரவில்லையா?" என்று கேட்டேன்.

"அவர்களிடம் இல்லை. பெயர் விலாசம் மட்டுமே எழுதியிருந்தார்கள். அந்த நோயாளிக்கு என்ன வருத்தம் என்று எழுதப்படவில்லை."

கமலாவின் உடல் நிலைபற்றி அவரிடம் சொன்னேன்.

"நீங்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை. எங்களுக்கு சட்டம் ஒன்று உண்டு. இது நான்மட்டும் என்றால்கூடப் பரவாயில்லை. கிராமசேவகர், மரணவிசாரணை அதிகாரி (கொர்ணல்), பொலிஸ் எல்லோரும் சேர்ந்தே முடிவெடுக்க வேண்டும்."

அவர் சொன்னது சரிபோல்தான் எனக்குப்பட்டது. எதிர்த்துக் கதைக்க முடியவில்லை.

"நீங்கள், உங்கள் செல்வாக்கைப் பிரயோகித்து தரமுடியாதோ?" என்று கேட்டேன். பத்து மணிக்கு முதல் நாங்கள் போய்ச் சேர்ந்திட வேண்டும். அந்த வேளையில் ஊரடங்குச் சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தியிருந்தது. அதையும் அவரிடம் சொன்னேன்.

"இதில் எனது செல்வாக்கு எதுவும் இல்லை. அப்படியென்றால் உங்கள் வைத்தியசாலையில் இருந்து நோயாளியின் இஸ்ரறி றிப்போட்டை எடுத்துத் தாருங்கள். எந்தப் பிரச்சனையும் இல்லாமல் தருகிறேன்."

"சரி, பார்ப்போம்" என்று அவரிடம் விடைபெற்றுக் கொண்டோம்.

"எங்கே ரெலிபோன் எடுக்கலாம்?" என்று மோகனைக் கேட்டபோது, "அண்ணை வாருங்கள்" என்று பக்கத்திலிருந்த தபால் நிலையத்திற்கு அழைத்துப் போனான். ரெலிபோன் எடுத்தபோது டி.எம்.ஓ.தான் இருந்தார். என் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவருக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் சார்ந்திருந்த பொது சமூக அமைப்பின் மூலம் வைத்தியசாலைக்கு வேண்டிய சிறு உதவிகளைச் செய்திருந்தோம். அந்தவகையில் அவருக்கு என்மீது நல்ல அபிப்பிராயம் இருந்தது. "நீர் இதுக்குள்ள போய் எங்கே மாட்டுப்பட்டீர்?" என்று கேட்டார். இறந்தது என் நண்பனின் மனைவி என்பதையும், உடலைப் பெறுவதில் உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்தையும் அவரிடம் சொல்லி விளங்க வைத்தேன். தயவுசெய்து அந்த றிப்போட்டை அனுப்பி வைக்க ஆவன செய்யுங்கள் என்பதை வற்புறுத்திக் கூறினேன். தான் இந்த வைத்திய அதிகாரியுடன் கதைப்பதாகக் கூறினார். அவர் எப்படியும் கதைப்பார் என்ற நம்பிக்கை.

அவர் இவருடன் கதைத்திருக்க வேண்டும். "தம்பி, எனி றிப்போட் வந்து, இது நடக்கிற காரியமா? நான் அவரை நம்புகிறேன். மற்றவர் களை நம்ப வைப்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது. எனக்கு ஏற்கெனவே இப்படியொரு அனுபவம். அந்த வழக்கு இப்போதும் கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கிறது. கோஷ்டிச் சண்டையில் ஒருவன் வெட்டுப்பட்டு வைத்தியசாலையில் படுத்திருந்தானாம். ஒருநாள் சொந்தக்கார வீட்டிற்குப் போய் குளித்துப்போட்டு வருகிறேன் என்று அனுமதி கேட்டானாம். அவன் போய் எதிராளியை வெட்டிக் கொன்றுபோட்டு வைத்தியசாலையில் வந்து படுத்து விட்டான். அவன் வெட்டியதைக் கண்ட சாட்சிகள் வேறு. வைத்திய சாலையில் படுத்திருந்தவன் வெளியில் எப்படிப் போனான் என்று பொலிஸ் வழக்கு வைத்திருக்கிறதாம் டொக்டருக்கு எதிராக. அவர் இந்தக் கதையையும் சொன்னார். வேறு என்ன வழி இதற்கு என்று கேட்டேன்.

"நீங்கள் மற்றவர்களைச் சமாளிக்க முடியுமென்றால் எனக்குப் பிரச்சனையில்லை" என்றார். எனக்கே என்னைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "மோகன், மற்றவர்களைச் சமாளிக்கிறதென்றால் எப்படி? எனக்கு விளங்கவில்லை."

"வேறு என்ன அண்ணை? எல்லாமே பிணம் தின்னும் கழுககள் போல்தான்" என்றான்.

"கொஞ்சம் பணத்தைவிட்டு எறிய வேண்டியதுதான். முதலில் விதானையைச் சந்திப்பம்." கிராம உத்தியோகத்தர். அவருடைய வீடு அதிக தூரத்தில் இல்லை.

மோகன் எனக்கு வழிகாட்டியாக. "காரில் போவம் தம்பி."

"அதுவும் நல்லதுதான். பக்கத்தில் மரண விசாரணை அதிகாரி பொலிஸ் எல்லாரையும் சந்திக்கலாம்." கருணா! தம்பி அழுது கொண்டிருந்து. ஒரு காரியமும் நடந்துவிடாது. நடந்த விசயத்தைச் சுருக்கமாகச் சொல்லி சந்திக்க வேண்டியவர்களின் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

முதலில் விதானையார் வீட்டிற்குப் போனோம். வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். அக்கறையுடன் கேட்பதுபோல் எல்லாவற்றையும் கேட்டார். "எனக்கு ஒன்றும் பிரச்சனையில்லை தம்பி. முதலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசிட்டப் போங்கள். அவனும் கொர்ணலும் ஓமென்றால் சரி."

"பொலிசை சற்று முன்தான் சந்தித்தேன். அதற்குப் பொறுப்பாய் இருக்கிறவன் பின்னேரம் ஐந்து மணி பஸ்சுக்கு ஊருக்குப் போகப் போறான். இரண்டு நாளைக்கு வரமாட்டான்."

"ஏதாவது கையுக்குள்ள வைச்சுக் கேட்டுப் பாருங்கள்." வழியையும் அவரே சொல்லித் தந்தார். இவரும், "இதை எதிர்பார்க்கிறேன்" என்பதை எனக்கு கையில் வைப்பதன் மூலம் தெரிவித்துக் கொண்டார்.

எனக்கு எங்க ஊர் விதானையாரின் நினைவு ஒருமுறை வந்து போனது. நாற்பத்தைந்து வயதிருக்கும். அவர் சைக்கிளில் வருவார். அவரைவிட வயதில் மூத்தவர்கள் எல்லோரும் "ஐயா" என்று கூப்பிட வேண்டும். அவர் அவர்களை "டேய்" என்றுதான் கூப்பிடுவார். அந்த வயது முதிர்ந்தவர்கள் அவரின் சைக்கிளை உருட்டிக்கொண்டு வருவார்கள். எனக்கு இந்தக் காட்சிகளைப் பார்க்கும்போது பத்திக்கொண்டு வரும். இவர்கள் எல்லோரும் உத்தியோகத்தின் தன்மையை உணராதவர்கள். கிராம மக்களின் சேவகர்களாகத்தான் இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. "உவங்களுக்கெல்லாம் இருட்டடி அடிக்கவேணும்" என்று நானும் நண்பர் சிலரும் பேசிக்கொண்டோம்.

வந்த காரியம் எப்படியாவது முடியட்டும். அவரிடம் இருந்து விடைபெற்று அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரைச் சந்தித்தோம்.

"எனக்கு இண்டைக்கு நேரம் வராது. நான் ஊருக்குப் போக வேணும்."

மோகன் மெதுவாக எனக்குக் கண்ணைக் காட்டினான். கருணாவுக்கு விளங்கி விட்டது. நூறு ரூபாவை எடுத்துக் கைகளில் வைத்தான். எந்தக் கதையும் இல்லை.

"என்னை நேரத்தோடை விட்டிடவேணும். எப்படியும் ஏழு மணி பஸ்சுக்காவது ஊருக்குப் போகவேணும்."

அவனுக்கும் அந்த உத்தியோகத்திற்கும் சம்பந்தமில்லை. யாரோ ஒரு எம்பியின் சிபார்சுபோல. ஊதிவிட்டால் விழுந்துவிடுவான். அப்படியொரு தோற்றம்.

"உங்களைப் பார்க்கப் பாவமாக இருக்கு. மற்றவர்களைச் சமாளிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு."

குறித்த நேரத்தில் வைத்தியசாலைக்கு வருவதாகக் கூறினான். எனக்கு உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தது.

இனி, மரண விசாரணை அதிகாரி. பொலிஸ் நிலையத்திலிருந்து கொஞ்சத் தூரம்தான் அந்த அதிகாரியின் வீடு. குச்சு ஒழுங்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் ஓட்டிச் செல்வது கொஞ்சம் சிரமமாக இருந்தது. பாதைகள் சீராக இருக்கவில்லை. ஒழுங்கைகளில் குழந்தைகள் விளையாட்டு மைதானத் தில் நின்று விளையாடுவதுபோல். எங்கள் காரைக் கண்டவுடன் புதினம் பார்க்க வேலிகளில் பெண்கள். ஓவென்று நாய்கள் குரைத்தபடி... "இதுக்குமேலே கார் போகாது. காரை நிற்பாட்டி விட்டு நடந்து போவம்."

"கருணா, நீ காருக்குள்ள இரு. நானும் மோகனும் போய்விட்டு வருகிறோம்."

போகும்போதே மோகன் அவரைப்பற்றிச் சொன்னான். "உந்தாள் நல்ல தண்ணிச்சாமியண்ணை. உதவாத மனுசன். சந்தித்த ஆட்களுக் குள்ள உந்தாளுக்கு உங்களால் குடுத்துக் கட்டுப்படியாகாது."

அவரின் வீட்டு வாசலுடன் அந்த ஒழுங்கை முடிந்திருந்தது. நேரே வீடு. "கடிநாய் கவனம்" என்று வாசலில் எழுதிப்போட்டிருந்தது. அது வேறை மனதுக்குள் பயம். எதற்கும் வெளியில் நின்று கூப்பிடுவம்.

"ஐயா! ஐயா!" என்று மோகன்தான் கூப்பிட்டான்.

ஒரு சத்தமும் இல்லை. பின்பக்க வளவில் கட்டியிருந்த நாய்மட்டும் எங்களுக்காகக் குரல் கொடுத்தது. சத்தத்தைக் கேட்டதும், அல்சேசியனாகத்தான் இருக்கும் என்று முடிவெடுத்துக் கொண்டேன். பாய்ஞ்சால் நாங்கள் அவ்வளவுதான்.

பல தடவைகள் கூப்பிட்ட பின்பு வெளிக்கதவு திறந்தது. திறந்தது ஒரு சிறுமிதான். பார்த்தவுடன் தெரிந்தது, வீட்டு வேலைக்காரப் பிள்ளையென்று. காதுகளில் ஒன்றும் இல்லை. அவள் அணிந்திருந்த உடுப்பு, அவள் தோற்றம், எல்லாமே!

"ஐயா இருக்கிறாரோ?" என்று மோகன்தான் கேட்டான்.

"அவர்நித்திரை."

மோகன் இரண்டு, மூன்று தடவைகள் வந்திருக்கிறான். அவன்தான் இதைச் சொன்னான். வீட்டின் முன் முற்றம் அவ்வளவு துப்புரவாக இருக்கவில்லை. அங்கங்கு வெற்றிலை பாக்குத் துப்பல். கோழிகள் தன்ரபாட்டில் அங்கங்கு இருந்து வைத்திருக்கின்றன. வீடு கல்லால் கட்டப்பட்டிருந்தது. வெள்ளை அடித்திருக்கவில்லை. வெளி விறாந்தையில் ஆடு ஒன்றைக் கட்டியிருந்தார். கொழுத்த கிடாய் ஆடு. மேலே அதற்காக ஒரு குழைக்கட்டு. எங்களை ஒருமுறை திரும்பிப் பார்த்தது. வெருளவில்லை. அந்த விறாந்தை ஆட்டுத்தொழுவம் மாதிரி மணத்தது. தினம் ஆட்கள் வந்து பழக்கம்போல். பக்கத்தில் குசுனி.

"தங்கச்சி, நாய்...." "பயப்படாதையுங்கோ. அது பின்னுக்குக் கட்டியிருக்கு." கதையில் தெரிந்தது இந்தப் பிள்ளை மலைநாட்டுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் என்று. நம்மவரின் ஆதிக்கம் மலைநாட்டுத் தமிழர்மீது அப்போது கொடிகட்டிப் பறந்திருக்கிறது. அவர்களின் ஏழ்மை, சுதந்திரமற்ற வாழ்க்கை, நாடற்ற பிரஜைகள் என்று பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுகின்ற நிலை. குறைந்த சம்பளத்திற்கு வேலை வாய்ப்பை வழங்கிக் கொண்டிருந்தார்கள் நம்மவர்கள். இந்த ஊரின் சுற்று வட்டாரங்களில் மலையகத் தமிழர்களின் குடியேற்றங்கள் அமைந்திருந்தன. அவள் அணிந்திருந்த உடுப்பு, அங்கங்கு கிழிசல். அதை மறைப்பதற்கு பொருத்தமற்ற ஒட்டுத்துணிகள் மூலம் தைத்திருந்தார்கள். தலையை நன்றாக வாரி இழுக்கவில்லை. அவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

"தங்கச்சி, அவரை எழுப்பிவிட முடியுமோ?" என்று நான்தான் கேட்டேன். அவள் சற்றுத் தயங்கினாள். அவள் தயக்கத்தில் நியாயம் இருந்தது. இந்தப் பெரிய மனிதர்கள் இப்படித்தான். மதுமயக்கத்தில் படுத்துவிடுவார்கள். நித்திரைக்குப் பங்கம் ஏற்பட்டால் கொதித் தெழுவார்கள். அந்தச் சிறுமிக்கு நிறைய அனுபவம் இருந்திருக்கும்.

"உள்ள வந்து இருங்கோ."

அந்தக் கோழி எச்சங்களைத் தாண்டி ஒருவாறு உள்ளுக்குள் புகுந்தோம். உள்ளுக்குள் இருந்து அந்தக் குறட்டைச் சத்தம். இவன் பாவி இப்போதைக்கு எழும்பான்போல. வீட்டில் வேறு யாரும் இருக்கவில்லை. விறாந்தையின் மற்றப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட நெல்லு மூட்டைகள் வரிசையாக அடுக்கியிருந்தார"கள். கொஞ்சம் பசையாளிதான். அந்தப் பிள்ளை ஒரு தண்ணீர் செம்புடன் உள்ளுக்குள் போவதை நான் பார்த்தேன். பாவம், எங்களால் அந்தப் பிள்ளைக்கு அடிதான் விழப்போகிறது.

குறட்டைச் சத்தம் நின்றது. பிள்ளை எழுப்பியிருக்க வேண்டும். "உன்னை அல்லே சொன்னனான். நித்திரை கொள்ளேக்குள்ள எழுப்பவேண்டாம் என்று!" மனுசன் கொதித்துச் சத்தம்போட்டது எங்களுக்கும் கேட்டது.

"உங்களைத் தேடியாரோ வந்திருக்கிறார்கள். முன்னுக்கு இருக்கிறார்கள்" என்று அவள் சொன்னாள்.

"ஆர்...?"

அவள் வெளியில் வந்துவிட்டாள். மனுசன் எப்படியும் வரும். சுவரில் "மக்கள் தொண்டன் மாசிலாமணி" என்று அவரைப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவித்துப் பொன்னாடை போர்த்திய அந்தப் படம் தொங்கவிடப்பட்டிருந்தது. அந்தக் கௌரவத்தை ஏற்று சிரித்த தோற்றம்படத்தில்தெரிந்தது. மோகன் சொன்னதை வைத்துப் பார்த்தபோது எனக்கு எரிச்சல் எடுத்தது. என்ன மனுசர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தின் தரக் குறைவுகளிடம் இந்தப் பட்டங்கள் போய் படுகின்றபாடு. உண்மையான மக்கள் தொண்டர்களைக்கூட மதிக்க முடியாமல் போய்விடுகிறதே. மனதுக்குள் சிறு வருத்தம். இவன் ஒரு மக்கள் தொண்டன்? இவனுக்குப் பொன்னாடை போர்த்துபவன் இவனைவிட உயர்ந்தவனே! மகா மக்கள் தொண்டன் என்றுகூட இருக்கலாம். அந்தப் படத்தை மோகனுக்குக் காட்டியபோது அவனுக்கும் சிரிப்பு வந்தது.

பத்து நிமிடத்திற்கு மேல் இருக்கும். ஒரு செருமல் சத்தம். வாறார் போல. அப்பா! வெளியில் வந்தான் பாவி. நான் மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். மோகனை அவருக்கு ஏற்கெனவே தெரியும்.

"ஆர் மோகனே என்ன விசயம்?" உடம்பெல்லாம் வியர்த்து வழிந்தது. கையில் அந்த தண்ணீர்ச் செம்பு. விறாந்தைக்கு வந்தவாறே வாயுக்குள் நீரைவிட்டு கொப்பளித்து அங்கிருந்தே முற்றத்தில் துப்பினார். வெற்றிலைச்சாயம் சிகப்பாக வெளியில் வந்து சிதறியது. எங்களுக்குப் பக்கவாட்டில் அந்த வாங்கு. அதற்கு மேல் கால் இரண்டையும் மடித்து உட்கார்ந்தார், அந்த மக்கள் தொண்டன். பக்கத்தில் வெற்றிலைத் தட்டம். வாயில் மடித்துப் போட்டவாறே, நடந்த விசயத்தை விளக்கியபோது, "பிரச்சனை கொஞ்சம் கஸ்ரம் தான். மற்றவர்களைப் பார்த்தியளோ? எல்லாரையும் சமாளித்தால் நான் மறுக்கப்போறனே?" "கொஞ்சம் கெதிப்பண்ணுங்கோ" என்று சொல்லவும் தயக்கமாக இருந்தது. ஆற அமர்ந்து வெற்றிலைச் சாற்றை உள் விழுங்கிக்கொண்டிருந்தார்.

"என்ன வெயில்! கார் கொண்டு வந்தனீங்களே?"

"கார் ஒழுங்கையில் நிக்குது. கொஞ்சம் கெதிப்பண்ணினால் நல்லது. நாங்கள் ஊருக்குப் போய்ச் சேரவேணும். அவர்களும் அங்கு வந்திருப்பார்கள். நீங்கள் வந்தால் சரி..." "இருங்கோ வாறன்." கிணற்றடி, அறையென்று மாறி மாறிதிரிந்தான்பாவி. வெளியில் வந்தாச்சு. மக்கள் தொண்டனுக்கு உரிய அந்தத்தன்மை உடையில் தெரிந்தது,அந்தப் படத்தில் இருந்ததைப்போல்.

"வள்ளி!"

"என்னையா!" அவள் பயந்து, நடுங்கி பக்கத்தில் வந்து நின்றாள்.

"அம்மாக்கள் வந்தால் ஆஸ்பத்திரிமட்டும் போய்வாறனெண்டு சொல்லிவிடு."

அவள் தலையசைத்தாள்.

கருணா, காருக்குள் இருந்து தங்கையை நினைத்து நினைத்து அழுது கொண்டிருந்திருக்கிறான். எங்களைக் கண்டதும் கண்களைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்ததைக் கண்டேன். அவர்தான் முன்சீற்றில் உட்காரந் திருந்தார். கார் ஒழுங்கைகளைத் தாண்டி பிரதான பாதைக்கு வந்தது. வைத்தியசாலைக்குப் போகாமல் வலது பக்கம் போகும்படி கையைக் காட்டினார் சமாதான நீதவான். ஏன் என்று நாங்கள் ஒருவரும் கேட்கவில்லை. மோகன் என்னைப் பார்த்தான். அவனுக்கு முன் அனுபவங்கள் அதிகம்.

"தம்பி, வலது பக்கம் வாற கடையடியில ஒருக்கால் நிற்பாட்டும்."

அது ஒரு குடிவகை விற்கிற கடை.

காருக்குள் இருந்து கொண்டே, "தம்பி, ஐந்து போத்தல் பியர் கொடுத்துவிடும்."

பியர் வந்தது.

"காசு கீசு வைச்சிருக்கிறியளோ" என்று என்னைப் பார்த்தார். எனக்குச் சுர் என்றது. மோகன் தனது கையால் எனது தொடையை அழுத்தினான் பேசாமல் இருங்கள் என்றதுபோல். எவ்வளவு என்று கேட்டு கருணாதான் காசு கொடுத்தான்.

என்ன மனுசன் இவன்? மற்றவர்களின் சோகத்தில் இவர்கள் மட்டும் சுகம் தேடுகிறார்களே! பின்பக்கத்தில் நேராக நான்தான் இருந்தேன். அப்படியே வலது காலை உயர்த்தி உதைந்து விடுவோமா என்று யோசித்தேன். சிவாவின் முகம். அவனின் இந்த வேதனை களுக்கு ஒரு முடிவு கிடைக்கட்டும். என்னை நானே அடக்கிக் கொண்டேன். கார் வைத்தியசாலையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

மற்றவர்கள் எல்லோரும் இந்த மனுசனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவசரமாக இறங்கி சிவாவின் அருகில் சென்றேன். அவன் மனதுக்குள் அழுகிறான். கண்கள் மாத்திரம் கண்ணீரைச் சொரிந்தது. கமலாவின் தாய் தலையில் கையை வைத்தபடி வெறித்துப்போய் இருந்தா. கருணா தாயின் பக்கத்தில் அசைவற்று நின்றான்.

"அண்ணே, விதானைக்கும் பார்த்து ஏதாவது கொடுங்கோ!"

எனக்கு இப்படியான நடவடிக்கைகளில் உடன்பாடு இருக்க வில்லை. கருணாதான் ஏதோ கையில் வைத்தான். எல்லோரும் வைத்திய அதிகாரியின் அறைக்குள் புகுந்தார்கள். இனிச் சவப் பெட்டி, துணியொன்று வாங்கவேணும். ஆறு மணிக்குமேல் கடை பூட்டிவிடுவார்கள். நான் கருணாவையும் மோகனையும் அழைத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப்போய் எல்லாவற்றையும் ஓடர் கொடுத்துவிட்டு வந்தோம். அவர்கள், "ஆயத்தப்படுத்தி வைக்கிறோம். பிறகு வாருங்கள்" என்றனர். விலையைக் கேட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்வான்ஸ் மாத்திரம் கொடுத்திருந்தோம். எங்கள் நிலையை அறிந்து மனவருத்தப்பட்டபோது மனிதர்களும் இருக்கிறார்கள் என்று மனதில் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

அங்கு வந்தபோது மேலும் இடி. ஒருவர்மீது ஒருவர் சாட்டிக்கொண்டு, மாறிப் பேசிக்கொண்டு. "போஸ்மோட்டமே முடிவு. வேறு வழியில்லை. இல்லையேல் கிஸ்ரறி றிப்போட் வந்த பின்பு நாளைக்குக் கொண்டு போகலாம்" என்று கூறினார்கள். இதற்காகவா இவ்வளவு செலவழித்தோம்? மோகன் என்னைப் பாவமாகப் பார்த்தான். அவன்மட்டும் ஒரு மனிதனாக என் மனதில் தோற்றமளித்தான். எவ்வளவு நேரம் என்னுடன் திரிந்தான். சிவாவை அணுகி நடந்தவற்றைச் சொன்னேன்.

"மச்சான், இதுதான் நிலமை."

"ஐயோ, என்ர செல்லத்தை வெட்டிச் சிதைக்க வேண்டாம். நான் இதற்குச் சம்மதமில்லை."

ஆவேசமாகக் கத்தினான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மெதுவாக அவன் தலையை வருடிக்கொடுத்தேன்.

"யோசிச்சுப் பார். இரவு பத்து மணிக்கு முதல் நாங்கள் வீட்டிற்குப் போகவேணும். நாளைவரை நிற்கமுடியாது. செத்தப் பிறகு வெட்டியென்ன? வெட்டாமல் விட்டால் என்ன? நாளைக்கு இதை எரிக்கத்தானே போகிறோம். வீட்டில் வைத்திருக்க முடியுமா? நான் என்னால் முடிந்தவரை முயற்சி செய்திருக்கிறன். முடியாது சிவா. அவர்கள் கடமையை அவர்கள் செய்ய அனுமதிக்கவேணும்."

"தம்பி, யோசிக்க நேரமில்லை. பறையர் வேறு போகப் போறாங்கள். எங்களுக்கும் நெடுக நிற்கேலாது. கெதியாய் முடிவெடுங்கோ."

சிவாவும் வேறு வழியின்றிச் சம்மதித்தான். நான்தான் டி.எம்.ஓ.விடம் சம்மதம் தெரிவித்தேன். பொழுதுபடுவதற்கான அறிகுறிகள். மேற்குத் திசையில் சூரியன் சிகப்பாகத் தெரிந்தது. அவசரமான வேலைகள்.

மோகன் வந்து சொன்னான். "அவங்களுக்குள்ளையும் பிரச்சனையாம்."

"யார்?" என்று கேட்டேன்.

"பச்சையப்பன் கோஷ்டிதான்."

பறையர் என்று சொல்வதை அவன் விரும்பவில்லை. நல்ல குணம். அவங்களுக்குள்ளேயும் ஒரு சங்கம் இருக்காம். ஒருத்தருக்கொருத்தர் தெரியாமல் இந்த வேலையில் ஈடுபடக் கூடாதாம். கருணா தானாகப் போய் விசயத்தை முடித்துக் கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் கடைத் தெருவுக்குப் போய் ஓடர் கொடுத்த சவப் பெட்டி, வெள்ளைத் துணி எல்லாவற்றையும் வாங்கிவந்தோம். எங் களுக்கு அவசரம் என்றதும் எல்லா விலைகளும் இரட்டிப்பாகியது. மனதில் எரிச்சல். வேறுவழி தெரியவில்லை. அனைவரிடமும் விடை சொல்ல மனம் ஒப்பவில்லை. சவப்பெட்டியை மேல் கரியலில் கட்டினோம். எங்கள் கார் புறப்படும்போது இரவு எட்டு மணி. மோகனை ஆரத் தழுவி நன்றி தெரிவித்தேன். இவ்வளவு ஜந்துக்களில் அவன் மட்டுமே மனிதனாக நின்றான்.

கார் புறப்பட்டது. காருக்குள் அழுகைச் சத்தம் அடங்குவதற்குக் கொஞ்ச நேரம் பிடித்தது. இன்று காலையில் நடந்தவற்றிலிருந்து, தற்போது வரை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தேன். "ஏதோ பிழைதான் நடந்திருக்கிறது. இல்லையேல் அந்த றிப்போட்டில் தெரிய வருமோ? வராது. அவர்கள் ஒரே வர்க்கம். அவங்கள் எல்லோரும் அரசாங்கத்தில் ஒரே திணைக்களத்தில் வேலை செய்பவர்கள். ரெலிபோன் தொடர்புகள் மாறிப் மாறிப்பேசப பட்டிருக்கும் அதிக ரத்தப்பெருக்கேற்பட்டு மரணம். இது மாத்திரம்தான் இருக்கும்.

மனிதர்களின் அவசரத்தை எப்படிப் பயன்படுத்துகிறார்கள். அவசரம் அவசியம் எல்லாம் எங்களுக்கு என்று வரும்போதுதான் அடுத்தவன் விடும் பிழைகளைப் பெரிதாக நினைக்கிறோம். இப்படி அடுத்தவனுக்கு ஏற்படும்போது நாங்களும் அவர்கள் பார்வையில் பிழையாகத் தெரிவோமா? இல்லை, பிழைவிடமாட்டோமா? உளரீதியான சிந்தனைகள். சமுதாயத்திற்கு நாங்கள் செய்யும் கடமைகள் சரிவரவில்லையெனில் அப்பாவி மக்கள் எத்தனைபேர் பாதிப்படைகிறார்கள்.

அந்த வைத்திய அதிகாரி ஏற்கனவே சொன்னார். "போஸ்மோட்டம் செய்தே ஆகவேண்டும்!" அப்போதே அது சரியென்று விட்டிருக்கலாம். எங்கள் காரியம் நாங்கள் நினைத்துக் கொண்டபடி முடியவேண்டும். அவர்கள் நேரடியாக எதுவும் கேட்கவில்லை. நாங்கள் கொடுத்தபோது மறுக்கவும் இல்லை. என்ன நடந்தது எனக்கு? கொடுக்கும்போது நான் ஏன் தடுக்க முயற்சிக்கவில்லை? தங்கையின் இறந்த உடல் சிதையாமல் கொண்டு போகவேண்டும் என அவன் நினைத்தான். அவன் கவலைகள், என்னைத் தடுத்தபோது நானா கொடுக்கிறேன் என்று பேசாமல் இருந்துவிட்டேன். அவர்கள்மீது தப்பேதும் இல்லை என்பதுபோல் படுகின்றது. சுற்றி வளைத்து அவர்கள் எதைத்தான் கேட்டார்கள். கொடுத்தும் என்ன பிரயோசனம். ஒன்றுமே சரிவரவில்லை என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பித் தர முயற்சித்தார்களா? வாங்கியதே லஞ்சம்தான். காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் நமக்கும் அதில் பங்குண்டு போல் எனக்குப் படுகின்றது. "எங்கள் கடமையைச் செய்யவிடுங்கள். நீங்கள் தரும் பணத்தினால் எதுவுமே நடந்துவிடப் போவதில்லை. எங்கள் கடமையைத்தான் நாங்கள் செய்வோம்" என்று அந்த வைத்திய அதிகாரியைத் தவிர யாருமே சொல்லவில்லை. மக்களுக்கென சேவைக்கு அமர்த்தப்பட்ட நல்ல உத்தியோகத்தர் அவர்கள் என்று எனக்குப் படவில்லை. நாங்களும் குற்றவாளிகளே! நிலமையைச் சாதகமாக்கி சொன்ன விலையைவிட இரட்டிப்பாக விற்ற புடவைக் கடைக்காரன், சவப்பெட்டிக்காரன் எல்லோருமே அடுத்தவன் துன்பத்தை அதிஷ்டமாக்கிக் கொள்கிறார்கள்.

"அந்தப் பெடியன் மோகன் நல்லவன்." நான் வாய் திறந்து சொன்னேன். "எங்கள் நிலமையை உணர்ந்தவன். அவன் நல்லவன். அவன்மட்டும் இல்லாவிட்டால் எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்போம்?" "உண்மைதான் அண்ணை." "அவனுக்கென்ன தலை எழுத்தா, எங்களுடன் இத்தனை நேரம் வரும்வரை நிற்பதற்கு?"

"ஓம் கருணா." நான் ஆமோதித்தேன்.

"பாவம் அண்ணே, கடைசியில் என்னிடம் பணம் இருக்கவில்லை. நூறு ரூபாய் கொடுத்தேன். இத்தனை நேரம் உங்களுடன் திரிகிறேன். ஏதோ பார்த்துச் செய்யுங்கள் என்று அவன் தலையைச் சொறிந்தபோது எனக்கு வேதனையாக இருந்தது."

என் மனம் திடீரென்று ஏதோ செய்தது. என் நம்பிக்கைக்குரியவனாக நிறைத்து வைத்திருந்தேன். நடந்த சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அவர்களைவிட இவனே அயோக்கியனாகத் தெரிகிறான். பாவி! அப்பாவிபோல், அதிக இரக்கம் கொள்பவனைப்போல் ஏமாற்றிவிட்டான். அவன் யாருமில்லை. அவர்களின் தரகன் என்பதை தற்போது புரிந்து கொண்டேன். "ஏதோ கொடுத்தால் எங்கள் காரியம் சுலபமாக முடியும்" என்று ஒட்டுமொத்த சமுதாயத்தையே நாறடிக்கிறோம். கமலாவின் உயிரற்ற உடல் எத்தனை நாளைக்குப் பாதுகாப்பாக இருக்கும். நாளை, இல்லை இன்னும் ஒருநாள்! அடுத்த நாள் வைத்திருக்கேலாது. நாற்றம், எரித்துவிட்டால் அந்த வாடை இந்த மண்ணைவிட்டு மறைந்துவிடும். ஆனால் இன்று பாடைத்தேனே! இந்த நாற்றம் தொடர்ந்து வீசிக்கொண்டே இருக்கும். இதற்கொரு விடிவு வேண்டும். எப்போது..? யாரால்...? அந்த உயிரற்ற உடலையும், உயிருள்ள எங்களையும் சுமந்து அந்தக் கார்மட்டும் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா, புத்திசிகாமணி

இவர் இலங்கையில் வட்டுவாகல் முல்லைத்தீவைச் சேர்ந்தவர். தற்போது நீண்ட காலங்களாக ஜேர்மனியில் வசித்து வருபவர். எனது நீண்ட கால நண்பர். இன்றுவரை இவரை நன்கு அறிந்தவன் என்ற வகையில், வாசகர்களுக்கு இவரை அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறேன். தமிழ் மீதும், தமிழ் இலக்கியத்தின் மீதும் காதல் கொண்டவர். சின்னவயதில் இருந்தே சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்று நிறையவே எழுதி வருபவர். இவர் எழுதிய மூன்று கதைகள் அந்நாளில் இசையும் கதையுமாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி பலரது பாராட்டையும் பெற்றது. நல்ல பேச்சாளன், சமூக சிந்தனையாளன், ஓவியன், கவிஞன், கலைஞன் நடிகன், நாடக இயக்குனர் என்று பலதரப்பட்ட திறமைகள் இவரிடத்தில் உண்டு. எண்பதுகளில் முல்லைத்தீவு வீரகேசரி நிருபராகச் மிகச்சிறப்பாகச் செயல்பட்டு மாவட்ட வளர்ச்சிக்கு உதவியவர். முல்லை மறுமலர்ச்சிக் கழகத்தின் நீண்ட காலம் செயலாளராகக கடமையாற்றியபோது, நண்பர்களுடன் நானும் சேர்ந்து பயணித்தேன். சில வருடங்களுக்கு முன் இவர் எழுதிவெளியிட்ட “சொர்ணம்மா” சிறுகதைத் தொகுப்பு இவருக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தது. கதை மாந்தர்களைத் தெரிவு செய்து அவர்களை எழுத்தில் கொண்டு வரும் திறமை இவருக்குக் கைவந்த கலை. ஊரைப்பற்றிய நினைவுகள் இவர் எழுத்தில் வரும்.“சின்னாச்சிமாமி” இவருக்கு நல்ல பெயரைப்பெற்றுக்கொடுக்கும் என்பதை நம்பலாம்.

அன்போடு நண்பன்
க.கனகசீலன்
ரொறன்ரோ,
கனடா.
22.05.2023

ISBN 978-624-5881-97-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org